Koviloor Digital Library
5-6
KOVILOOR VEDANTA MUTT

திருச்சிற்றம்பலம்

உ

ஒன்பது முதல் பன்னிரண்டு திருமுறைத் திரட்டு

[திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினோராம் திருமுறை, பெரியபுராணம்]

ACC. No. 12522

தொகுப்பு :

கழகப் புலவர் குழு

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
லிமிடெட்,
79, பிரகாசம் சாலை, சென்னை-108,
54, டி. டி. கே. சாலை, சென்னை-18.
1987

Koviloor Digital Library

© The South India Saiva Siddhantha Works Publishing Society, Tinnevelly, Limited.

கிளைகள் :

திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
கும்பகோணம்-1 திருச்சிராப்பள்ளி-2

கழக வெளியீடு : 1711
முதற்பதிப்பு : ஆகஸ்ட் 1980
இரண்டாம் பதிப்பு : பிப்ருவரி 1987

Q23: 417x 6—11
N87

ONPATHU MUTHAL PANNIRANDU
THIRUMURAITH THIRATTU

அச்சிட்டோர் :
அன்னை அஞ்சுகம் அச்சகம், சென்னை—14.

Koviloor Digital Library

பதிப்புரை

பன்னிரு திருமுறைகளுள் முதல் ஏழு திருமுறைகளாகிய தேவாரப் பதிகங்களி னின்றும் திரட்டிய பாடல்களைக் கொண்டு 'மூவர் தேவாரத்திரட்டு' என்னும் நூலையும் திருவாசகம் முழு நூலும் திருக்கோவையாரி னின்று திரட்டிய பாடல்களையும் கொண்டு எட்டாந் திருமுறைத் திரட்டு என்னும் நூலையும் முன்னர் வெளியிட்டுள்ளோம்.

திருவிசைப்பா, திருப்பல்லாண்டு முழு வதும் தொகுத்து ஒன்பதாந் திருமுறையென முன்னர் வெளியிட்டது போலவே இப் பொழுதும் தனி நூலாக வெளியிட்டுள்ள தோடு பன்னிரு திருமுறைத் திரட்டினுள்ளும் சேர்த்து வெளியிட்டுள்ளோம்.

பத்தாந் திருமுறையாகிய திருமந்திரத்தி னின்றும் திரட்டிய பாடல்களைக் கொண்டு, 'திருமந்திரத் திரட்டு' என்னும் நூலையும்

Koviloor Digital Library

பதினொராந் திருமுறை, பெரியபுராணம் என்னும் பன்னிரண்டாந் திருமுறை ஆகியவற்றினின்று திரட்டிய பாடல்களைக் கொண்டு பதினொராந் திருமுறைத் திரட்டு, பெரியபுராணத்திரட்டு என்னும் நூல்களையும் வெளியிடுகின்றோம்.

(1) திருக்குறள் தெளிவுரை, (2) நாலடியார் தெளிவுரை என்னும் இரண்டு நீதி நூல்களும், (1) மூவர் தேவாரத் திரட்டு, (2) எட்டாம் திருமுறைத் திரட்டு, (3) ஒன்பது முதல் பன்னிரண்டு திருமுறைத் திரட்டு, (4) திருப்புகழ்த் திரட்டு, (5) பட்டினத்தார் திருப்பாடல்கள், (6) தாயுமானவர் திருப்பாடல்கள், (7) திருவருட்பாப் புகழ்த் திரட்டு என்னும் ஏழு சமய நூல்களும் ஆக ஒன்பது நூல்களையும் நீதியும் சமயமும் என்ற தலைப்பில், பரிசு அளிப்பவர்க்குப் பயன்படுமாறும், தனியே வழிபாட்டில் அல்லது மேசைமேல் வைத்துப் படிப்பவர்க்கு ஏற்றபடியும் கண்கவரும் வனப்புடைய அழகிய பெட்டியில் வைத்து வெளியிடுகின்றோம்.

Koviloor Digital Library

முதலிற் குறிப்பிட்டபடி இந்தத் திரட்டு நூல்கள் இறையருளால் நன்கு அமைந்து வெளிவருவது மகிழ்ச்சிக் குரியதாகும்.

இவ்வாறு 'மூவர் தேவாரத் திரட்டு' முதலியவற்றை வெளியிடுமாறு விரும்பிய அன்பர் பலருடைய விருப்பம் இப்பொழுது நிறைவேறுகின்றது.

இதனை அன்பர் பலரும் வாங்கிப் பயன் பெறுவதோடு, நண்பர்கட்கும் வாங்கி யளித்துச் சைவ நெறி வளரத் துணைசெய் வார்களாக. பள்ளி நூலகங்களும், பொது நூலகங்களும், திருக்கோவில்களும் இதனை வாங்கி வைத்துப் பலர்க்கும் பயன்படும்படி செய்ய விரும்புகின்றோம்.

சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகத்தார்.

Koviloor Digital Library

உள்ளுறை

	பக்கம்
திருவிசைப்பா, திருப்பல்லாண்டு (9 ஆம் திருமுறை)	1
திருமந்திரத் திரட்டு (10 ஆம் திருமுறை)	122
பதினொராந் திருமுறைத் திரட்டு (11 ஆம் திருமுறை)	136
பெரிய புராணத் திரட்டு (12 ஆம் திருமுறை)	227

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

திருவிசைப்பா திருப்பல்லாண்டு

(9 ஆந் திருமுறை)

திருமாளிகைத் தேவர்

அருளிச் செய்த

திருவிசைப்பா

---

1. கோயில் — ஒளிவளர் விளக்கே

பண் — பஞ்சமம்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. 1

Koviloor Digital Library

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறஎறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே. 2

தற்பரம் பொருளே சசிகண்ட சிகண்டா
சாம கண்டா அண்டவாணா
நற்பெரும் பொருளாய் உரைகலந் துன்னை
என்னுடை நாவினால் நவில்வான்
அற்பனென் உள்ளத் தளவிலா உன்னைத்
தந்தபொன் னம்பலத் தாடீ
கற்பமாய் உலகாய் அல்லையா னாயைத்
தொண்டனேன் கருதுமா கருதே. 3

பெருமையிற் சிறுமை பெண்ணொடா ணாயென்
பிறப்பிறப் பறுத்தபே ரொளியே
கருமையின் வெளியே கயற்கணாள் இமவான்
மகள் உமையவள்களை கண்ணே

Koviloor Digital Library

அருமையின் மறைநான் கோலமிட் டரற்றும்
　　அப்பனே அம்பலத் தமுதே
ஒருமையிற் பலபுக் குருவிநின் றாயைத்
　　தொண்டனேன் உரைக்குமா றுரையே.

கோலமே மேலை வானவர் கோவே
　　குணங்குறி இறந்ததோர் குணமே
காலமே கங்கை நாயகா எங்கள்
　　காலகா லாகாம நாசா
ஆலமே அமுதுண் டம்பலஞ் செம்பொற்
　　கோயில்கொண் டாடவல் லானே
ஞாலமே தமியேன் நற்றவத் தாயைத்
　　தொண்டனேன் நணுகுமா நணுகே. 5

நீறணி பவளக் குன்றமே நின்ற
　　நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
　　வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
　　அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடிஎம் ஈசனே உன்னைத்
　　தொண்டனேன் இசையுமா றிசையே. 6

Koviloor Digital Library

தனதனற் றோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள்மூன் றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
அம்பலத் தமரசே கரனே
உனகழல் இணையென் நெஞ்சினுள்
இனிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே. 7

திறம்பிய பிறவிச் சிலதெய்வ நெறிக்கே
திகைக்கின்றேன் றனைத்திகை யாமே
நிறம்பொன்னும் மின்னும் நிறைந்தசே
வடிக்கீழ்
நிகழ்வித்த நிகரிலா மணியே
அறம்பல திறங்கண் டருந்தவர்க் கரசாய்
ஆலின்கீழ் இருந்தஅம் பலவா
புறஞ்சமண் புத்தர் பொய்கள் கண்டாயைத்
தொண்டனேன் புணருமா புணரே. 8

தக்கன்நல் தலையும் எச்சன்வன் தலையும்
தாமரை நான்முகன் தலையும்
ஒக்கவிண் டுருள ஒண்திருப் புருவம்
நெறித்தரு ளியவுருத் திரனே

Koviloor Digital Library

அக்கணி புலித்தோல் ஆடைமேல் ஆட
ஆடப்பொன் னம்பலத் தாடும்
சொக்கனே! எவர்க்குந் தொடர்வரி
யாயைத்
தொண்டனேன் தொடருமா தொடரே.

மடங்கலாய்க் கனகன் மார்புகிண் டானுக்
கருள்புரி வள்ளலே மருளார்
இடங்கொள்முப் புரம்வெந் தவியவை
திகத்தேர்
ஏறிய ஏறுசே வகனே
அடங்கவல் அரக்கன் அருட்டிரு வரைக்கீழ்
அடர்த்தபொன் னம்பலத் தரசே
விடங்கொள்கண் டத்தெம்விடங்கனே
உன்னைத்
தொண்டனேன் விரும்புமா விரும்பே.

மறைகளும் அமரர் கூட்டமும் மாட்டா
தயன்திரு மாலொடு மயங்கி
முறைமுறை முறையிட் டோர்வரி யாயை
மூர்க்கனேன் மொழிந்தபுன் மொழிகள்
அறைகழல் அரன்சீர் அறிவிலா வெறுமைச்
சிறுமையிற் பொறுக்குமம் பலத்துள்

Koviloor Digital Library

நிறைதரு கருணா நிலையமே! உன்னைத்
தொண்டனேன் நினையுமே
நினையே. 11

2. கோயில் - உயர்கொடியாடை

உயர்கொடி யாடை மிடைபட லத்தின்
ஓமதா மப்பட லத்தின்
பெயர்நெடு மாடத் தகிற்புகைப் படலம்
பெருகிய பெரும்பற்றப் புலியூர்ச்
சியரொளி மணிகள் நிரந்துசேர் கனகம்
நிறைந்தசிற் றம்பலக் கூத்தா
மயர்வறும் அமரர் மகுடந்தோய் மலர்ச்சே
வடிகளென் மனத்துவைத் தருளே. 1

கருவளர் மேகத் தகடுதோய் மகுடக்
கனகமா ளிகைகலந் தெங்கும்
பெருவளர் முத்தீ நான்மறைத்
தொழில்சால்
எழில்மிகு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் தெய்வப் பதிவதி நிதியம்
திரண்டசிற் றம்பலக் கூத்தா
உருவள ரின்பச் சிலம்பொலி அலம்பும்
உன்னடிக் கீழதென் னுயிரே. 2

Koviloor Digital Library

வரம்பிரி வாளை மிளிர்மடுக் கமலம்
கரும்பொடு மாந்துமே திகள்சேர்
பரம்பிரி செந்நெற் கழனிச்செங் கழுநீர்ப்
பழனஞ்சூழ் பெரும்பற்றப் புலியூர்ச்
சிரம்புணர் முடிவா னவரடி முறையால்
இறைஞ்சுசிற் றம்பலக் கூத்தா
நிரந்தரம் முனிவர் நினைதிருக் கணக்கால்
நினைந்துநின் றொழிந்ததென்னெஞ்சே.

தேர்மலி விழவிற் குழலொலி தெருவில்
கூத்தொலி ஏத்தொலி ஓத்தின்
பேரொலி பரந்து கடலொலி மலியப்
பொலிதரு பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்நில விலயத் திருநடத் தியல்பில்
திகழ்ந்தசிற் றம்பலக் கூத்தா
வார்மலி முலையாள் வருடிய திரள்மா
மணிச்சுறங் கடைந்ததென் மதியே. 4

நிறைதழை வாழை நிழற்கொடி நெடுந்தெங்
கிளங்கமு குளங்கொள்நீள் பலமாப்
பிறைதவழ் பொழில்சூழ் கிடங்கிடைப் பதணம்
முதுமதிற் பெரும்பற்றப் புலியூர்ச்

Koviloor Digital Library

சிறைகொள் நீர்த் தரளத் திரள்கொள்நித்
திலத்த
செம்பொற்சிற் றம்பலக் கூத்த
பொறையணி நிதம்பப் புலியத ளாடைக்
கச்சுநூல் புகுந்ததென் புகலே. ௫

அதுமதி இதுவென் றலந்தலை நூல்கற்
றழைப்பொழிந் தருமறை யறிந்து
பிதுமதி வழிநின் றொழிவிலா வேள்விப்
பெரியவர் பெரும்பற்றப் புலியூர்ச்
செதுமதிச் சமணும் தேரரும் சேராச்
செல்வச்சிற் றம்பலக் கூத்த
மதுமதி வெள்ளத் திருவயிற் றுந்தி
வளைப்புண்டென் உள்மகிழ்ந் ததுவே.

பொருவரைப் புயத்தின் மீமிசைப்
புலித்தோல்
பொடியணி பூணநூல் அகலம்
பெருவரை புரைதிண் தோளுடன் காணப்
பெற்றவர் பெரும்பற்றப் புலியூர்த்
திருமரு வுதரத் தார்திசை மிடைப்ப
நடஞ்செய்சிற் றம்பலக் கூத்த
உருமரு வுதரத் தனிவடம் தொடர்ந்து
கிடந்ததென் உணர்வுணர்ந் துணர்ந்தே.

Koviloor Digital Library

கணியெரி விசிறு கரந்துடி விடவாய்க்
கங்கணம் செங்கைமற் றபயம்
பிணிகெட இவைகண் டரன்பெரு நடத்திற்
பிரிவிலார் பெரும்பற்றப் புலியூர்த்
திணிமணி நீல கண்டத்தென் னமுதே
சீர்கொள்சிற் றம்பலக் கூத்த
அணிமணி முறுவல் பவளவாய்ச் செய்ய
சோதியுள் ளடங்கிற்றென் னறிவே. 8

திருநெடு மாலிந்திரனயன் வானோர்
திருக்கடைக் காவலின் நெருக்கிப்
பெருமுடி மோதி உகுமணி முன்றில்
பிறங்கிய பெரும்பற்றப் புலியூர்ச்
செருநெடு மேரு வில்லின்முப் புரந்தீ
விரித்தசிற் றம்பலக் கூத்த
கருவடி குழைக்கா தமலச்செங் கமல
மலர்முகங் கலந்ததென் கருத்தே. 9

ஏர்கொள்கற் பகமொத் திருசிலைப் புருவம்
பெருந்தடங் கண்கள்மூன் றுடையோன்
பேர்களா யிரம்நூ றாயிரம் பிதற்றும்
பெற்றியோர் பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்கொள்கொக் கிறகும் கொன்றையுந் துன்று
சென்னிச்சிற் றம்பலக் கூத்த

Koviloor Digital Library

நீர்கொள்செஞ் சடைவாழ் மதிபுது மத்தம்
நிகழ்ந்தவென் சிந்தையுள் நிறைந்தே.

காமனைக் காலன் தக்கன்மிக் கெச்சன்
படக்கடைக் கணித்தவன் அல்லாப்
பேய்மனம் பிரிந்த தவப்பெருந் தொண்டர்
தொண்டனேன் பெரும்பற்றப்புலியூர்ச்
சேமநற் றில்லை வட்டங்கொண் டாண்ட
செல்வச்சிற் றம்பலக் கூத்த
பூமல ரடிக்கீழ்ப் புராணபூ தங்கள்
பொறுப்பரென் புன்சொலின்
பொருளே. 11

---

3. கோயில் - உறவாகிய யோகம்

பண்–பஞ்சமம்

உறவா கியயோ கமும்போ கமுமாய்
உயிராளி என்னுமென்
பொன்னொருநாள்
சிறவா தவர்புரஞ் செற்ற கொற்றச்
சிலைகொண்டு பன்றிப்பின் சென்று
நின்ற
மறவா என்னும் மணிநீ ரருவி
மகேந்திர மாமலைமே லுறையும்

Koviloor Digital Library

குறவா என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே. 1

காடாடு பல்கணஞ் சூழக் கேழற்
கடும்பின் நெடும்பகற் கானடந்த
வேடா மகேந்திர வெற்பா என்னும்
வினையேன் மடந்தைவிம் மாவெருவும்
சேடா என்னும் செல்வர் மூவாயிரஞ்
செழுஞ்சோதி அந்தணர் செங்கை
தொழும்
கோடா என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

கானே வருமுரண் ஏன மெய்த
களியார் புளினநற் காளாயென்னும்
வானே தடவு நெடுங் குடுமி
மகேந்திர மாமலை மேலிருந்த
தேனே என்னும் தெய்வவாய் மொழியார்
திருவாளர்மூ வாயிரவர் தெய்வக்
கோனே என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

வெறியேறு பன்றிப் பின்சென் றொருநாள்
விசயற் கருள்செய்த வேந்தேயென்னும்

Koviloor Digital Library

மறியேறு சாரல மகேந் திரமா
 மலைமே லிருந்த மருந்தே யென்னும்
நெறியே என்னும் நெறிநின் றவர்கள்
 நினைக்கின்ற நீதி வேதாந்தநிலைக்
குறியே என்னும் குணக்குன்றே என்னும்
 குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 4

செழுந்தென்ற லன்றிலித் திங்கள் கங்குல்
 திரைவீரை திங்குழல் சேவின்மணி
எழுந்தின்று என்மேல் பகையாட ஆடும்
 எனைநீ நலிவதென் னேயென்னும்
அழுந்தா மகேந்திரத் தந்த ரப்புட்
 கரசுக் கரசே அமரர்தனிக்
கொழுந்தே என்னும் குணக்குன்றே என்னும்
 குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 5

வண்டார் குழலுமை நங்கை முன்னே
 மகேந்திரச் சாரல் வராகத்தின்பின்
கண்டார் கவல வில்லாடி வேடர்
 கடிநா யுடன்கை வளைந்தா யென்னும்
பண்டாய மலரயன் தக்கன் எச்சன்
 பகலோன் தலைபல் பசுங்கண்
கொண்டாய் என்னும் குணக்குன்றே என்னும்
 குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 6

Koviloor Digital Library

கடுப்பாய்ப் பறைகறங்கக் கடுவெஞ் சிலையும்
கணையுங் கவணுங் கைக்கொண்
டுடுப்பாய் தோல் செருப்புச் சுரிகை
வராக முன்னோடி விளியுளைப்ப
நடப்பாய் மகேந்திர நாதநா தாந்தத்
தரையா என்பார்க்கு நாதாந்தபதம்
கொடுப்பாய் என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 7

சேவேந்து வெல்கொடி யானே என்னும்
சிவனேஎன் சேமத் துணையேஎன்னும்
மாவேந்து சாரல் மகேந்தி ரத்தில்
வளர்நா யகா இங்கே வாராவென்னும்
பூவேந்தி மூவா யிரவர் தொழப்
புகழேந்து மன்று பொலியநின்ற
கோவே என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 8

தரவார் புனம் சுனைதா ழருவித்
தடங்கல் லுறையும் மடங்கலமர்
மரவார் பொழிலெழில் வேங்கை எங்கும்
மழைசூழ் மகேந்திர மாமலைமேல்
சுரவா என்னும் சுடர்நீள் முடிமாலயன்
இந்திரன் முதல்தே வர்க்கெல்லாம்

Koviloor Digital Library

குரவா என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 9

திருநீ றிடாவுருத் தீண்டே னென்னும்
திருநீறு மெய்த்திரு முண்டத் திட்டுப்
பெருநீல கண்டன் திறங்கொண் டிவள்
பிதற்றிப் பெருந்தெரு வேதிரியும்
வருநீர் அருவி மகேந்தி ரப்பொன்
மலையின் மலைமகளுக் கருளுங்
குருநீ என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 10

உற்றாய் என்னும் என்னையன்றி மற்றொன்று
உணரே னென்னும் உணர்வுகள் கலக்கப்
பெற்றாய ஐந்தெழுத்தும் பிதற்றிப் பிணிதீர
வெண்ணீ றிடப் பெற்றேன் என்னும்
சுற்றாய சோதி மகேந்தி ரஞ்சூழ
மனத்திருள் வாங்கிச் சூழாத நெஞ்சிற்
குற்றாய் என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 11

வேறாக உள்ளத் துவகை விளைத்து
அவனிச் சிவலோக வேதவென்றி
மாறாத மூவா யிரவரையும் எனையும்
மகிழ்ந்தாள வல்லா யென்னும்

Koviloor Digital Library

ஆறார் சிகர மகேந்தி ரத்துன்
அடியார் பிழைபொறுப் பாய்மாதோர்
கூறா யென்னும் குணக்குன்றே என்னும்
குலாதில்லை அம்பலக் கூத்தனையே. 12

---

4. கோயில் - இணங்கிலா ஈசன்

பண் - காந்தாரம்

இணங்கிலா வீச னேசத்
திருந்தசித் தத்தி னேற்கு
மணங்கொள்சீர்த் தில்லை வாணன்
மணவடி யார்கள் வண்மைக்
குணங்களைக் கூறா வீறிற்
கோறைவாய்ப் பீறற் பிண்டப்
பிணங்களைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 1

எட்டுரு விரவி யென்னை
யாண்டவ னீண்டு சோதி
விட்டிலங் கலங்கற் றில்லை
வேந்தனைச் சேர்ந்தி லாத
துட்டரைத் தூர்த்த வார்த்தைத்
தொழும்பரைப் பிழம்பு பேசும்

Koviloor Digital Library

பிட்டரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. ௨

அருட்டிரட் செம்பொற் சோதி
யம்பலத் தாடு கின்ற
இரட்டிரட் கண்டத் தெம்மா
னின்பருக் கன்பு செய்யா
அரட்டரை யரட்டுப் பேசு
மழுக்கரைக் கழுக்க ளாய
பிரட்டரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. ௩

துணுக்கென வயனு மாலுந்
தொடர்வருஞ் சுடரா யிப்பால்
அணுக்கருக் கணிய செம்பொ
னம்பலத் தாடிக் கல்லாச்
சிணுக்கரைச் செத்தற் கொத்தைச்
சிதம்பரைச் சீத்தை யூத்தைப்
பிணுக்கரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. ௪

திசைக்குமிக் குலவு சீர்த்தித்
தில்லைக்கூத் துகந்து தீய
நசிக்கவெண் ணீற தாடு
நமர்களை நணுகா நாய்கள்

Koviloor Digital Library

அசிக்கவா ரியங்க ளோதும்
ஆதரைப் பேத வாதப்
பிசுக்கரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 5

ஆடர வாட வாடு
மம்பலத் தமிர்தே யென்னுஞ்
சேடர்சே வடிகள் சூடத்
திருவிலா வுருவி னாரைச்
சாடரைச் சாட்கை மோடச்
சழக்கரைப் பிழக்கப் பிட்கப்
பேடரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 6

உருக்கியென் னுள்ளத் துள்ளே
யூறலந் தேறல் மாறாத
திருக்குறிப் பருளுந் தில்லைச்
செல்வன்பாற் செல்லுஞ் செல்வின்
அருக்கரை யள்ளல் வாய
கள்ளரை யவியாப் பாவப்
பெருக்கரைக் காணா கண்வாய்ப்
பேசாதப் பேய்க ளோடே. 7

Koviloor Digital Library

செக்கரொத் திரவி நூறா
யிரத்திர ளொப்பாத் தில்லைச்
சொக்கரம் பலவ ரென்னுஞ்
சுருதியைக் கருத மாட்டா
எக்கரைக் குண்ட மிண்ட
வெத்தரைப் புத்த ராதிப்
பொக்கரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 8

எச்சனைத் தலையைக் கொண்டு
செண்டடித் திடப மேறி
அச்சங்கொண் டமர ரோடே
நின்றவம் பலவற் கல்லாக்
கச்சரைக் கல்லாப் பொல்லாக்
கயவரைப் பசுநூல் கற்கும்
பிச்சரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 9

விண்ணவர் மகுட கோடி
மிடைந்தொளிர் மணிகள் வீசும்
அண்ணலம் பலவன் கொற்ற
வரசனுக் காசை யில்லாத்

Koviloor Digital Library

தெண்ணரைத் தெருளா வுள்ளத்
திருளரைத் திட்டை முட்டைப்
பெண்ணரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 10

சிறப்புடை யடியார் தில்லைச்
செம்பொனம் பலவற் காளாம்
உறைப்புடை யடியார் கீழ்க்கீ
ழுறைப்பர்சே வடிநீ றாடார்
இறப்பொடு பிறப்பி னுக்கே
யினியராய் மீண்டு மீண்டும்
பிறப்பரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 11

Koviloor Digital Library

சேந்தனார்

அருளிச் செய்த

திருவிசைப்பா

---

1. திருவீழிமிழலை

பண்-பஞ்சமம்

ஏக நாயகனை யிமையவர்க் கரசை
　　யென்னுயிர்க் கமுதினை யெதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
　　பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
　　மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்று
　　முண்டென வுணர்கிலேன் யானே. 1

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
　　கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
　　மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
　　திருவீழி மிழலைவீற் றிருந்த

Koviloor Digital Library

கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே. 2

மண்டலத் தொளியை விலக்கியா னுகர்ந்த
மருந்தையென் மாறிலா மணியைப்
பண்டல ரயன்மாற் கரிதுமா யடியார்க்
கெளியதோர் பவளமால் வரையை
விண்டலர் மலர்வாய் வேரிவார் பொழில்சூழ்
திருவீழி மிழலையூ ராளுங்
கொண்டலங் கண்டத் தெங்குரு மணியைக்
குறுகவல் வினைகுறு காவே, 3

தன்னடி நிழற்கீ ழென்னையுந் தகைத்த
சசிகுலா மவுலியைத் தானே
என்னிடைக் கமல மூன்றினுட் டோன்றி
யெழுஞ்செழுஞ் சுடரினை யருள்சேர்
மின்னெடுங் கடலுள் வெள்ளத்தை வீழி
மிழலையுள் விளங்குவெண் பளிங்கின்
பொன்னடிக் கடிமை புக்கினிப் போக
விடுவனோ பூண்டுகொண் டேனே. 4

இத்தெய்வ நெறிநன் றென்றிருண் மாயப்
பிறப்பறா விந்திர சாலப்

Koviloor Digital Library

பொய்த்தெய்வ நெறிநான் புகாவகை புரிந்த
புராணசிந் தாமணி வைத்த
மெய்த்தெய்வ நெறிநான் மறையவர் வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
அத்தெய்வ நெறியிற் சிவமலா தவமு
மறிவரோ வறிவுடை யோரே. 5

அக்கனா வனைய செல்வமே சிந்தித்
தைவரோ டழுந்தியா னவமே
புக்கிடா வண்ணங் காத்தெனை யாண்ட
புனிதனை வனிதைபா கனையெண்
திக்கெலாங் குலவும் புகழ்த்திரு வீழி
மிழலையான் றிருவடி நிழற்கீழ்ப்
புக்குநிற் பவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந் தடிமைபூண் டேனே. 6

கங்கைநீ ரரிசிற் கரையிரு மருங்குங்
கமழ்பொழில் தழுவிய கழனித்
திங்கள்நேர் தீண்ட நீண்டமா ளிகைசூழ்
மாடநீ டுயர்திரு வீழித்
தங்குசீர்ச் செல்வத் தெய்வத்தான் றோன்றி
நம்பியைத் தன்பெருஞ் சோதி

Koviloor Digital Library

மங்கையோர் பாகத் தென்னரு மருந்தை
வருந்திநான் மறப்பனோ வினியே. 7

ஆயிரங் கமலம் ஞாயிறா யிரமுக்
கண்முக கரசர ணத்தோன்
பாயிருங் கங்கை பனிநிலாக் கரந்த
படர்சடை மின்னுபொன் முடியோன்
வேயிருந் தோளி யுமைமண வாளன்
விரும்பிய மிழலைசூழ் பொழிலைப்
போயிருந் தேயும் போற்றுவார் கழல்கள்
போற்றுவார் புரந்தரா திகளே. 8

எண்ணில்பல் கோடி சேவடி முடிக
ளெண்ணில்பல் கேடிதிண் டோள்கள்
எண்ணில்பல் கோடி திருவுரு நாம
மேர்கொள்முக் கண்முக மியல்பும்
எண்ணில்பல் கோடி யெல்லைக்கப் பாலாய்
நின்றைஞ்ஞூற் றந்தண ரேத்தும்
எண்ணில்பல் கோடி குணத்தரேர் வீழி
யிவர்நம்மை யாளுடை யாரே, 9

தக்கன் வெங் கதிரோன் சலந்தரன் பிரமன்
சந்திர னிந்திர னெச்சன்
மிக்கநெஞ் சரக்கன் புரங்கரி கருடன்
மறலிவே ளிவர்மிகை செகுத்தோன்

Koviloor Digital Library

திசைஎலா நிறைந்த புகழ்த்திரு வீழி
 மிழலையான் றிருவடி நிழற்கீழ்ப்
புக்கிருந் தவர்தம் பொன்னடிக் கமலப்
 பொடியணிந் தடிமைபூண் டேனே. 10

உளங்கொள மதுரக் கதிர்விரித் துயிர்மே
 லருள்சொரி தருமுமா பதியை
வளங்கிளர் நதியு மதியமுஞ் சூடி
 மழவிடை மேல்வரு வானை
விளங்கொளி வீழி மிழலைவேந் தேயென்
 றாந்தனைச் சேந்தன்றா தையையான்
களங்கொள வழைத்தாற் பிழைக்குமோ
 வடியேன்
 கைக்கொண்ட கனககற் பகமே. 11

பாடலங் காரப் பரிசில்கா சருளிப்
 பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங் காரத் தெம்பெரு மக்க
 ளைஞ்சினு ணிறைந்துநின் றானை
வேடலங் காரக் கோலத்தி னமுதைத்
 திருவீழி மிழலையூ ராளுங்
கேடலங் கீர்த்திக் கனககற் பகத்தைக்
 கெழுமுதற் கெவ்விடத் தேனே. 12

Koviloor Digital Library

உ. திருவாவடுதுறை

பண்-பஞ்சமம்

பொய்யாத வேதியர் சாந்தைமெய்ப்
புகழாள ராயிரம் பூசுரர்
மெய்யே திருப்பணி செய்சீர்
மிகுகா விரிக்கரை மேய
ஐயா திருவா வடுதுறை
யமுதே யென்றுன்னை யழைத்தக்கால்
மையார் தடங்கண் மடந்தைக்கொன்
றருளாதொழிவது மாதிமையே. 1

மாதி மணங்கம ழும்பொழின்
மணிமாட மாளிகை வீதிசூழ்
சோதி மதிலணி சாந்தைமெய்ச்
சுருதி விதிவழி யோர்தொழும்
ஆதி பமரர் புராணனா
பணியா வடுதுறை நம்பிநின்ற
நீதி பறிகிலள் பொன்னெடுந்
திண்டோள் புணர நினைக்குமே. 2

நினைக்கும் நிரந்தர னேயென்னு
நிலாக்கோலச் செஞ்சடைக் கங்கைநீர்

Koviloor Digital Library

நனைக்கும் நலங்கிளர் கொன்றைமேல்
நயம்பேசும் நன்னுத னங்கைமீர்
மனக்கின்ப வெள்ள மலைமகள்
மணவாள நம்பிவண் சாந்தையூர்
தனக்கின்ப னாவடு தண்டுறைத்
தருணேந்து சேகர னென்னுமே. 3

தருணேந்து சேகர னேயெனுந்
தடம்பொன்னித் தென்கரைச்சாந்தையூர்ப்
பொருணேர்ந்த சிந்தை யவர்தொழப்
புகழ்செல்வ மல்குபொற் கோயிலுள்
அருணேர்ந் தமர்திரு வாவடு
துறையாண்ட வாண்டகை யம்மானே
தெருணேர்ந்த சித்தம் வலியவா
திலக நுதலி திறத்திலே.

திலக நுதலுமை நங்கைக்குந் 4
திருவா வடுதுறை நம்பிக்குங்
குலக வடியவர்க் கென்னையாட்
கொடுத்தாண்டு கொண்ட குணக்கடல்
அலதொன் றறிகின்றி லேனெனு
மணியும் வெண் ணீறஞ் செழுத்தலால்
வலதொன் றிலளிதற் கென்செய்கேன்
வயலந்தண் சாந்தையர் வேந்தனே. 5

Koviloor Digital Library

வேந்தன் வளைத்தது மேருவில்
அரவுநாண் வெங்கணை செங்கண்மால்
போந்த மதிலணி முப்புரம்
பொடியாட வேதப் புரவித்தேர்
சாந்தை முதலயன் சாரதி
கதியருள் என்னுமித் தையலை
ஆந்தண் திருவா வடுதுறை
யான்செய்கை யாரறி கிற்பாரே? 6

கிற்போ மெனத்தக்கன் வேள்விபுக்
கெழுந்தோடிக் கெட்டவத் தேவர்கள்
சொற்போலும் மெய்ப்பயன் பாவிகாளென்
சொல்லிச் சொல்லுமித் தூமொழி
கற்போல் மனங்கனி வித்தவெங்
கருணாலயா வந்தி டாயென்றால்
பொற்போ பெருந்திரு வாவடு
துறையாளி பேசா தொழிவதே. 7

ஒழிவொன்றி லாவுண்மை வண்ணமும்
உலப்பில ளுறின்ப வெள்ளமும்
மொழிவொன்றி லாப்பொன்னித் தீர்த்தமும்
முனிகோடி கோடியாம்மூர்த் தியும்

Koviloor Digital Library

அழிவொன்றி லாச்செல்வச் சாந்தையூ
    ரணியா வடுதுறை யாடினாள்
இழிவொன்றி லாவகை யெய்திநின்
    றிருமாக்கு மென்னிள மானனே. 8

மானேர் கலைவளையுங் கவர்ந்துளங்
    கொள்ளை கொள்ளவழக் குண்டே
தேனே யமுதேயென் சித்தமே
    சிவலோக நாயகச் செல்வமே
யானேய லம்புபு னற்பொன்னி
    யணியா வடுதுறை யன்பர்தங்
கோனேநின் மெய்யடி யார்மனக்
    கருத்தை முடித்திடுங் குன்றமே. 9

குன்றேந்தி கோகன தத்தய
    னறியா நெறியென்னைக் கூட்டினாய்
என்றேங்கி யேங்கிய ழைக்கின்றா
    ளிளவல்லி யெல்லைக டந்தனள்
அன்றேய லம்புபு னற்பொன்னி
    யணியா வடுதுறை யாடினாள்
நன்றே யிவள் நம் பரமல்லள்
    நவலோக நாயகன் பாலளே. 10

Koviloor Digital Library

பாலு மமுதமுந் தேனுமா
யானந்தந் தந்துள்ளே பாலிப்பான்
போலுமெ னாருயிர்ப் போகமாம்
புரகால காமபு ராந்தகன்
சேலுங் கயலுந் திளைக்குநீர்த்
திருவா வடுதுறை வேந்தனோ
டாலு மதற்கே முதலுமா
மறிந்தோ மரிவைபொய் யாததே. 11

---

3. திருவிடைக் கழி

பண்—பஞ்சமம்

மாலுலா மனந்தந் தென்கையிற் சங்கம்
வவ்வினான் மலைமகள் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தனென் சேந்த
னென்னுமென் மெல்லிய லிவளே. 1

Koviloor Digital Library

இவளைவா ரிளமென் கொங்கைபீர் பொங்க
எழில்கவர்ந் தானிளங் காளை
கவளமா கரிமேற் கவரிசூழ் குடைக்கீழ்க்
கனகக்குன் றெனவருங் கள்வன்
திவளமா ளிகைசூழ் திருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
குவளைமா மலர்க்க ணங்கையா னைக்குங்
குழகனல் லழகனங் கோவே. 2

கோவினைப் பவளக் குழமணக் கோலக்
குழாங்கள்சூழ் கோழிவெல் கொடியேன்
காவனற் சேனையென் னக்காப் பவனென்
பொன்னைமே கலைகவர் வானே
தேவினற் றலைவன் றிருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
தூவிநற் பீலி மாமயி லூருஞ்
சுப்பிர மண்ணியன் றானே. 3

தானமர் பொருது வானவர் சேனை
மடியச்சூர் மார்பினைத் தடிந்தோன்
மானமர் தடக்கை வள்ளறன் பிள்ளை
மறைநிறை சட்டறம் வளரத்
தேனமர் பொழில்சூழ் திருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற

Koviloor Digital Library

கோனமர் கூத்தன் குலஇளங் களிறென்
கொடிக்கிடர் பயப்பதுங் குணமே. 4

குணமணிக் குருளைக் கொவ்வைவாய் மடந்தை
படுமிடர் குறிக்கொளா தழகோ
மணமணி மறையோர் வானவர் வையம்
உய்யமற் றடியனேன் வாழத்
திணமணி மாடத் திருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
கணமணி பொருநீர்க் கங்கைதன் சிறுவன்
கணபதி பின்னிளங் கிளையே. 5

கிளையிளஞ் சேயக் கிரிதனைக் கீண்ட
வாண்டகை கேடில்வேற் செல்வன்
வளையிளம் பிறைச்செஞ் சடையரன் மதலை
கார்நிற மால்திரு மருகன்
திளையிளம் பொழில்சூழ் திருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
முளையிளங் களிறென் மொய்குழற் சிறுமிக்
கருளுங்கொன் முருகவேள் பரிந்தே. 6

பரிந்தசெஞ் சுடரோ பரிதியோ மின்னோ
பவளத்தின் குழவியோ பசும்பொன்

Koviloor Digital Library

சொரிந்தசிந் துரமோ தூமணித் திரளேர்
    சுந்தரத் தரசிது வென்னத்
தெரிந்தவை திகர்வாழ் திருவிடைக் கழியிற்
    றிருக்குரா நீழற்கீழ் நின்ற
வரிந்தவெஞ் சிலைக்கை மைந்தனை வஞ்சொல்
    மையல்கொண் டையுறும் வகையே. 7

வகைமிகு மசுரர் மாளவந் துழிஞை
    வானமர் விளைத்ததா ளாளன்
புகைமிகு மனலிற் புரம்பொடி படுத்த
    பொன்மலை வில்லிதன் புதல்வன்
திகைமிகு கீர்த்தித் திருவிடைக் கழியிற்
    றிருக்குரா நீழற்கீழ் நின்ற
தொகைமிகு நாமத் தவன்றிரு வடிக்கென்
    றுடியிடை மடறொடங் கினளே. 8

தொடங்கினள் மடலென் றணிமுடித் தொங்கற்
    புறவித ழாகிலு மருளான்
இடங்கொளக் குறத்தி திறத்திலு மிறைவன்
    மறத்தொழில் வார்த்தையு முடையன்
திடங்கொள்வை திகர்வாழ் திருவிடைக் கழியிற்
    றிருக்குரா நீழற்கீழ் நின்ற
மடங்கலை மலரும் பன்னிரு நயனத்
    தறுமுகத் தமுதினை மருண்டே. 9

Koviloor Digital Library

மருண்டுறை கோயின் மல்குநன் குன்றப்
பொழில்வளர் மகிழ்திருப் பிடவூர்
வெருண்டமான் விழியார்க் கருள்செயா விடுமே
விடலையே யெவர்க்குமெய் யன்பர்
தெருண்டவை திகழ்வாழ் திருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
குருண்டபூங் குஞ்சிப் பிறைச்சடை முடிமுக்
கண்ணுடைக் கோமளக் கொழுந்தே. 10

கொழுந்திரள் வாயார் தாய்மொழி யாகத்
தூய்மொழி யமரர்கோ மகனைச்
செழுந்திரட் சோதிச் செப்புறைச் சேந்தன்
வாய்ந்தசொல் லிவைசுவா மியையே
செழுந்தடம் பொழில்சூழ் திருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
எழுங்கதி ரொளியை யேத்துவார் கேட்பா
ரிடர்கெடு மாலுலா மனமே. 11

Koviloor Digital Library

கருவூர்த்தேவர்

அருளிச் செய்த

திருவிசைப்பா

---

1. கோயில்

பண்-புறநீர்மை

கணம்விரி குடுமிச் செம்மணிக் கவைநாக்
 கறையணற் கட்செவிப் பகுவாய்ப்
பணம்விரி துத்திப் பொறிகொள்வெள்
 ளெயிற்றுப்
 பாம்பணி பரமர்தங் கோயில்
மணம்விரி தருதே மாம்பொழில் மொழுப்பின்
 மழைதவழ் வளரிளங் கமுகந்
திணர்நிரை யரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
 திருவளர் திருச்சிற்றம் பலமே. 1

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்து
 மேழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை யென்றா
 லஞ்சலென் றருள்செய்வான் கோயில்

Koviloor Digital Library

கைவரும் பழனங் குழைத்தசெஞ் சாலிக்
கடைசியர் களைதரு நீலஞ்
செய்வரம் பரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 2

தாயினே ரிரங்குந் தலைவவோ வென்றுந்
தமியனேன் றுணைவவோ வென்றும்
நாயினே னிருந்து புலம்பினா லிரங்கி
நலம்புரி பரமர்தங் கோயில்
வாயினே ரரும்பு மணிமுருக் கலர
வளரிளஞ் சோலைமாந் தளிர்செந்
தீயினே ரரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 3

துந்துபி குழல்யாழ் மொந்தைவா னியம்பத்
தொடர்ந்திரு டியர்கணந் துதிப்ப
நந்திகை முழவ முகிலென முழங்க
நடம்புரி பரமர்தங் கோயில்
அந்தியின் மறைநான் காரணம் பொதிந்த
வரும்பெறன் மறைப்பொருள் மறையோர்
சிந்தையி லரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 4

Koviloor Digital Library

கண்பனி யரும்பக் கைகண்மொட் டித்தென்
களைகணே யோலமென் றோலிட்
டென்பெலா முருகு மன்பர்தங் கூட்டத்
தென்னையும் புணர்ப்பவன் கோயில்
பண்பல தெளிதேன் பாடிநின் றாடப்
பனிமலர்ச் சோலைசூழ் மொழுப்பிற்
செண்பக மரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 5

நெஞ்சிட ரகல வகம்புகுந் தொடுங்கு
நிலைமையோ டிருள்கிழித் தெழுந்த
வெஞ்சுடர் சுடர்வ போன்றொளி துளும்பும்
விரிசடை யடிகடங் கோயில்
அஞ்சுடர்ப் புரிசை யாழிசூழ் வட்டத்
தகம்படி மணிநிரை பரந்த
செஞ்சுட ரரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 6

பூத்திர ளுருவஞ் செங்கதிர் விரியாப்
புந்தியில் வந்தமால் விடையோன்
தூத்திரட் பளிங்கிற் றோன்றிய தோற்றந்
தோன்றநின் றவன்வளர் கோயில்
நாத்திரள் மறையோர்ந் தோமகுண் டத்து
நறுநெயான் மறையவர் வளர்த்த

Koviloor Digital Library

தீத்திர ளரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 7

சீர்த்ததிண் புவன முழுவது மேனைத்
திசைகளோ டண்டங்க ளனைத்தும்
போர்த்ததம் பெருமை சிறுமைபுக் கொடுங்கும்
புணர்ப்புடை யடிகடங் கோயில்
ஆர்த்துவந் தமரித் தமரரும் பிறரும்
அலைகட லிடுதிரைப் புனிதத்
தீர்த்தநீ ரரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 8

பின்னுசெஞ் சடையும் பிறைதவழ் மொழுப்பும்
பெரியதங் கருணையுங் காட்டி
அன்னைதேன் கலந்தின் னமுதுகந் தளித்தாங்
கருள்புரி பரமர்தங் கோயில்
புன்னைதேன் சொரியும் பொழிலகங் குடைந்து
பொறிவரி வண்டினம் பாடுந்
தென்னதே னரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 9

உம்பர்நா டிம்பர் விளங்கியாங் கெங்கு
மொளிவளர் திருமணிச் சுடர்கான்

Koviloor Digital Library

றெம்பிரா னடஞ்செய் சூழலங் கெல்லா
மிருட்பிழம் பறவெறி கோயில்
வம்புலாங் கோயில் கோபுரங் கூடம்
வளர்நிலை மாடமா ளிகைகள்
செம்பொனா லரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 10

இருந்திரைத் தரளப் பரவைசூ ழகலத்
தெண்ணிலங் கண்ணில்புன் மாக்கள்
திருந்துயிர்ப் பருவத் தறிவுறு கருவூர்த்
துறைவளர் தீந்தமிழ் மாலை
பொருந்தருங் கருணைப் பரமர்தங் கோயிற்
பொழிலகங் குடைந்துவண் டுறங்கச்
செருந்திநின் றரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 11

2. திருக்களந்தை யாதித் தேச்சரம்

பண்-புறநீர்மை

கலைகடம் பொருளு மறிவுமா யென்னைக்
கற்பினிற் பெற்றெடுத் தெனக்கே
முலைகடந் தருளுந் தாயினு நல்ல
முக்கணா னுறைவிடம் போலும்

Koviloor Digital Library

மலைகுடைந் தனைய நெடுநிலை மாட
மருங்கெலா மறையவர் முறையோத்
தலைகடன் முழங்கு மந்தணீர்க் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. 1

சந்தன களபந் துதைந்தநன் மேனித்
தவளவெண் பொடிமுழு தாடுஞ்
செந்தழ லுருவிற் பொலிந்துநோக் குடைய
திருநுத லவர்க்கிடம் போலும்
இந்தன விலங்க லெறிபுனந் தீப்பட்
டெரிவதொத் தெழுநிலை மாடம்
அந்தண ரழலோம் பலைபுனற் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. 2

கரியரே யிடந்தான் செய்யரே யொருபாற்
கழுத்திலோர் தனிவடஞ் சேர்த்தி
யுரிவரே முனிவர் தம்மொடா னிழற்கீழ்
முறைதெரிந் தோருடம் பினராம்
இருவரே முக்க ணாற்பெருந் தடந்தோ
ளிறைவரே மறைகளுந் தேட
அரியரே யாகி லவரிடங் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. 3

பழையராந் தொண்டர்க் கெளியரே மிண்டர்க்
கரியரே பாவியேன் செய்யும்

Koviloor Digital Library

பிழையெலாம் பொறுத்தென் பிணிபொறுத் தருளாம்
பிச்சரே நச்சரா மிளிருங்
குழையராய் வந்தென் குடிமுழு தாளுங்
குழகரே யொழுகுநீர்க் கங்கை
அழகரே யாகி லவரிடங் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. 4

பவளமே மகுடம் பவளமே திருவாய்
பவளமே திருவுடம் பதனில்
தவளமே களபந் தவளமே புரிநூல்
தவளமே முறுவலா டரவந்
துவளுமே கலையுந் துகிலுமே யொருபாற்
றுடியிடை யிடமருங் கொருத்தி
அவளுமே யாகி லவரிடங் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. 5

நீலமே கண்டம் பவளமே திருவாய்
நித்தில நிரைத்திலங் கினவே
போலுமே முறுவ னிறையவா னந்தம்
பொழியுமே திருமுக மொருவர்
கோலமே யச்சோ வழகிதே யென்று
குழைவரே கண்டவ ருண்ட

Koviloor Digital Library

நாலமே யாகி லவரிடங் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. 6

இக்கடா நினைந்து நெஞ்சிடிந் துருகுந்
திறத்தவர் புறத்திருந் தலச
மைக்கடா வனைய வென்னையாள் விரும்பி
மற்றொரு பிறவியிற் பிறந்து
பொய்க்கடா வண்ணங் காததெனக் கருளே
புரியவும் வல்லரே யெல்லே
அக்கடா வாகி லவரிடங் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. 7

மெய்யரே மெய்யர்க் கிடுதிரு வான
விளக்கரே யெழுதுகோல் வளையாள்
மையரே வையம் பலிதிரிந் துறையு
மயானரே யுளங்கலந் திருந்தும்
பொய்யரே பொய்யர்க் கடுத்தவான் பளிங்கின்
பொருள் வழி யிருள்கிழித் தெழுந்த
ஐயரே யாகி லவரிடங் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. 8

குமுதமே திருவாய் குவளையே களமுங்
குழையதே யிருசெவி யொருபால்
விமலமே கலையு முடையரே சடைமேன்
மிளிருமே பொறிவரி நாகங்

Koviloor Digital Library

கமலமே வதனங் கமலமே நயனங்
கனகமே திருவடி நிலைநீர்
அமலமே யாகி லவரிடங் களந்தை
யணிதிக ழாதித்தேச் சரமே. 9

நீரணங் கசும்பு கழனிசூழ் களந்தை
நிறைபுக ழாதித்தேச் சரத்து
நாரணன் பரவுந் திருவடி நிலைமே
லலமலி கலைபயில் கருவூர்
ஆரண மொழிந்த பவளவாய் சுரந்த
வமுதமூ றியதமிழ் மாலை
ஏரணங் கிருநான் கிரண்டிவை வல்லோ
ரிருள்கிழித் தெழுந்தசிந் தையரே. 10

3. திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம்

பண் - பஞ்சமம்

தளிரொளி மணிப்பூம் பதஞ்சிலம் பலம்பச்
சடைவிரித் தலையெறி கங்கைத்
தெளிரொளி மணிநீர்த் திவலைமுத் தரும்பித்
திருமுக மலர்ந்து சொட் டட்டக்
கிளரொளி மணிவண் டறைபொழிற் பழனங்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்

Koviloor Digital Library

வளரொளி மணியம் பலத்துணின் றாடு
மைந்தனென் மனங்கலந் தானே. 1

துண்டவெண் பிறையும் படர்சடை மொழுப்புஞ்
சுழியமுஞ் சூலமு நீல
கண்டமுங் குழையும் பவளவா யிதழுங்
கண்ணுதற் றிலகமுங் காட்டிக்
கெண்டையுங் கயலு முகளுநீர்ப் பழனங்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வண்டறை மணியம் பலத்துணின் றாடு
மைந்தனென் மனங்கலந் தானே. 2

திருநுதல் விழியும் பவளவா யிதழுந்
திலகமு முடையவன் சடைமேற்
புரிதரு மலரின் றாதுநின் றூதப்
போய்வருந் தும்பிகா ளிங்கே
கிரிதவழ் முகிலின் கீழ்த்தவழ் மாடங்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வருதிறன் மணியம் பலவனைக் கண்டேன்
மனத்தையுங் கொண்டுபோ துமினே. 3

தெள்ளுநீ றவனி றென்னுடல் விரும்புஞ்
செவியவ னறிவுநூல் கேட்கு
மெள்ளவே யவன்பேர் விளம்பும்வாய் கண்கள்
விமானமே நோக்கிவெவ் வுயிர்க்குங்

Koviloor Digital Library

கிள்ளைபூம் பொதும்பிற் கொஞ்சிமாம் பொழிற்கே
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வள்ளலே மணியம் பலத்துணின் றாடு
மைந்தனே யென்னுமென் மனனே. 4

தோழியாஞ் செய்த தொழிலெனெம் பெருமான்
றுணைமலர்ச் சேவடி காண்பான்
ஊழிதோ றூழி யுணர்ந்துளங் கசிந்து
நெக்குநைந் துளங்கரைந் துருக்குங்
கேழலும் புள்ளு மாகிநின் றிருவர்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வாழிய மணியம் பலவனைக் காண்பான்
மயங்கவு மாலொழி யோமே. 5

என்செய்கோந் தோழிநீ துணையா
யிரவுபோம் பகல்வரு மாகில்
அஞ்சலோ வென்னா னாழியுந் திரையு
மலமரு மாறுகண் டயர்வன்
கிஞ்சுக மணிவா யரிவையர் தெருவிற்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மஞ்சணி மணியம் பலவவோ வென்று
மயங்குவன் மாலையம் பொழுதே. 6

Koviloor Digital Library
KOVILOOR VEDANTA MUTT

தழைதவழ் மொழுப்புந் தவளநீற் றொளியுஞ்
சங்கமுஞ் சகடையின் முழக்குங்
குழைதவழ் செவியுங் குளிர்சடைத் தெண்டுங்
குண்டையுங் குழாங்கொடு தோன்றுங்
கிழைதவழ் கனகம் பொழியுநீர்ப் பழனங்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மழைதவழ் மணியம் பலத்துணின் றாடு
மைந்தர்தம் வாழ்வுபோன் றதுவே. 7

தன்னக மழலைச் சிலம்பொடு சதங்கை
தமருகந் திருவடி திருநீ
றின்னகை மழலை கங்கைகோங் கிதழி
யிளம்பிறை குழைவள ரிளமான்
கின்னர முழவ மழலையாழ் வீணை
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மன்னவன் மணியம் பலத்துணின் றாடு
மைந்தனென் மனத்துள்வைத் தனனே. 8

யாதுநீ நினைவ தெவரையா முடைய
தெவர்களும் யாவையுந் தானாய்ப்
பாதுகை மழலைச் சிலம்பொடு புகுந்தென்
பனிமலர்க் கண்ணுணின் றகலான
கேதகை நிழலைக் குருகென மருவிக்
கெண்டைகள் வெருவுகீழ்க் கோட்டூர்

Koviloor Digital Library

மாதவன் மணியம் பலத்துணின் றாடு
மைந்தனென் மனம்புகுந் தானே. 9

அந்திபோ லுருவு மந்தியிற் பிறைசே
ரழகிய சடையும்வெண் ணீறுஞ்
சிந்தையா னினையிற் சிந்தையுங் காணேன்
செய்வதென் றெளிபுன லலங்கற்
கெந்தியா வுகளுங் கெண்டைபுண் டரீகங்
கிழிக்குந்தண் பணைசெய்கீழ்க் கோட்டூர்
வந்தநாண் மணியம் பலத்துணின் றாடு
மைந்தனே யறியுமென் மனமே. 10

கித்திநின் றாடு மரிவையர் தெருவிற்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மத்தனை மணியம் பலத்துணின் றாடு
மைந்தனை யாரணம பிதற்றும்
பித்தனேன் மொழிந்த மணிநெடு மாலை
பெரியவர்க் ககலிரு விசும்பின்
முத்தியா மென்றே யுலகரேத் துவரேன்
முகமலர்ந் தெதிர்கொளுந் திருவே. 11

Koviloor Digital Library

4. திருமுகத்தலை*

பண் – பஞ்சமம்

புவனநா யகனே யகவுயிர்க் கமுதே
    பூரணா வாரணம் பொழியும்
பவளவாய் மணியே பணிசெய்வார்க் கிரங்கும்
    பசுபதீ பன்னகா பரணா
அவனிஞா யிறுபோன் றருள்புரிந் தடியே
    னகத்திலு முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலு மமர்ந்தாய்
    தனியனேன் றனிமைநீங் குதற்கே. 1

புழுங்குதீ வினையேன் வினைகெடப் புகுந்து
    புணர்பொரு ளுணர்வுநூல் வகையால்
வழங்குதேன் பொழியும் பவளவாய் முக்கண்
    வளரொளி மணிநெடுங் குன்றே
முழங்குதீம் புனல்பாய்ந் திளவரா லுகளு
    முகத்தலை யகத்தமர்ந் தடியேன்
விழுங்குதீங் கனியா யினியவா னந்த
    வெள்ளமா யுள்ளமா யினையே. 2

---

* இத் திருப்பதி திருத்தருப்பூண்டிக்கு அண்மையில் உள்ளது.

Koviloor Digital Library

கன்னகா வுள்ளக் கள்வனேனின்கட்
கசிவிலேன் கண்ணினீர் சொரியேன்
முன்னகா வொழியே னாயினுஞ் செழுநீர்
முகத்தலை யகத்தமர்ந் துறையும்
பன்னகா பரணா பவளவாய் மணியே
பாவியே னாவியுள் புகுந்த
தென்னகா ரணநீ யேழைநாயடியேற்
கெளிமையோ பெருமையா வதுவே. ௫

கேடிலா மெய்ந்நூல் கெழுமியுஞ் செழுநீர்க்
கிடையனா ருடையவென் னெஞ்சிற்
பாடிலா மணியே மணியுமிழ்ந் தொளிரும்
பரமனே பன்னகா பரணா
மேடெலாஞ் செந்நெற் பசுங்கதிர் விளைந்து
மிகத்திகழ் முகத்தலை மூதூர்
நீடினா யெனினு முள்புகுந் தடியே
னெஞ்செலா நிறைந்துநின் றாயே. ௬

அக்கனா வனைய செல்வமே சிந்தித்
தைவரோ டென்னொடும் விளைந்த
இக்கலா முழுது மொழியவந் துள்புக்
கென்னையா ளாண்டநா யகனே
முக்கணா யகனே முழுதுல கிறைஞ்ச
முகத்தலை யகத்தமர்ந் தடியேன்

Koviloor Digital Library

பக்கலா னந்த மிடையறா வண்ணம்
பண்ணினாய் பவளவாய் மொழிந்தே. 5

புனல்படவுருகி மண்டழல் வெதும்பிப்
பூம்புனல் பொதிந்துயி ரளிக்கும்
வினைபடு நிறைபோ னிறைந்தவே தகத்தென்
மனநெக மகிழ்ந்தபே ரொளியே
முனைபடு மதின்மூன் றெரித்தநா யகனே
முகத்தலை யகத்தமர்ந் தடியேன்
வினைபடு முடனீ புகுந்துநின் றமையால்
விழுமிய விமானமா யினதே. 6

விரியுநீ ராலக் கருமையின் சாந்தின்
வெண்மையுஞ் செந்நிறத் தொளியுங்
கரியுநீ றாடுங் கனலுமொத் தொளிருங்
கழுத்திலோர் தனிவடங் கட்டி
முரியுமா றெல்லா முரிந்தழ கியையாய்
முகத்தலை யகத்தமர்ந் தாயைப்
பிரியுமா றுளதே பேய்களோஞ் செய்த
பிழைபொறுத் தாண்டபே ரொளியே. 7

என்னையுன் பாத பங்கயம் பணிவித்
தென்பெலா முருகநீ யெளிவந்
துன்னையென் பால்வைத் தெங்குமெஞ் ஞான்று
மொழிவற நிறைந்தவொண் சுடரே

Koviloor Digital Library

முன்னையென் பாச முழுவது மகல
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
கன்னலும் பாலுந் தேனுமா ரமுதுங்
கனியுமா யினியையா யினையே. 8

அம்பரா வனலா வனிலமே புவிநீ
யம்புவே யிந்துவே யிரவி
உம்பரா லொன்று மறிவொணா வணுவா
யொழிவற நிறைந்தவொண் சுடரே
மொய்ம்பராய் நலஞ்சொன் மூதறி வாளர்
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
யெம்பிரா னாகி யாண்டநீ மீண்டே
எந்தையுந் தாயுமா யினையே. 9

மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய்
முகத்தலை யகத்தமர்ந் தினிய
பாலுமா யமுதாம் பன்னகா பரணன்
பனிமலர்த் திருவடி யிணைமேல்
ஆலையம் பாகி னனையசொற் கருவூ
ரமுதுறழ் தீந்தமிழ் மாலை
சீலமாப் பாடு மடியவ ரெல்லாஞ்
சிவபதங் குறுகிநின் றாரே. 10

Koviloor Digital Library

5. திரைலோக்கிய சுந்தரம்

பண்-காந்தாரம்

நீரோங்கி வளர்கமல
நீர்பொருந்தாத் தன்மையன்றே
ஆரோங்கி முகமலர்ந்தாங்
கருவினையேன் றிறமறந்தின்
றூரோங்கும் பழிபாரா
துன்பாலே விழுந்தொழிந்தேன்
சீரோங்கும் பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 1

நையாத மனத்தினனை
நைவிப்பா னித்தெருவே
ஐயாநீ யுலாப்போந்த
வன்றுமுத லின்றுவரை
கையாரத் தொழுதருவி
கண்ணாரச் சொரிந்தாலுஞ்
செய்யாயோ வருள் கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 2

அம்பவிங்கு பகலோன்பா
லடைப்பற்றா யிவன்மனத்தின்

Koviloor Digital Library

முன்பளிந்த காதலுநின்
முகந்தோன்ற விளங்கிற்றால்
வம்பளித்த கனியேயென்
மருந்தேநல் வளர்முக்கட்
செம்பளிங்கே பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 3

மைஞ்ஞின்ற குழலாடன்
மனந்தரவும் வளைதாரா
திஞ்ஞின்ற கோவணவ
னிவன்செய்த தியார்செய்தார்
மெய்ஞ்ஞின்ற தமர்க் கெல்லா
மெய்ஞ்ஞிற்கும் பண்பினுறு
செய்ஞ்ஞன்றி யிலன்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 4

நீவாரா தொழிந்தாலு
நின்பாலே விழுந்தேழை
கோவாத மணிமுத்துங்
குவளைமலர் சொரிந்தனவால்
ஆவாவென் றருள்புரியா
யமரர்கணந் தொழுதேத்துந்
தேவாதென் பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 5

Koviloor Digital Library

முழுவதுநீ யாயினுமிம்
மொய்குழலாள் மெய்ம்முழுதும்
பழுதெனவே நினைந்தோராள்
பயில்வதுநின் னொருநாமம்
அழுவதுநின் றிறநினைந்தே
யதுவன்றோ பெறும்பேறு
செழுமதில்சூழ் பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 6

தன்சோதி யெழுமேனித்
தபனியப்பூஞ் சாய்க்காட்டாய்
உன்சோதி யெழில்காண்பா
னோலிடவு முருக்காட்டாய்
துஞ்சாகண் ணிவளுடைய
துயர்தீரு மாறுரையாய்
செஞ்சாலி வயற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 7

அரும்பேதைக் கருள்புரியா
தொழிந்தாய்நின் னவிர்சடைமே
னிரம்பாத பிறைதூவு
நெருப்பொடுநின் கையிலியாழ்
நரம்பாலு முயிரீர்ந்தாய்
நளிர்புரிசைக் குளிர்வனம்பா

Koviloor Digital Library

திரம்போது சொரிகோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 8

ஆறாத பேரன்பி
னவருள்ளங் குடிகொண்டு
வேறாகப் பலர்சூழ
வீற்றிருத்தி யதுகொண்டு
வீறாடி யிவளுன்னைப்
பொதுநீப்பான் விரைந்தின்னந்
தேறாடென் பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 9

சரிந்ததுகில் தளர்ந்தவிடை
யவிழ்ந்தகுழ லிளந்தெரிவை
இருந்தபரி சொருநாள்கண்
டிரங்காயெம் பெருமானே
முரிந்தநடை மடந்தையர்
முழங்கொலியும் வழங்கொலியுந்
திருந்துவிழ வணிகோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 10

ஆரணத்தேன் பருகியருந்
தமிழ்மாலை கமழவருங்
காரணத்தி னிலைபெற்ற
கருவூரன் றமிழ்மாலை

Koviloor Digital Library

பூரணத்தா வீரைந்தும்
போற்றிசைப்பார் காந்தாரஞ்
சேரணைத்த பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 11

---

6. கங்கைகொண்ட சோளேச்சரம்

பண்-பஞ்சமம்

அன்னமாய் விசும்பு பறந்தயன் றேட
வங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி யென்மனம் புகுந்த
வெளிமையை யென்றுநான் மறக்கேன்
முன்னமா லறியா வொருவனா மிருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோட்
கன்னலே தேனே யமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 1

உண்ணெகிழ்ந் துடல நெக்குமுக் கண்ணா
வோலமென் றோலமிட் டொருநாள்
மண்ணினின் றலறேன் வழிமொழி மாலை
மழலையஞ் சிலம்படி முடிமேற்
பண்ணிநின் றுருகேன் பணிசெயே னெனினும்
பாவியே னாவியுள் புகுந்தென்

Koviloor Digital Library

கண்ணினின் றகலா னென்கொலோ கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 2

அற்புதத் தெய்வ மிதனினமற் றுண்டே
யன்பொடு தன்னையஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளமள் ளூறுந்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையுங்
கற்பகப் பொழிலு முழுதுமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 3

ஐயபொட் டிட்ட வழகுவா ணுதலு
மழகிய விழியும்வெண் ணீறுஞ்
சைவம்விட் டிட்ட சடைகளுஞ் சடைமேற்
றரங்கமுஞ் சதங்கையுஞ் சிலம்பும்
மொய்கொளெண் டிக்குங் கண்டநின்றொண்டர்
முகமலர்ந் திருகணீ ரரும்பக்
கைகள்மொட்டிக்கு மென்கொலோ கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 4

சுருதிவா னவனாந் திருநெடு மாலாஞ்
சுந்தர விசும்பிலிந் திரனாம்
பருதிவா னவனாம் படர்சடை முக்கட்
பகவனா மகவுயிர்க் கமுதாம்

Koviloor Digital Library

எருதுவா கனனா மெயில்கள்மூன் றெரித்த
வேறுசே வகனுமாம் பின்னுங்
கருதுவார் கருது முருவமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 5

அண்டமோ ரணுவாம் பெருமை
கொண்டணுவோ
ரண்டமாஞ் சிறுமைகொண் டடியேன்
உண்டவூ னுனக்காம் வகையென துள்ள
முள்கலந் தெழுபரஞ் சோதி
கொண்டநாண் பாம்பாம் பெருவரை வில்லிற்
குறுகலர் புரங்கள்மூன் றெரித்த
கண்டனே நீல கண்டனே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 6

மோதலைப் பட்ட கடல்வயி றுதித்த
முழுமணித் திரளமு தாங்கே
தாய்தலைப் பட்டங் குருகியொன் றாய
தன்மையி லென்னைமுன் னின்ற
நீதலைப் பட்டா லியானுமவ் வகையே
நிசிசர ரிருவரோ டொருவர்
காதலிற் பட்ட கருணையாய் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 7

Koviloor Digital Library

தத்தையங் கனையார் தங்கண்மேல் வைத்த
　　தயாவைநூ றாயிரங் கூறிட்
டத்திலங் கொருகூறுன்கண்வைத் தவருக்
　　கமருல களிக்குநின் பெருமை
பித்தனென் றொருகாற் பேசுவ ரேனும்
　　பிழைத்தவை பொறுத்தருள் செய்யுங்
கைத்தல மடியேன் சென்னிமேல் வைத்தகங்கை
　　கொண்டசோ ளேச்சரத் தானே. 8

பண்ணிய தழல்காய் பாலளா நீர்போற்
　　பாவமுன் பறைந்துபா லணைய
புண்ணியம் பின்சென் றறிவினுக் கறியப்
　　புகுந்ததோர் யோகினிற் பொலிந்து
நுண்ணியை யெனினு நம்பநின் பெருமை
　　நுன்னிடை யொடுங்கநீ வந்தென்
கண்ணினுண் மணியிற் கலந்தனை கங்கை
　　கொண்டசோ ளேச்சரத் தானே. 9

அங்கைகொண் டமரர் மலர்மழை பொழிய
　　வடிச்சிலம் பலம்பவந் தொருநாள்
உங்கைகொண் டடியேன் சென்னிவைத்
　　　　　　　　　　தென்னை
　　யுய்யக்கொண் டருளினை மருங்கிற்

Koviloor Digital Library

கொங்கைகொண் டனுங்குங் கொடியிடை
காணிற்
கொடியளென் றவிர்சடை முடிமேல்
கங்கைகொண் டிருந்த கடவுளே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 10

மங்கையோ டிருந்தே யோகுசெய் வானை
வளரிளந் திங்களை முடிமேற்
கங்கையோ டணியுங் கடவுளைக் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானை
அங்கையோ டேந்திப் பலிதிரி கருவூ
ரறைந்தசொன் மாலையா லாழிச்
செங்கையோ டுலகி லரசுவீற் றிருந்து
திளைப்பதுஞ் சிவனருட் கடலே. 11

---

7. திருப்பூவணம்

பண்-பஞ்சமம்

திருவருள் புரிந்தா ளாண்டுகொண் டிங்ஙன்
சிறியனுக் கினியது காட்டிப்
பெரிதருள் புரிந்தா னந்தமே தருநின்
பெருமையிற் பெரியதொன் றுளதே
மருதர சிருங்கோங் ககின்மரஞ் சாடி
வரைவளங் கவர்ந்திழி வைகைப்

Koviloor Digital Library

பொருதிரை மருங்கோங் காவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. 1

பாம்பணைத் துயின்றோ னயன்முதற் றேவர்,
பன்னெடுங் காலநிற் காண்பான்
ஏம்பலித் திருக்க வென்னுளம் புகுந்த
வெளிமையை யென்றுநான் மறக்கேன்
தேம்புனற் பொய்கை வாளைவாய் மடுப்பத்
தெளிதரு தேறல்பாய்ந் தொழுகும்
பூம்பணைச் சோலை யாவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. 2

கரைகட லொலியிற் றமருகத் தரையிற்
கையினிற் கட்டிய கயிற்றால்
இருதலை யொருநாவியங்கவந் தொருநா
ளிருந்திடா யெங்கள்கண் முகப்பே
விரிதிகழ் விழவின் பின்செல்வோர் பாடல்
வேட்கையின் வீழ்ந்தபோ தவிழ்ந்த
புரிசடை துகுக்கு மாவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. 3

கண்ணியன் மணியின் சூழல்புக் கங்கே
கலந்துபுக் கொடுங்கினேற் கங்ஙன்
நுண்ணியை யெனினு நம்பநின் பெருமை
நுண்ணிமை யிறந்தமை யறிவன்

Koviloor Digital Library

மண்ணியன் மரபிற் றங்கிருண் மொழுப்பின்
வண்டினம் பாடநின் றாடும்
புண்ணிய மகளி ராவண வீதிப்
பூவணங் கோயில்கொண்டாயே. 4

கடுவினைப் பாசக் கடல்கடந் தைவர்
கள்ளரை மெள்ளவே துரந்துன்
அடியிணை யிரண்டு மடையுமா றடைந்தே
னருள்செய்வா யருள்செயா தொழிவாய்
நெடுநிலை மாடத் திரவிருள் கிழிக்க
நிலைவிளக் கலகில்சா லேகம்
புடைகிடந் திலங்கு மாவண வீதிப்
பூவணங் கோயில்கொண்டாயே. 5

செம்மனக் கிழவோ ரன்புதா வென்றுன்
சேவடி பார்த்திருந் தலச
எம்மனங் குடிகொண் டிருப்பதற் கியானா
ரென்னுடை யடிமைதா னியாதே
அம்மனங் குளிர்நாட் பலிக்கெழுந் தருளா
வரிவைய ரவிழ்குழற் சுரும்பு
பொம்மென முரலு மாவண வீதிப்
பூவணங் கோயில்கொண்டாயே. 6

சொன்னவின் முறைநான் காரண முணராச்
சூழல்புக் கொளித்தநீ யின்று

Koviloor Digital Library

கன்னவில் மனத்தென் கணவலைப் படுமிக்
கருணையிற் பெரியதொன் றுளதே
மின்னவில் கனக மாளிகை வாய்தல்
விளங்கிளம் பிறைதவழ் மாடம்
பொன்னவில் புரிசை யாவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. 7-8-9

பூவணங் கோயில் கொண்டெனை யாண்ட
புனிதனை வனிதைபா கனைவெண்
கோவணங் கொண்டு வெண்டலை யேந்துங்
குழகனை யழகெலா நிறைந்த
தீவணன் றன்னைச் செழுமறை தெரியுந்
திகழ்கரு வூரனே னுரைத்த
பாவணத் தமிழ்கள் பத்தும்வல் லார்கள்
பரமன துருவமா குவரே. 10

---

8. திருச்சாட்டியக்குடி

பண்-பஞ்சமம்

பெரியவா கருணை யிளநிலா வெறிக்கும்
பிறைதவழ் சடைமொழுப் பவிழ்ந்து
சரியுமா சுழியங் குழைமிளிர்ந் திருபாற்
றாழ்ந்தவா காதுகள் கண்டங்

Koviloor Digital Library

கரியவா தாமுஞ் செய்யவாய் முறுவல்
காட்டுமா சாட்டியக் குடியார்
இருகைகூம் பினகண் டலர்ந்தவா முகமே
ழிருக்கையி லிருந்தவீ சனுக்கே. 1

பாந்தள்பூ ணாரம் பரிகலங் கபாலம்
பட்டவர்த் தனமெரு தல்பர்
வார்ந்தகண் ணருவி மஞ்சன சாலை
மலைமகள் மகிழ்பெருந் தேவி
சாந்தமுந் திருநீ றருமறை கீதஞ்
சடைமுடி சாட்டியக் குடியார்
ஏந்தெழி லிதயங் கோயின்மா ளிகையே
ழிருக்கையு ளிருந்தவீ 'சனுக்கே. 2

தொழுதுபின் செல்வ தயன்முதற் கூட்டந்
தொடர்வன மறைகணான் கெனினுங்
கழுதுறு கரிகா டுறைவிடம் போர்வை
கவந்திகை கரியுரி திரிந்தூண்
தழலுமி ழரவங் கோவணம் பளிங்கு
செபவடஞ் சாட்டியக் குடியார்
இழுதுநெய் சொரிந்தோம் பழலொளி விளக்கே
ழிருக்கையி லிருந்தவீ சனுக்கே. 3

Koviloor Digital Library

பதிகநான் மறைதும் புருவுநா ரதரும்
பரிவொடு பாடுகாந் தர்ப்பர்
கதியெலா மரங்கம் பிணையன்மூ வுலகிற்
கடியிருட் டிருநடம் புரியுஞ்
சதியிலார் கதியி லொலிசெயுங் கையிற்
றமருகஞ் சாட்டியக் குடியார்
இதயமாங் கமலங் கமலவர்த்தி தனையே
யிருக்கையி லிருந்தவீ சனுக்கே. ௪

திருமகன் முருகன் றேவியே லுமையா
டிருமகள் மருமகன் றாயாம்
மருமகன் மதனன் மாமனே விமவான்
மலையுடை யரையர்தம் பாவை
தருமலி வளனாஞ் சிவபுரன் றோழன்
றனபதி சாட்டியக் குடியார்
இருமுகங் கழன்மூன் றேழுகைத் தலமே
யிருக்கையி லிருந்தவீ சனுக்கே. ௫

அனலமே புனலே யனிலமே புவனி
யம்பரா வம்பரத் தளிக்குங்
கனகமே வெள்ளிக் குன்றமே யென்றன்
களைகணே களைகண்மற் றில்லாத்

Koviloor Digital Library

தனியனே னுள்ளங் கோயில்கொண் டருளுஞ்
சைவனே சாட்டியக் குடியார்க்
கினியதீங் கனியா யொழிவற நிறைந்தே
ழிருக்கையி லிருந்தவா றியம்பே. 6

செம்பொனே பவளக் குன்றமே நின்ற
திசைமுகன் மால்முதற் கூட்டத்
தன்பரா னவர்கள் பருகுமா ரமுதே
யத்தனே பித்தனே னுடைய
சம்புவே யணுவே தாணுவே சிவனே
சங்கரா சாட்டியக் குடியார்க்
கின்பனே யெங்கு மொழிவற நிறைந்தே
ழிருக்கையி லிருந்தவா றியம்பே. 7

செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள் வீற்றிருந்த
அங்கணா போற்றி யமரனே போற்றி
யமரர் கடலைவனே போற்றி
தங்கணான் மறைநூல் சகலமுங் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கணா யகனே போற்றியே ழிருக்கை
யிறைவனே போற்றியே போற்றி. 8

Koviloor Digital Library

சித்தனே யருளாய் செங்கணா வருளாய்
சிவபுர நகருள்வீற் றிருந்த
அத்தனே யருளா யமரனே யருளா
யமரர்க ளதிபனே யருளாய்
தத்துநீர்ப் படுகர்த் தண்டலைச் சூழற்
சாட்டியக் குடியுளே ழிருக்கை
முத்தனே யருளாய் முதல்வனே யருளாய்
முன்னவா துயர்கெடுத் தெனக்கே. ௯

தாட்டரும் பழனப் பைம்பொழிற் படுகர்த்
தண்டலைச் சாட்டியக் குடியார்
ஈட்டிய பொருளா யிருக்குமே ழிருக்கை
யிருந்தவன் றிருவடி மலர்மேற்
காட்டிய பொருட்கலை பயில்கரு வூரன்
கழறுசொன் மாலையீ ரைந்தும்
மாட்டிய சிந்தை மைந்தருக் கன்றே
வளரொளி விளங்குவா னுலகே. 10

Koviloon Digital Library

9. தஞ்சை இராசராசேச்சரம்

பண்–பஞ்சமம்

உலகெலாந் தொழவந் தெழுகதிர்ப் பரிதி
 யொன்றுநூ றாயிர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம் பச்சோ
 வங்ஙனே யழகிதோ வரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
 பருவரை ஞாங்கர்வெண் டிங்கள்
இலைகுலாம் பதணத் திஞ்சிசூழ் தஞ்சை
 யிராசரா சேச்சரத் திவர்க்கே. 1

நெற்றியிற் கண்ணென் கண்ணினின் றகலா
 நெஞ்சினி லஞ்சிலம் பலைக்கும்
பொற்றிரு வடியென் குடிமுழு தாளப்
 புகுந்தன போந்தன வில்லை
மற்றெனக் குறவேன் மறிதிரை வடவாற்
 றிடுபுனல் மதகில்வாழ் முதலை
எற்றுநீர்க் கிடங்கி லிஞ்சிசூழ் தஞ்சை
 யிராசரா சேச்சரத் திவர்க்கே. 2

சடைகெழு மகுடந் தண்ணிலா விரிய
 வெண்ணிலா விரிதரு தரளக்

Koviloor Digital Library

குடைநிழல் விடைமேற் கொண்டுலாப் போதுங்
குறிப்பெனோ கோங்கிண ரனைய
குடைகெழு நிருபர் முடியொடு முடிதேய்ந்
துக்கசெஞ் சுடர்ப்படு குவையோங்
கிடைகெழு மாடத் திஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே. 3

வாழியம் போதத் தருகுபாய் விடையம்
வரிசையின் விளக்கலி வடுத்த
சூழலம் பளிங்கின் பாசல ராதிச்
சுடர்விடு மண்டலம் பொலியக்
காழகில் கமழு மாளிகை மகளிர்
கங்குல்வா யங்குலி கெழும
யாழொலி சிலம்பு மிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே. 4

எவருமா மறைக ளவையும்வா னவர்க
ளிட்டமுந் தாட்டிருக் கமலத்
தவருமா லவனு மறிவரும் பெருமை
யடலழ லுமிழ்தழற் பிழம்பர்
உவரிமா கடலி னொலிசெய்மா மறுகி
இறுகளிற் றரசின திட்டம்
இவருமால் வரைசெ யிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே. 5

Koviloor Digital Library

அருளுமா றருளி யாளுமா றாள
வடிகள்த மழகிய விழியுங்
குருளும்வார் காதுங் காட்டியான் பெற்ற
குயிலினை மயல்செய்வ தழகோ
தரளவான் குன்றிற் றண்ணிலா வொளியுந்
தருகுவால் பெருகுவான் றெருவில்
இருளெலாங் கிழியு மிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே. 6

தனிப்பெருந் தாமே முழுதுறப் பிறப்பின்
றளிரிறப் பிலையுதிர் வென்றால்
நினைப்பருந் தம்பாற் சேறலின் றேனும்
நெஞ்சிடித் துருகுவ தென்னோ
சுனைப்பெருங் கலங்கற் பொய்கையங் கழுநீர்ச்
சூழன்மா ளிகைசுடர் வீசும்
எனைப்பெரு மணஞ்செ யிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே. 7

பன்னெடுங் காலம் பணிசெய்து பழையோர்
தாம்பல ரேம்பலித் திருக்க
என்னெடுங் கோயி னெஞ்சுவீற் றிருந்த
வெளிமையை யென்றுநான் மறக்கேன்
மின்னெடும் புருவத் திளமயி லனையார்
விலங்கல்செய் நாடக சாலை

Koviloor Digital Library

இன்னடம் பயிலு மிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே. 8

மங்குல்சூழ் போதி னொழிவற நிறைந்து
வஞ்சகர் நெஞ்சகத் தொளிப்பார்
அங்கழற் சுடரா மவர்க்கிள வேன
லலர்கதி ரனையவா ழியரோ
பொங்கெழிற் றிருநீ றழிபொசி வனப்பிற்
புனறுளும் பவிர்சடை மொழுப்பர்
எங்களுக் கினிய ரிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே. 9

தனியரெத் தனையொ ராயிர வருமாந்
தன்மைய ரென்வயத் தினராங்
கனியரத் தருதீங் கரும்பர்வெண் புரிநூற்
கட்டிய ரட்டவா ரமிர்தர்
புனிதர்பொற் கழலர் புரிசடா மகுடர்
புண்ணியர் பொய்யிலா மெய்யர்க்
கினியரெத் தனையு மிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே. 10

சரளமந் தார சண்பக வகுள
சந்தன நந்தன வனத்தின்

Koviloor Digital Library

இருள்விரி மொழுப்பி னிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவரை
அருமருந் தருந்தி யல்லறீர் கருவூ
ரறைந்தசொன் மாலையீ ரைந்தின்
பொருள்மருந் துடையோர் சிவபத மென்னும்
பொன்னெடுங் குன்றுடை யோரே. 11

---

10. திருவிடைமருதூர்

பண்—பஞ்சமம்

வெய்யசெஞ் சோதி மண்டலம் பொலிய
வீங்கிருள் நடுநல்யா மத்தோர்
பையசெம் பாந்தள் பருமணி யுமிழ்ந்து
பாவியேன் காதல்செய் காதில்
ஐயசெம் பொற்றோட் டவிர்சடை மொழுப்பி
னழிவழ கியதிரு நீற்று
மையசெங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. 1

இந்திர லோக முழுவதும் பணிகேட்
டிணையடி தொழுதெழத் தாம்போய்
ஐந்தலை நாக மேகலை யரையா
வகந்தொறும் பலிதிரி யடிகள்

Koviloor Digital Library

தந்திரி வீணை கீதமும் பாடச்
சாதிகின் னரங்கலந் தொலிப்ப
மந்திர கீதந் தீங்குழ லெங்கும்
மருவிடந் திருவிடை மருதே. 2

பனிபடு மதியம் பயில்கொழுந் தன்ன
பல்லவம் வல்லியென் றிங்ஙன்
வினைபடு கனகம் போலயா வையுமாய்
வீங்குல கொழிவற நிறைந்து
துனிபடு கலவி மலைமக ளுடனாய்த்
தூங்கிருள் நடுநல்யா மத்தென்
மனனிடை யணுகி நுணுகியுள் கலந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. 3

அணியுமிழ் சோதி மணியினுள் கலந்தாங்
கடியனே னுள்கலந் தடியேன்
பணிமகிழ்ந் தருளு மரிவைபா கத்தன்
படர்சடை விடமிடற் றடிகள்
துணியுமி ழாடை யரையிலோ ராடை
சுடருமிழ் தரவத னருகே
மணியுமிழ் நாக மணியுமிழ்ந் திமைப்ப
மருவிடந் திருவிடை மருதே. 4

Koviloor Digital Library

பந்தமும் பிரிவுந் தெரிபொருட் பனுவற்
படிவழி சென்றுசென் றேறிச்
சிந்தையுந் தானுங் கலந்ததோர் கலவி
தெரியினுந் தெரிவுறா வண்ணம்
எந்தையுந் தாயும் யானுமென் றிங்ங
னெண்ணில்பல் லூழிக ளுடனாய்
வந்தணு காது நுணுகியுள் கலந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. 5

எரிதரு கரிகாட் டிடுபிண நிணமுண்
டேப்பமிட் டிலங்கெயிற் றழல்வாய்த்
துருகழ னெடும்பேய்க் கணமெழுந் தாடுந்
தூங்கிருள் நடுநல்யா மத்தே
அருள்புரி முறுவல் முகிழ்நிலா வெறிப்ப
வந்திபோன் றொளிர்திரு மேனி
வரியரா வாட வாடுமெம் பெருமான்
மருவிடந் திருவிடை மருதே. 6

எழிலையாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பி
னின்றுளி படநனைந் துருகி
அழலையாழ் புருவம் புனலொடுங் கிடந்தாங்
காதனேன் மாதரார் கலவித்

Koviloor Digital Library

தொழிலையாழ் நெஞ்ச மிடர்படாவண்ணந்
தூங்கிருள் நடுநல்யா மத்தோர்
மழலையாழ் சிலம்ப வந்தகம் புகுந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. 7

வையவாம் பெற்றம் பெற்றமே றுடையார்
மாதவர் காதல்வைத் தென்னை
வெய்யவாஞ் செந்தீப் பட்டவிட் டிகைபோல்
விழுமியோன் முன்புபின் பென்கோ
நொய்யவா றென்ன வந்துள்வீற் றிருந்த
நூறுநூ றாயிர கோடி
மையவாங் கண்டத் தண்டவா ணவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. 8

கலங்கலம் பொய்கைப் புனற்றெளி விடத்துக்
கலந்தமண் ணிடைக்கிடந் தாங்கு
நலங்கலந் தடியேன் சிந்தையுட் புகுந்த
நம்பனே வம்பனே னுடைய
புலங்கலந் தவனே யென்றுநின் றுருகிப்
புலம்புவா ரவம்புகா ரருவி
மலங்கலங் கண்ணிற் கண்மணி யனையான்
மருவிடந் திருவிடை மருதே. 9

Koviloor Digital Library

ஒருங்கிருங் கண்ணி னெண்ணில்புன் மாக்க
ளுறங்கிருள் நடுநல்யா மத்தோர்
கருங்கணின் றிமைக்குஞ் செழுஞ்சுடர் விளக்கங்
கலந்தெனக் கலந்துணர் கருவூர்
தருங்கரும் பனைய தீந்தமிழ் மாலை
தடம்பொழில் மருதயா ழுதிப்ப
வருங்கருங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. 10

Koviloor Digital Library

பூந்துருத்திநம்பி காடநம்பி

அருளிச் செய்த

திருவிசைப்பா

1. திருவாரூர்

பண் – பஞ்சமம்

கைக்குவான் முத்தின் சரிவளை பெய்து
கழுத்திலோர் தனிவடங் கட்டி
முக்கணு யகராய்ப் பவனிபோந் திங்கள்
முரிவதோர் முரிவுமை யளவுந்
தக்கசீர்க் கங்கை யளவுமன் றென்னோ
தம்மொருப் பாடுல கதன்மேல்
மிக்கசீ ராரூ ராதியாய் வீதி
விடங்கராய் நடங்குலா வினரே. 1

பத்தியா யுணர்வோ ரருளைவாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா விருக்குந் தேவர்கா ளிவர்தந்
திருவுரு விருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமா யுலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமா யதற்கோர்
வித்துமா யாரூ ராதியாய் வீதி
விடங்கராய் நடங்குலா வினரே. 2

Koviloor Digital Library

2. கோயில் – முத்துவயிரமணி

பண்-சாளரபாணி

முத்து வயிரமணி மாணிக்க மாலை கண்மேல்
தொத்து மிளிர்வனபோல் தூண்டு விளக்கேய்ப்ப
எத்திசையும் வானவர்க ளேத்து மெழிற்றில்லை
அத்தனுக்கு மம்பலமே யாடரங்க மாயிற்றே. 1

கடியார் கணம்புல்லர் கண்ணப்ப ரென்றுன்
அடியா ரமருலக மாளநீ யாளாதே
முடியாமுத் தீவேள்வி மூவாயி ரவரொடுங்
குடிவாழ்க்கை கொண்டுநீ குலாவிக்கூத்
தாடினையே. 2

அல்லியம் பூம்பழனத் தாமூர்நா வுக்கரசைச்
செல்லநெறி வகுத்த சேவகனே தென்றில்லைக்
கொல்லை விடையேறி கூத்தா டரங்காகச்
செல்வம் நிறைந்தசிற் றம்பலமே சேர்ந்தனையே.

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட்
டெமையாளுஞ்
சம்பந்தன் காழியர்கோன் றன்னைமாட்
கொண்டருளி

Koviloor Digital Library

அம்புற்ற கண்ணாளுந் தானு மணி தில்லைச்
செம்பொன்செ யம்பலமே சேர்ந்திருக்கை
யாயிற்றே. 4

களையா வுடலோடு சேரமா னாரூரன்
விளையா மதமாறா வெள்ளானை மேல்கொள்ள
முளையா மதிசூடி முவாயி ரவரொடு
மளையா விளையாடு மம்பலநின் னாடரங்கே. 5

அகலோக மெல்லா மடியவர்க டற்சூழப்
புகலோக முண்டென்று புகுமிடநீ தேடாதே
புவலோக நெறிபடைத்த புண்ணியங்கள்
நண்ணியசீர்ச்
சிவலோக மாவதுவுந் தில்லைச்சிற் றம்பலமே. 6

களகமணி மாடஞ் சூளிகைசூழ் மாளிகைமேல்
அளகமதி நுதலா ராயிழையார் போற்றிசைப்ப
ஒளிகொண்ட மாமணிக ளோங்கிருளை
யாங்ககற்றுந்
தெளிகொண்ட தில்லைச்சிற் றம்பலமே
சேர்ந்தனையே. 7

பாடகமு நூபுரமும் பல்சிலம்பும்
போர்த்தொலிப்பச்
சூடகக்கை நல்லார் தொழுதேத்தத்
தொல்லுலகில்

Koviloor Digital Library

நாடகத்தின் கூத்தை நவிற்றுமவர் நாடோறும்
ஆடகத்தால் மேய்ந்தமைந்த வம்பலநின்
னாடரங்கே. 8

உருவத் தெரியுருவா யூழிதோ றெத்தனையும்
பாவிக் கிடந்தயனு மாலும் பணிந்தேத்த
இரவிக்கு நேராகி யேய்ந்திலங்கு மாளிகைசூழ்ந்
தரவிக்கு மம்பலமே யாடரங்க மாயிற்றே. 9

சேட ருறைதில்லைச் சிற்றம் பலத்தான்றன்
ஆட லதிசயத்தை யாங்கறிந்து பூந்துருத்திக்
காடன் றமிழ்மாலை பத்துங் கருத்தறிந்து
பாடு மிவைவல்லார் பற்றுநிலை பற்றுவரே. 10

Koviloor Digital Library

கண்டராதித்தர்

அருளிச் செய்த

திருவிசைப்பா

1. கோயில் - மின்னாருருவம்

பண் – பஞ்சமம்

மின்னாருருவ மேல்விளங்க
வெண்கொடிமா ளிகைசூழப்
பொன்னார்குன்ற மொன்றுவந்து
நின்றது போலுமென்னாத்
தென்னாவென்று வண்டுபாடுந்
தென்றில்லை யம்பலத்துள்
என்னாரமுதை யெங்கள்கோவை
யென்றுகொ லெய்துவதே. 1

ஓவாமுத்தீ யஞ்சுவேள்வி
யாறங்க நான்மறையோர்
ஆவேபடுப்பா ரந்தணாளர்
ராகுதி வேட்டுயர்வார்
மூவாயிரவர் தங்களோடு
முன்னரங் கேறி நின்ற

Koviloor Digital Library

கோவேயுன்றன் கூத்துக்காணக்
கூடுவ தென்றுகொலோ. 2

முத்தீயாளர் நான்மறையர்
மூவா யிரவர்நின்னோ
டொத்தேவாழுந் தன்மையாள
ரோதிய நான்மறையைத்
தெத்தேயென்று வண்டுபாடுந்
தென்றில்லை யம்பலத்துள்
அத்தாவுன்ற னாடல்காண
வணைவது மென்றுகொலோ. 3

மானைப்புரையு மடமென்னோக்கி
மாமலை யாளோடும்
ஆனைஞ்சாடுஞ் சென்னிமேலோ
ரம்புலி சூடுமரன்
தேனைப்பாலைத் தில்லைமல்கு
செம்பொனி னம்பலத்துக்
கோனை ஞானக் கொழுந்துதன்னைக்
கூடுவ தென்றுகொலோ. 4

களிவானுலகிற் கங்கைநங்கை
காதலனே யருளென்
றொளிமான்முன்னே வரங்கிடக்க
வுன்னடியார்க் கருளுந்

Koviloor Digital Library

தெளிவாரமுதே தில்லைமல்கு
செம்பொனி னம்பலத்துள்
ஒளிவான்சுடரே யுன்னைநாயே
னுறுவது மென்றுகொலோ. 5

பாரோர்முழுதும் வந்திறைஞ்சப்
பதஞ்சலிக் காட்டுகந்தான்
வாரார்முலையாள் மங்கைபங்கன்
மாமறையோர் வணங்கச்
சீரான்மல்கு தில்லைச்செம்பொ
னம்பலத் தாடுகின்ற
காரார்மிடற்றெங் கண்டனாரைக்
காண்பது மென்றுகொலோ. 6

இலையார்கதிர்வே லிலங்கைவேந்த
னிருபது தோளுமிற
மலை தானெடுத்த மற்றவற்கு
வாளொடு நாள்கொடுத்தான்
சிலையாற்புரமூன் றெய்தவில்லி
செம்பொனி னம்பலத்துக்
கலையார்மறிபொற் கையினானைக்
காண்பது மென்றுகொலோ. 7

வெங்கோல்வேந்தன் றென்னனாடு
மீழமுங் கொண்டதிறற்

Koviloor Digital Library

செங்கோற் சோழன் கோழிவேந்தன்
செம்பியன் பொன்னணிந்த
அங்கோல்வளையார் பாடியாடு
மணிதில்லை யம்பலத்துள்
எங்கோனீச னெம்மிறையை
யென்றுகொ லெய்துவதே. 8

நெடியானோடு நான்முகனும்
வானவரு நெருங்கி
முடியான் முடிகள் மோதியுக்க
முழுமணி யின்றிரளை
அடியாரலகி னாற்றிரட்டு
மணிதில்லை யம்பலத்துக்
கடியார்கொன்றை மாலை யானைக்
காண்பது மென்றுகொலோ. 9

சீரான்மல்கு தில்லைச்செம்பொ
னம்பலத் தாடிதன்னைக்
காரார் சோலைக் கோழிவேந்தன்
றஞ்சையர் கோன்கலந்த
ஆராவின்சொற் கண்டராதித்த
னருந்தமிழ் மாலைவல்லார்
பேராவுலகிற் பெருமையோடும்
பேரின்ப மெய்துவரே. 10

Koviloor Digital Library

வேணாட்டடிகள்

அருளிச் செய்த

திருவிசைப்பா

1. கோயில் - துச்சான

பண் - புறநீர்மை

துச்சான செய்திடினும்
பொறுப் பரன்றே யாளுகப்பார்
கைச்சாலுஞ் சிறுகதலி
யிலைவேம் புங்கறிகொள்வார்
எச்சார்வு மில்லாமை
நீயறிந்து மெனதுபணி
நச்சாய்காண் திருத்தில்லை
நடம்பயிலு நம்பானே. 1

தம்பானை சாய்ப்பற்றா
ரென்னு முது சொல்லும்
எம்போல்வார்க் கில்லாமை
யென்னளவே யறிந்தொழிந்தேன்
வம்பாணர் பணியுகத்தி
வழியடியேன் றொழிலிறையும்
நம்பாய் காண் டிருத்தில்லை
நடம்பயிலு நம்பானே. 2

Koviloor Digital Library

பொசியாதோ கீழ்க்கொம்பு
நிறைகுளமென் றதுபோலத்
திசைநோக்கிப் பேழ்கணித்துச்
சிவபெருமா னோவெனினும்
இசையானா லென்றிறத்து
மெனையுடையா ளுரையாடாள்
நசையானேன் றிருத்தில்லை
நடம்பயிலு நம்பானே. 3

ஆயாத சமயங்க
ளவரவர்கள் முன்பென்னை
நோயோடு பிணிநலிய
விருக்கின்ற வதனாலே
பேயாவித் தொழும்பனைத்தம்
பிரானிகழு மென்பித்தாய்
நாயேனைத் திருத்தில்லை
நடம்பயிலு நம்பானே. 4

நின்றுநினைந் திருந்துகிடந்
தெழுந்துதொழுந் தொழும்பனேன்
ஒன்றியொரு காலினையா
திருந்தாலு மிருக்கவொட்டாய்

Koviloor Digital Library

கன்றுபிரி கற்றாப்போற்
கதறுவித்தி வரவுநில்லாய்
நன்றிதுவோ திருத்தில்லை
நடம்பயிலு நம்பானே. 5

படுமதமு மிடவயிறு
முடையகளி றுடையபிரான்
அடியறிய வுணர்த்துவது
மகத்தியனுக் கோத்தன்றே
இடுவதுபுல் லோரெருதுக்
கொன்றினுக்கு வையிடுதல்
நடுவிதுவோ திருத்தில்லை
நடம்பயிலு நம்பானே. 6

மண்ணோடு விண்ணளவு
மனிதரொடு வானவர்க்குங்
கண்ணாவாய் கண்ணாகா
தொழிதலுநான் மிகக்கலங்கி
அண்ணாவோ வென்றண்ணாந்
தலமந்து விளித்தாலும்
நண்ணாயாற் றிருத்தில்லை
நடம்பயிலு நம்பானே. 7

வாடாவாய் நாப்பிதற்றி
யுனைநினைந்து நெஞ்சுருகி

Koviloor Digital Library

வீடாஞ்செய் குற்றேவ
லெற்றேமற் றிதுபொய்யிற்
கூடாமே கைவந்து
குறுகுமா றியானுன்னை
நாடாயாற் றிருத்தில்லை
நடம்பயிலு நம்பானே. 8

வாளாமா லயன்வீழ்ந்து
காண்பரிய மாண்பிதனைத்
தோளாரக் கையாரத்
துணையாரத் தொழுதாலும்
ஆளோநீ யுடையதுவு
மடியேனுன் றாள்சேரும்
நாளேதோ திருத்தில்லை
நடம்பயிலு நம்பானே. 9

பாவார்ந்த தமிழ்மாலை
பத்தரடித் தொண்டனெடுத்
தோவாதே யழைக்கின்றா
னென்றருளி நன்றுமிகத்
தேவேதென் றிருத்தில்லைக்
கூத்தாடீ நாயடியேன்
சாவாயு நினைக்காண்ட
லினியுனக்குத் தடுப்பரிதே. 10

Koviloor Digital Library

திருவாலியமுதனார்

அருளிச் செய்த

திருவிசைப்பா

1. கோயில்-பாதாதிகேசம்

(திருவடிமுதல் திருமுடி முடிய)

பண்-பஞ்சமம்

மையன் மாதொரு கூறன்மால்விடை
யேறிமான்மறி யேந்தியதடங்
கையன்கார்புரை யுங்கறைக்
கண்டன் கனன்மழுவான்
ஐயனாரழ லாடுவானணி
நீர்வயற்றில்லை யம்பலத்தான்
செய்யபாதம் வந்தென் சிந்தை
யுள்ளிடங் கொண்டனவே. 1

சலம்பொற்றாமரை தாழ்ந்தெழுந்த
தடமுந்தடல்புனல் வாய்மலர் தழீஇ
அலம்பிவண் டறையுமணி
யார்தில்லை யம்பலவன்

Koviloor Digital Library

புலம்பிவானவர் தானவர்புகழ்ந்
தேத்தவாடுபொற் கூத்தனார்கழற்
சிலம்புகிங்கிணி யென்சிந்தை
யுள்ளிடங் கொண்டனவே. 2

சுருண்ட வார்குழற் கோதைமார்குயில்
போன்மிழற்றிய கோலமாளிகை
திரண்ட தில்லைதன்னுட்
டிருமல்கு சிற்றம்பலவன்
மருண்டுமாமலை யாண்மகடொழ
வாடுங்கூத்தன் மணிபுரைதரு
திரண்டவான்குறங் கென்சிந்தை
யுள்ளிடங் கொண்டனவே. 3

போழ்ந்தியானை தன்னைப்பொருப்பன்
மகளுமையச்சங் கண்டவன்
தாழ்ந்ததண்புனல் சூழ்தட
மல்குசிற் றம்பலவன்
சூழ்ந்தபாய்புலித் தோன்மிசைத்
தொடுத்துவீக்கும் பொன்னூறன்னினொடு
தாழ்ந்த கச்சதன்றே
தமியேனைத் தளர்வித்ததே. 4

Koviloor Digital Library

பந்தபாச மெலாமறப்பசு
பாசநீக்கிய பன்முனிவரோ
டந்தணர் வணங்கு
மணியார்தில்லை யம்பலவன்
செந்தழல்புரை மேனியுந்திகழும்
திருவயிறும் வயிற்றினுள்
உந்திவான்சுழி யென்னுள்ளத்
துள்ளிடங் கொண்டனவே. 5

குதிரைமாவொடு தேர்பலகுவிந்
தீண்டுதில்லையுட் கொம்பனாரொடு
மதுரவாய் மொழியார்
மகிழ்ந்தேத்துசிற் றம்பலவன்
அதிரவார்கழல் வீசிநின்றழ
காநடம்பயில் கூத்தன்மேற்றிக
ழுதரபந்தன மென்னுள்ளத்
துள்ளிடங் கொண்டனவே. 6

படங்கொள்பாம்பணை யானொடுபிரமன்
பரம்பரமா வருளென்று
தடங்கையாற் றொழவுந்தழ
லாடுசிற் றம்பலவன்
தடங்கைநான்குந் தோள்களுந்தட
மார்பினிற்பூண்கண் மேற்றிசை

Koviloor Digital Library

விடங்கொள் கண்டமன்
றேவினையேனை மெலிவித்ததே. 7

செய்யகோடுடன் கமலமலர்சூழ்தரு
தில்லைமாமறை யோர்கடாந்தொழ
வையமுய்ய நின்றுமகிழ்ந்
தாடுசிற் றம்பலவன்
செய்யவாயின் முறுவலுந் திகழுந்
திருக்காதுங்காதினின் மாத்திரைகளோ
டையதோடுமன் றேயடி
யேனையாட் கொண்டனவே. 8

செற்றுவன்புரந் தீயெழச்சிலை
கோலியாரழ லூட்டினானவன்
எற்றிமா மணிகளெறி
நீர்த்தில்லை யம்பலவன்
மற்றைநாட்ட மிரண்டொடு
மலருந்திருமுகமு முகத்தினுள்
நெற்றிநாட்டமன்றேநெஞ்சு
ளேதிளைக் கின்றனவே. 9

தொறுக்கன்வான் கமல மலருழக்கக்
கரும்புநற் சாறுபாய்தர
மறுக்கமாய்க் கயல்கண்மடை
பாய்தில்லை யம்பலவன்

Koviloor Digital Library

முறுக்குவாசிகை தன்னொடு முகிழ்த்தவவ்
வகத்திமொட் டொடுமத்தமும்
பிறைக்கொள் சென்னியன்றே
பிரியாதென்னு ணின்றனவே. 10

தூவிநீரொடு பூவவைதொழு
தேத்துகையின ராகிமிக்கதோ
ராவியுள் ணிறுத்தி
யமர்ந்தூறிய வன்பினராய்த்
தேவர்தாந்தொழ வாடியதில்லைக்
கூத்தனைத்திரு வாலிசொல்லிவை
மேவ வல்லவர்கள்
விடையானடி மேவுவரே. 11

---

2. கோயில்—பவளமால்வரை

பண்—நட்டராகம்

பவளமால் வரையைப் பனிபடர்ந் தனையதோர்
படரொளி தருதிரு நீறுங்
குவளைமா மலர்க் கண்ணியுங் கொன்றையுந்
துன்றுபொற் குழற்றிருச் சடையுந்

Koviloor Digital Library

திவள மாளிகை சூழ்தரு தில்லையுட்
டிருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறுமென்மனந்
தழன்மெழு கொக்கின்றதே. 1

ஒக்கவோட்டந்த வந்தியு மதியமு
மலைகட லொலியோடு
நெக்கு வீழ்தரு நெஞ்சினைப் பாய்தலும்
நிறையழிந் திருப்பேனைச்
செக்கர் மாளிகை சூழ்தரு தில்லையுட்
டிருநடம் வகையாலே
பக்கமோட்டந்த மன்மதன் மலர்க்கணை
படுந்தொறு மலந்தேனே. 2

அலந்து போயினே னம்பலக் கூத்தனே
யணிதில்லை நகராளீ
சிலந்தி யையர சாள்கவென் றருள்செய்த
தேவதே வீசனே
உலர்ந்தமார்க் கண்டிக் காகியக் காலனை
யுயிர்செக வுதைகொண்ட
மலர்ந்த பாதங்கள் வனமுலை மேலொற்ற
வந்தருள் செய்யாயே. 3

அருள்செய் தாடுநல் லம்பலக் கூத்தனே
யணிதில்லை நகராளீ

Koviloor Digital Library

மருள்செய் தென்றனை வனமுலை
பொன்பயப்
பிப்பது வழக்காமோ
திரளு நீண்மணிக் கங்கையைத் திருச்சடைச்
சேர்த்தியச் செய்யாளுக்
குருவம் பாகமு மீந்துநல் லந்தியை
யொண்ணுதல் வைத்தோனே. 4

வைத்த பாதங்கண் மாலவன் காண்கிலன்
மலரவன் முடிதேடி
எய்த்து வந்திழிந் தின்னமுந் துதிக்கின்றா
ரெழின்மறை யவற்றாலே
செய்த்தலைக் கமலம் மலர்ந் தோங்கிய
தில்லையம் பலத்தானைப்
பத்தியாற் சென்று கண்டிட வென்மனம்
பதைபதைப் பொழியாதே. 5

தேய்ந்து மெய்வெளுத் தகம்வளைந்
தரவினை
யஞ்சித்தா னிருந்தேயுங்
காய்ந்து வந்துவந் தென்றனை வலிசெய்து
கதிர்நிலா வெரிதூவு
மாய்ந்த நான்மறை யந்தணர் தில்லையு
ளம்பலத் தரனாடல்
வாய்ந்த மாமலர்ப் பாதங்கள் காண்பதோரி
மனத்தினை யுடையேற்கே. 6

Koviloor Digital Library

உடையும் பாய்புலித் தோலுநல் லரவமு
முண்பதும் பலிதேர்ந்து
விடைய தூர்வது மேவிடங் கொடுவரை
யாகிலு மென்னெஞ்சம்
மடைகொள் வாளைகள் குதிகொளும்
வயற்றில்லை
யம்பலத் தனலாடும்
உடைய கோவினை யலறிமற் றாரையு
முள்ளுவ தறியேனே. 7

அறிவு மிக்கநன் னாணமு நிறைமையு
மாசையு மிங்குள்ள
உறவும் பெற்றநற் றாயொடு தந்தையு
முடன்பிறந் தவரோடும்
பிறிய விட்டுனை யடைந்தன னேன்றுகொள்
பெரும்பற்றப் புலியூரின்
மறைக ணான்குங்கொண் டந்தண
ரேத்தநன்
மாநட மகிழ்வானே. 8

வான நாடுடை மைந்தனே யோவென்பன்
வந்தருளா யென்பன்
பாலொ யைந்துட னாடிய படர்சடைப்
பால்வண்ண னேயென்பன்

Koviloor Digital Library

தேனமர் பொழில் சூழ்தரு தில்லையுட்
டிருநடம் புரிகின்ற
ஏன மாமணிப் பூணணி மார்பனே
யெனக்கருள் புரியாயே. 9

புரியும் பொன்மதில் சூழ்தரு தில்லையுட்
பூசுரர் பலர்போற்ற
எரிய தாடுமெம் மீசனைக் காதலித்
தினையவண் மொழியாக
வரைசெய் மாமதின் மயிலையர் மன்னவன்
மறைவல திருவாலி
பரவல் பத்திவை வல்லவர் பரமன
தடியிணை பணிவாரே. 10

---

3. கோயில்—அல்லாய்ப் பகலாய்

பண்-இந்தளம்

அல்லாய்ப் பகலா யருவா
யுருவா யாரா வமுதமாய்க்
கல்லா னிழலாய் கயிலை
மலையாய் காண வருளென்று

Koviloor Digital Library

பல்லா யிரம்பேர் பதஞ்ச
　　லிகள் பரவ வெளிப்பட்டுச்
செல்வாய் மதிற் றில்லைக்
　　கருளித் தேவ னாடுமே. 1

அன்ன நடையா ரமுத
　　மொழியா ரவர்கள் பயில்தில்லைத்
தென்னன் தமிழும் இசையுங்
　　கலந்த சிற்றம் பலந்தன்னுள்
பொன்னு மணியும் இரந்த
　　தலத்துப் புலித்தோல் பியற்கிட்டு
மின்னி னிடையா ளுமையாள்
　　காண விகிர்த னாடுமே. 2

இளமென் முலையா ரெழின்மைந்
　　தரொடு மேரா ரமளிமேல்
திளையு மாடத் திருவார்
　　தில்லைச் சிற்றம் பலந்தன்னுள்
வளர்பொன் மலையுள் வயிர
　　மலைபோல் வலக்கை கவித்துநின்
றளவில் பெருமை யமரர்
　　போற்ற வழக னாடுமே. 3

Koviloor Digital Library

சந்து மகிலுந் தழைப்பீ
லிகளுஞ் சாதி பலவுங்கொண்
டுந்தி யிழியு நிவவின்
கரைமே லுயர்ந்த மதிற்றில்லைச்
சிந்திப் பரிய தெய்வப்
பதியுட் சிற்றம் பலந்தன்னுள்
நந்தி முழவங் கொட்ட
நட்ட நாத னாடுமே. 4

ஓமப் புகையு மகிலின்
புகையு முயர்ந்து முகிறோயத்
தீமெய்த் தொழிலார் மறையோர்
மல்கு சிற்றம் பலந்தன்னுள்
வாமத் தெழிலா ரெடுத்த
பாத மழலைச் சிலம்பார்க்கத்
தீமெய்ச் சடைமேற் றிங்கள்
சூடித் தேவ னாடுமே 5

குரவங் கோங்கங் குளிர்புன்னை
கைதை குவிந்த கரைகள்மேல்
திரைவந் துலவுந் தில்லை
மல்கு சிற்றம் பலந்தன்னுள்
வரைபோன் மலிந்த மணிமண்
டபத்து மறையோர் மகிழ்ந்தேத்த

Koviloor Digital Library

அரவ மாட வனல்கை
யேந்தி யழக னாடுமே. 6

சித்தர் தேவ ரியக்கர்
முனிவர் தேனார் பொழிற்றில்லை
அத்தா வருளா யணியம்
பலவா வென்றென் றவரேத்த
முத்து மணியும் நிரந்த
தலத்துள் முளைவெண் மதிசூடிக்
கொத்தார் சடைக டாழ
நட்டங் குழக னாடுமே. 7

அதித்த வரக்க னெரிய
விரலா லடர்த்தா யருளென்று
துதித்து மறையோர் வணங்குந்
தில்லைச் சிற்றம் பலந்தன்னுள்
உதித்த போழ்தி லிரவிக்
கதிர்போ லொளிர்மா மணியெங்கும்
பதித்த தலத்துப் பவள
மேனிப் பரம னாடுமே. 8

மாலோ டயனு மமரர்
பதியும் வந்து வணங்கிநின்
றால கண்டா வரனே
யருளா யென்றென் றவரேத்தச்

Koviloor Digital Library

சேலா டும்வயற் றில்லை
மல்கு சிற்றம் பலந்தன்னுள்
பாலா டுமுடிச் சடைக
டாழப் பரம னாடுமே. 9

நெடிய சமணு மறைசாக்
கியரும் நிரம்பாப் பல்கோடிச்
செடியுந் தவத்தோ ரடையாத்
தில்லைச் சிற்றம் பலந்தன்னுள்
அடிக ளவரை யாரூர்
நம்பி யவர்க ளிசைபாடக்
கொடியும் விடையு முடைய
கோலக் குழக னாடுமே. 10

வானோர் பணிய மண்ணோ
ரேத்த மன்னி நடமாடுந்
தேனார் பொழில்சூழ் தில்லை
மல்கு சிற்றம் பலத்தானைத்
தூநான் மறையா னமுத
வாலி சொன்ன தமிழ்மாலைப்
பானேர் பாடல் பத்தும்
பாடப் பாவ நாசமே. 11

Koviloor Digital Library

4. கோயில்—கோலமலர்

பண் - பஞ்சமம்

*கோலமலர் நெடுங்கட்
கொவ்வைவாய்க்கொடி யேரிடையீர்
பாலினை யின்னமுதைப்
பரமாய பரஞ்சுடரைச்
சேலுக ளும்வயல்சூழ்
தில்லைமாநகர்ச் சிற்றம்பலத்
தேலவுடை யெம்மிறையை
யென்றுகொல் காண்பதுவே. 1

காண்பதி யானென்றுகொல்
கதிர்மாமணி யைக்கனலை
ஆண்பெண் ணருவுருவென்
றறிதற்கரி தாயவனைச்
சேண்பணை மாளிகைசூழ்
தில்லை மாநகர்ச் சிற்றம்பல
மாண்புடை மாநடஞ்செய்
மறையோன்மலர்ப் பாதங்களே. 2

---

*இப் பதிகம் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது.

Koviloor Digital Library

கள்ளவிழ் தாமரைமேற்
கண்டயனொடு மால்பணிய
ஒள்ளெரி யின்னடுவே
யுருவாய்ப்பரந் தோங்கியசீர்த்
தெள்ளிய தண்பொழில்சூழ்
தில்லைமாநகர் சிற்றம்பலத்
துள்ளெரி யாடுகின்ற
வொருவனை யுணர்வரிதே. 3

அரிவையோர்கூறுகந்தா
னழகன்னெழில் மால்கரியின்
உரிவைநல் லுத்தரிய
முகந்தானும் பரார்தம்பிரான்
புரிபவர்க் கின்னருள்செய்
புலியூர்த்திருச் சிற்றம்பலத்
தெரிமகிழ்ந் தாடுகின்ற
வெம்பிரானென் னிறையவனே. 4

இறைவனை யென்கதியை
யென்னுள்ளேயுயிர்ப் பாகிநின்ற
மறைவனை மண்ணும்விண்ணு
மலிவான்சுட ராய்மலிந்த
சிறையணி வண்டறையுந்
தில்லைமாநகர்ச் சிற்றம்பலம்

Koviloor Digital Library

நிறையணி யாமிறையை
நினைத்தேனினிப் போக்குவனே. 5

நினைத்தே னினிப்போக்குவனோ
நிமலத் திரளை நினைப்பார்
மனத்தி னுளேயிருந்த
மணியைமணி மாணிக்கத்தைக்
கனைத்திழி யுங்கழனிக்
கனகங்கதி ரொண்பவளஞ்
சிலைத்தொடு வந்தெறியுந்
தில்லைமாநகர்க் கூத்தனையே. 6

கூத்தனை வானவர்தங்
கொழுந்தைக்கொழுந் தாயெழுந்த
மூத்தனை மூவுருவின்
முதலைமுத லாகிநின்ற
ஆத்தனைத் தான்படுக்கு
மந்தணர்தில்லை யம்பலத்துள்
ஏத்தநின் றாடுகின்ற
வெம்பிரானடி சேர்வன்கொலோ. 7

சேர்வன்கொலோ வன்னைமீர்
திகழுமலர்ப் பாதங்களை
ஆர்வங்கொளத் தழுவி
யணிநீறென் முலைக்கணியச்

Koviloor Digital Library

சீர்வங்கம் வந்தணவுந்
தில்லைமாநகர்ச் சிற்றம்பலத்
தேர்வங்கை மான்மறிய
னெம்பிரானென்பால் நேசனையே. 8

நேசமுடையவர்கள்
நெஞ்சுளேயிடங் கொண்டிருந்த
காய்சின மால்விடையூர்
கண்ணுதலைக் காமருசீர்த்
தேசமிகு புகழோர்
தில்லைமாநகர்ச் சிற்றம்பலத்
தீசனை யெவ்வுயிர்க்கு
மெம்மிறைவனென் றேத்துவனே. 9

இறைவனை யேத்துகின்ற
விளையாள்மொழி யின்றமிழால்
மறைவல நாவலர்கள்
மகிழ்ந்தேத்துசிற் றம்பலத்தை
அறைசெந்நெல் வான்கரும்பி
னணியாலைகள் சூழ்மயிலை
மறைவல வாலிசொல்லை
மகிழ்ந்தேத்துக வானெளிதே. 10

Koviloor Digital Library

புருடோத்தம நம்பி

அருளிச் செய்த

திருவிசைப்பா

1. கோயில்—வாரணி

பண்—பஞ்சமம்

வாரணி நறுமலர் வண்டு கிண்டு
பஞ்சமஞ் செண்பக மாலை மாலை
வாரணி வனமுலை மெலியும் வண்ணம்
வந்துவந் திவைநம்மை மயக்கு மாலோ
சீரணி மணிதிகழ் மாட மோங்கு
தில்லையம் பலத்தெங்கள் செல்வன்வாரான்
ஆரெனை யருள்புரிந் தஞ்ச லென்பா
ராவியின் பரமென்ற னாதரவே. 1

ஆவியின் பரமென்ற னாதரவு
மருவினை யேனைவிட் டம்மவம்ம
பாவிவன் மனமிது பையவேபோய்ப்
பனிமதிச் சடையான் பாலதாலோ
நீவியும் நெகிழ்ச்சியும் நிறையழிவும்
நெஞ்சமுந் தஞ்சமி லாமையாலே

Koviloor Digital Library

பாவியின் வருத்தமி தாரறிவா
ரம்பலத் தருநட மாடுவானே. 2

அம்பலத் தருள்நட மாடவேயும்
யாதுகொல் விளைவதென் றஞ்சிநெஞ்சம்
உம்பர்கள் வன்பழி யாளர்முன்னே
யூட்டினர் நஞ்சையென் றேயுமுய்யேன்
வன்பல படையுடைப் பூதஞ்சூழ
வானவர் கணங்களை மாற்றியாங்கே
என்பெரும் பயலைமை தீரும்வண்ண
மெழுந்தரு ளாயெங்கள் வீதியூடே. 3

எழுந்தருளா யெங்கள் வீதியூடே
யேதமில் முனிவரோ டெழுந்தஞானக்
கொழுந்தது வாகிய கூத்தனேநின்
குழையணி காதினின் மாத்திரையுஞ்
செழுந்தட மலர்புரை கண்கள் மூன்றுஞ்
செங்கனி வாயுமென் சிந்தைவெளவ
அழுந்துமென் னாருயிர்க் கென்செய்கேனோ
அரும்புன லலமருஞ் சடையினானே. 4

அரும்புன லலமருஞ் சடையினானை
யமரர்க ளடிபணிந் தரற்றவந்நாட்

Koviloor Digital Library

பெரும்புர மெரிசெய்த சிலையின்வார்த்தை
பேசவு நையுமென் பேதைநெஞ்சங்
கருந்தட மலர்புரை கண்டவண்டார்
காரிகை யார்முன்பென் பெண்மை
தோற்றேன்
திருந்திய மலரடி நசையினாலே
தில்லையம் பலத்திதெங்கள் தேவதேவே. 5

தில்லையம் பலத்தெங்கள் தேவதேவைத்
தேறிய வந்தணர் சிந்தைசெய்யும்
எல்லைய தாகிய வெழில்கொள்சோதி
யென்னுயிர் காவல்கொண்டிருந்தவெந்தாய்
பல்லையார் பசுந்தலை யோடிடறிப்
பாதமென் மலரடி நோவநீபோய்
அல்லினி லருநட மாடிலெங்க
ளாருயிர் காவலிங் கரிதுதானே. 6

ஆருயிர் காவலிங் கருமையாலே
யந்தணர் மதலைநின் னடிபணியக்
கூர்நுனை வேற்படைக் கூற்றஞ்சாயக்
குரைகழல் பணிகொள மலைந்தவென்றால்
ஆரினி யமரர்கள் குறைவிலாதா
ரவரவர் படுதுயர் களையநின்ற

Koviloor Digital Library

சீருயி ரேயெங்கள் தில்லைவாணா
    சேயிழை யார்க்கினி வாழ்வரிதே. 7

சேயிழை யார்க்கினி வாழ்வரிது
    திருச்சிற்றம் பலத்தெங்கள் செல்வனே நீ
தாயினுமிக நல்லை யென்றடைந்தேன்
    தனிமையை நினைகிலை சங்கராவுன்
பாயிரும் புலியத ளின்னுடையும்
    பையமே லெடுத்தபொற் பாதமுங்கண்
டேயிவ ளிழந்தது சங்கமாவா
    வெங்களை யாளுடை யீசனேயோ. 8

எங்களை யாளுடை யீசனேயோ
    விளமுலை முகநெக முயங்கிநின்பொற்
பங்கயம் புரைமுக நோக்கிநோக்கிப்
    பனிமதி நிலவதென் மேற்படரச்
செங்கயல் புரைகண்ணி மார்கள்முன்னே
    திருச்சிற்றம் பலமுட னேபுகுந்து
அங்குன பணிபல செய்துநாளும்
    அருள்பெறி னகலிடத் திருக்கலாமே. 9

அருள்பெறி னகலிடத் திருக்கலாமென்
    றமரர்கள் தலைவனு மயனுமாலும்.

Koviloor Digital Library

இருவரு மறிவுடை யாரின்மிக்கா
ரேத்துகின் றாரின்ன மெங்கள் கூத்தை
மருள்படு மழலைமென் மொழியுமையாள்
கணவனை வல்வினை யாட்டியேனான்
அருள்பெற வலமரு நெஞ்சமாவா
ஆசையை யளவறுத் தாரிங்காரே. 10

ஆசையை யளவறுத் தாரிங்காரே
யம்பலத் தருநட மாடுவானை
வாசநன் மலரணி குழன்மடவார்
வைகலுங் கலந்தெழு மாலைப்பூசல்
மாசிலா மறைபல வோதுநாவன்
வண்புரு டோத்தமன் கண்டுரைத்த
வாசக மலர்கள்கொண் டேத்தவல்லார்
மலைமகள் கணவனை யணைவர்தாமே. 11

...ANDAVAR
A. No. 12522
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

2. கோயில்—வானவர்கள்

பண்-பஞ்சமம்

வானவர்கள் வேண்ட வளர்நஞ்சை
யுண்டார்தாம்
ஊனமிலா வென்கை யொளிவளைகள்
கொள்வாரோ
தேனல்வரி வண்டறையுந் தில்லைச்சிற்
றம்பலவர்
நாணமரோ வென்னாதே நாடகமே யாடுவரே.

ஆடிவருங் காரரவு மைம்மதியும் பைங்கொன்றை
சூடிவருமா கண்டேன் றோள்வளைக
டோற்றாலுந்
தேடியிமை யோர்பரவுந் தில்லைச்சிற் றம்பலவர்
ஆடிவரும் போதருகே நிற்கவுமே வொட்டாரே.

ஒட்டா வகையவுணர் முப்புரங்க ளோரம்பாற்
பட்டாங் கழல்விழுங்க வெய்துகந்த பண்பினார்
சிட்டார் மறையோவாத் தில்லைச்சிற்
றம்பலவர்
கொட்டா நிட்டமாடக் கோல்வளைகள்
கொள்வாரே. 3

Koviloor Digital Library

ஆரே யிவைபடுவா ரையங் கொளவந்து
போரேடி யென்று புருவ மிடுகின் றார்
தேரார் விழவோவாத் தில்லைச்சிற் றம்பலவர்
தீராநோய் செய்வாரை யொக்கின்றார்
காணீரே. 4

காணீரே யென்னுடைய கைவளைகள்
கொண்டார்தாஞ்
சேணார் மணிமாடத் தில்லைச்சிற் றம்பலவர்
பூணார் வனமுலைமேற் பூவம்பாற் காமவேள்
ஆணாடு கின்றவா கண்டு மருளாரே. 5

ஏயிவரே வானவர்க்கும் வானவரே யென்பாரால்
தாயிவரே யெல்லார்க்குந் தந்தையுமா
மென்பாரால்
தேய்மதியஞ் சூடிய தில்லைச்சிற் றம்பலவர்
வாயினை கேட்டறிவார் வையகத்தா ராவாரே.

ஆவா விவர்தந் திருவடிகொண் டந்தகன்றன்
மூவா வுடலவியக் கொன்றுகந்த முக்கண்ணர்
தேவா மறைபயிலுந் தில்லைச்சிற் றம்பலவர்
கோவா வினவளைகள் கொள்வாரோ
வென்னையே. 7

Koviloor Digital Library

என்னை வலிவாரா ரென்றவி லங்கையர்கோன்
மன்னு முடிகள் நெரித்த மணவாளர்
செந்நெல் விளைகழனித் தில்லைச்சிற் றம்பலவர்
முன்னந்தான் கண்டறிவா ரொவ்வாரிம்
முத்தரே. 8

முத்தர் முதுபகலே வந்தென்ற னில்புகுந்து
பத்தர் பலியிடுக வென்றெங்கும் பார்க்கின்றார்
சித்தர் கணம்பயிலுந் தில்லைச்சிற் றம்பலவர்
கைத்தலங்கள் வீசிநின் றாடுங்கா ணோக்காரே.

நோக்காத தன்மையா னோக்கிலோமியாமென்று
மாற்காழி யீந்து மலரோனை நிந்தித்துச்
சேக்காத லித்தேறுந் தில்லைச்சிற் றம்பலவர்
ஊர்க்கேவந் தென்வளைகள் கொள்வாரோ
வொண்ணுதலீர். 10

ஒண்ணுதலி காரணமா வும்பர்தொழு தேத்துங்
கண்ணுதலான் றன்னைப் புருடோத்த
மன்சொன்ன
பண்ணுதலைப் பத்தும் பயின்றாடிப் பாடினார்
எண்ணுதலைப் பட்டங் கினிதா விருப்பாரே. 11

Koviloor Digital Library

சேந்தனார்

அருளிச் செய்த

திருவிசைப்பா

1. கோயில்-சேலுலாம்

பண்-பஞ்சமம்

சேலு லாம்வயற் றில்லையு ளீருமைச்
சால நாளயல் சார்வதி னாலிவள்
வேலை யார்விட முண்டுகந் தீரென்று
மால தாகுமென் வாணுத லே. 1

வாணு தற்கொடி மாலது வாய்மிக
நாண மற்றன ளானறி யேனினிச்
சேணு தற்பொலி தில்லையு ளீருமைக்
காணி லெய்ப்பில ள்காரிகை யே. 2

காரி கைக்கரு ளீர்கரு மால்கரி
ஈரு ரித்தெழு போர்வையி னீர்மிகு
சீரி யற்றில்லை யாய்சிவ னேயென்று
வேரி நற்குழ லாளிவள் விம்முமே. 3

Koviloor Digital Library

விம்மி விம்மியே வெய்துயிர்த் தாளெனா
உம்மை யேநினைந் தேத்துமொன் றாகிலள்
செம்ம லோர்பயி றில்லையு ளீரெங்கள்
அம்மலோ தி யயர் வுறுமே. 4

அயர்வுற் றஞ்சலி கூப்பியந் தோவெனை
உயவுன் கொன்றையந் தாரரு ளாயெனுஞ்
செயலுற் றார்மதிற் றில்லையு ளீரிவண்
மயலுற் றாளென்றன் மாதிவளே. 5

மாதொர் கூறன்வண் டார்கொன்றை
மார்பனென்
றோதி லுய்வனொண் பைங்கிளியேயெனுஞ்
சேதித் தீசிர நான்முக னைத்தில்லை
வாதித் தீரென்ம டக்கொடியையே. 6

கொடியைக் கோமளச் சாதியைக்
கொம்பிளம்
பிடியை யென்செய்திட் டீர்பகைத் தார்புரம்
இடியச் செஞ்சிலை கால் வளைத் தீரென்று
முடியு நீர்செய்த மூச்சறவே. 7

அறவ னேயன்று பன்றிப் பின்னேகிய
மறவ னேயெனை வாதைசெய் யேலெனுஞ்

Koviloor Digital Library

சிறைவண் டார்பொழிற்றில்லையு ளீரெனும்
பிறைகு லாநுதற் பெய்வளையே. 8

அன்ற ருக்கனைப் பல்லிறுத் தானையைக்
கொன்று காலனைக் கோளிழைத் தீரெனுந்
தென்ற லார்பொழிற் றில்லையு ளீரிவள்
ஒன்று மாகில ளும்பொருட்டே. 9

ஏயு மாறெழிற் சேதிபர் கோன்றில்லை
நாய னாரை நயந்துரை செய்தன
தூய வாறுரைப் பார்துறக் கத்திடை
ஆய வின்ப மெய்தி யிருப்பரே. 10

KOVILOOR VEDANTA MUTT

Koviloor Digital Library

சேந்தனார்

அருளிச் செய்த

திருப்பல்லாண்டு

1. கோயில்

பண் – பஞ்சமம்

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர்போ யகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவா ளுமைகோ னடியோமுக்
கருள் புரிந்து
பின்னைப்பிற வியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே. 1

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ
ரானந்த வெள்ளப்பொருள்

Koviloor Digital Library

பண்டு மின்றுமென்று முள்ளபொரு ளென்றே
பல்லாண்டு கூறுதுமே. 2

நிட்டையி லாவுட னீத்தென்னை யாண்ட
நிகரிலா வண்ணங்களுஞ்
சிட்டன் சிவனடி யாரைச்சீ ராட்டுந்
திறங்களுமே சிந்தித்
தட்டமூர்த் திக்கென் னகநெக வூறும்
அமிர்தினுக் காலநிழற்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 3

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு விடங்கன்
விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 4

புரந்தரன் மாலயன் பூசலிட் டோலமிட்
டின்னம் புகலரிதாய்

Koviloor Digital Library

இரந்திரந் தழைப்பவென் னுயிராண்ட கோவினுக்
கென்செயவல்ல மென்றுங்
கரந்துங் கரவாத கற்பக னாகிக்
கரையில் கருணைக்கடல்
பரந்து நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே. 5

சேவிக்க வந்தய னிந்திரன் செங்கண்மா
லெங்குந் திசைதிசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக் குழாங்குழா
மாய்நின்று கூத்தாடும்
ஆவிக்க முதையென்னார்வத்த னத்தினை
யப்பனை யொப்பமரர்
பாவிக்கும் பாவகத் தப்புறத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 6

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரு முலகுங் கழற வுழறி
யுமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே. 7

Koviloor Digital Library

சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணாரிளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் குமென்று
புண்ணியர் போற்றிசைப்ப
மாலு மயனு மறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே
பாலு மமுதமு மொத்துநின் றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 8

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 9

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ்
வண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்கோயிலும்
போனகமு மருளிச்

Koviloor Digital Library

சோதி மணிமுடித் தாமமு நாமமுந்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 10

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
யெங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி
மிகுதிரு வாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 11

ஆரார் வந்தா ரமரர் குழாத்தி
லணியுடை யாதிரைநாள்
நாரா யணனொடு நான்முக னங்கி
யிரவியு மிந்திரனுந்
தேரார்வீதியிற் றேவர் குழாங்க
டிசையனைத்து நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே. 12

Koviloor Digital Library

எந்தை யெந்தாய் சுற்றமுற்று மெமக்கமு
தாமெம் பிரானென்றென்று
சிந்தை செய்யுஞ் சிவன் சீரடியா
ரடிநாய் செபபுறை
அந்தமி லானந்தச் சேற்த னெனைப்புகுந்
தாண்டுகொண் டாருயிர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவ னேயென்று
பல்லாண்டு கூறுதுமே. 13

Koviloor Digital Library

திருமூலர்

அருளிச் செய்த

திருமந்திரத் திரட்டு

(10 ஆந் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே. 1

சிவனொடொக் குந்தெய்வம் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே. 2

தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறிவார்இல்லை
சேயினும் நல்லன் அணியன் நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே. 3

Koviloor Digital Library

பொன்னாற் புரிந்திட்ட பொற்சடை யென்னப்
பின்னாற் பிறங்க இருந்தவன் பேர்நந்தி
என்னால் தொழப்படும் எம்இறை மற்றவன்
தன்னால் தொழப்படு வாரில்லை தானே. 4

பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்பிலி தன்னைத் தொழுமின் தொழுதால்
மறப்பிலி மாயா விருத்தமும் ஆமே. 5

சாந்து கமழுங் கவரியின் சந்தம்போல்
வேந்தன் அமரர்க் கருளிய மெய்ந்நெறி
ஆர்ந்த சுடரன்ன ஆயிர நாமமும்
போந்தும் இருந்தும் புகழுகின் றேனே. 6

வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியைத்
தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை
ஏத்தியும் எம்பெரு மான்என் றிறைஞ்சியும்
ஆத்தஞ்செய் தீசன் அருள்பெற லாமே. 7

போற்றிஎன் பார்அம ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்அசு ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்மனி தர்புனி தன்அடி
போற்றிஎன் அன்புள் பொலியவைத் தேனே. 8

Koviloor Digital Library

மனையுள் இருந்தவர் மாதவர் ஒப்பர்
நினைவுள் இருந்தவர் நேசத்துள் நிற்பர்
பனையுள் இருந்த பருந்தது போல
நினையா தவர்க்கில்லை நின்இன்பந் தானே. 9

அடியார் பரவும் அமரர் பிரானை
முடியால் வணங்கி முதல்வனை முன்னிப்
படியார் அருளும் பரம்பரன் எந்தை
விடியா விளக்கென்று மேவிநின் றேனே. 10

பரைபசு பாசத்து நாதனை உள்ளி
உரைபசு பாசத் தொருங்கவல் லார்க்குத்
திரைபசு பாவச் செழுங்கடல் நீந்திக்
கரைபசு பாசங் கடந்தெய்த லாமே 11

சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான்என்று
பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்துநின்
றாடுவன் ஆடி அமரர்பி ரான்என்று
நாடுவன் நானின் றறிவது தானே. 12

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாகமுயல்தவஞ் செய்கிலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே. 13

Koviloor Digital Library

நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரந்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே. 14

ஆரறி வார்எங்கள் அண்ணல் பெருமை
யாரறி வார்இந்த அகலமும் நீளமும்
பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறி யாமை விளம்புகின் றேனே. 15

பாடவல் லார்நெறி பாட அறிகிலேன்
ஆடவல் லார்நெறி ஆட அறிகிலேன்
நாடவல்லார் நெறி நாட அறிகிலேன்
தேடவல் லார்நெறி தேடகில் லேனே. 16

ஆண்டு பலவுங் கழிந்தன அப்பனைப்
பூண்டுகொண் டாரும் புகுந்தறி வார்இல்லை
நீண்டன காலங்கள் நீண்டு கொடுக்கினுந்
தூண்டு விளக்கின் சுடரறி யாரே. 17

ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே. 18

Koviloor Digital Library

தாமறி வாரண்ணல் தாள்பணி வாரவர்
தாமறி வாரறந் தாங்கிநின் றாரவர்
தாமறி வார்சில தத்துவ ராவர்கள்
தாமறி வார்க்குத் தமர்பர னாமே. 19

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்ரு மாம்பிறர்க் கின்னுரை தானே. 20

அன்பும் சிவமும்இரண் டென்பர் அறிவிலார்
அபே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. 21

என்பே விறகா இறைச்சி அறுந்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்தவொண் ணாதே. 22

அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான்
முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவன்
அன்பினுள் ளாகி அமரும் அரும்பொருள்
அன்பினுள் ளார்க்கே அணைதுணை யாமே, 23

Koviloor Digital Library

வல்லார்கள் என்றும் வழியொன்றி
வாழ்கின்றார்
அல்லா தவர்கள் அறிவு பலஎன்பார்
எல்லா இடத்தும் உளன்எங்கள் தம்இறை
கல்லா தவர்கள் கலப்பறி யாரே. 24

ஆதிப் பிரான் அம ரர்க்கும் பரஞ்சுடர்
சோதி அடியார் தொடரும் பெருந்தெய்வம்
ஓதி உணரவல் லோம்என்பர் உள்நின்ற
சோதி நடத்துந் தொடர்வறி யாரே. 25

முன்னவ னார்கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுந்திடுங் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே. 26

எம்பெரு மான்இறை வாமுறை யோஎன்று
வம்பவிழ் வானோர் அசுரன் வலிசொல்ல
அம்பவள மேனி அறுமுகன் போயவர்
தம்பகை கொல்லென்ற தற்பரன் தானே. 27

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே. 28

Koviloor Digital Library

அண்ணல் இருப்பிட மாரும் அறிகிலர்
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்துகொள் வார்களுக்
கண்ணல் அழிவின்றி உள்ளே அமர்ந்திடும்
அண்ணலைக் காணில் அவனிவ னாகுமே. 29

பொற்பாதங் காணலாம் புத்திரர் உண்டாகும்
பொற்பாதத் தாணையே செம்புபொன் னாயிடும்
பொற்பாதங் காணத் திருமேனி யாயிடும்
பொற்பாத நன்னடஞ் சிந்தனை சொல்லுமே. 30

நகார மகார சிகார நடுவாய்
வகாரம் இரண்டும் வளியுடன் கூடி
ஒகார முதற்கொண் டொருக்கால் உரைக்க
மகார முதல்வன் மனத்தகத் தானே. 31

சிகார வகார யகார முடனே
நகார மகார நடுவுற நாடி
ஒகார முடனே ஒருகா லுரைக்க
மகார முதல்வன் மதித்துநின் றானே. 32

ஏடங்கை நங்கை இறைஎங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்புவெண் டாமரை
பாடுந் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
ஓடுமின் சென்னிவாய்த் தோத்திரஞ்
சொல்லுமே. 33

Koviloor Digital Library

வாயுமனமுங் கடந்த மனோன்மணி
பேயுங் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவுங் கடந்த அரனுக்குத்
தாயும் மகளுநல் தாரமு மாமே. 34

புண்ணிய னாகிப் பொருந்தி உலகெங்கும்
கண்ணிய னாகிக் கலந்தங் கிருந்திடுந்
தண்ணிய னாகித் தரணி முழுதுக்கும்
அண்ணிய னாகி அமர்ந்திருந் தானே. 35

தன்னுளு மாகித் தரணி முழுதுங்கொண்
டென்னுளு மாகி இடம்பெற நின்றவன்
மண்ணுளும் நீரனல் காலுளும் வானுளுங்
கண்ணுளும் மெய்யுளுங் காணலு மாமே. 36

கானுறுகோடி கடிகமழ் சந்தனம்
வானுறு மாமல ரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி உணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே. 37

பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போல உணர்ந்தறி வாளர்க்கு
நாவி யணைந்த நடுதறி யாமே. 38

Koviloor Digital Library

சைவ சமயத் தனிநா யகன்நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத்து ளார்க்கு வகுத்துவைத் தானே. 39

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே. 40

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூச மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே. 41

அஞ்சு முகமுள ஐம்மூன்று கண்ணுள
அஞ்சினொ டஞ்சு கரதலந் தானுள
அஞ்சுடன் அஞ்சா யுதமுள நம்பியென்
நெஞ்சு புகுந்து நிறைந்துநின் றானே. 42

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே. 43

Koviloor Digital Library

புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண் டருள்புரி யாநிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை யீசனை
நண்ணறி யாமல் நழுவுகின் றாரே. 44

படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்
நடாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்மர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பகவற்க தாமே. 45

ஆறிடும் வேள்வி அருமறை நூலவர்
கூறிடும் அந்தணர் கோடிபே ருண்பதில்
நீறிடுந் தொண்டர் நினைவின் பயனிலை
பேறெனில் ஓர்பிடி பேறது வாகுமே. 46

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே. 47

ஏறுடை யாயிறை வாஎம்பி ரானென்று
நீறிடு வாரடி யார்நிகழ் தேவர்கள்
ஆறணி செஞ்சடை யண்ணல் திருவடி
வேறணி வார்க்கு வினையில்லை தானே. 48

Koviloor Digital Library

சார்ந்தவர்க் கின்பங் கொடுக்குந் தழல்வண்ணன்
பேர்ந்தவர்க் கின்னாப் பிறவி கொடுத்திடுங்
கூர்ந்தவர்க் கங்கே குரைகழல் காட்டிடுஞ்
சேர்ந்தவர் தேவரைச் சென்றுணர் வாரே. 49

ஆகின்ற தொண்ணூறோ டாறும் பொதுவென்பர்
ஆகின்ற வாறா றருஞ்சைவர் தத்துவம்
ஆகின்ற நாலேழ் வேதாந்தி வயிணவர்க்
காகின்ற நாலாறை யைந்துமாயா வாதிக்கே. 50

சித்தாந்தத் தேசிவன் முத்திசித் திதலாற்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித் தித்தவர்
சித்தாந்த வேதாந்தஞ் செம்பொரு ளாதலால்
சித்தாந்த வேதாந்தங் காட்டுஞ் சிவனையே. 51

ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலே றெனநிற்கும்
ஆய பலிபீட மாகுநற் பாசமாம்
ஆய அரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே. 52

சிந்தையி னுள்ளே எந்தை திருவடி
சிந்தையும் எந்தை திருவடிக் கீழது
எந்தையும் என்னை யறியகி லானாகில்
எந்தையை யானும் அறியகி லேனே. 53

Koviloor Digital Library

பெத்தத்துந் தன்பணி இல்லை பிறத்தலான்
முத்தத்துந் தன்பணி இல்லை முறைமையால்
அத்தற் கிரண்டும் அருளால் அளித்தலாற்
பத்திப்பட் டோர்க்குப் பணியொன்றும்
இல்லையே. 54

காலினில் ஊறுங் கரும்பினிற் கட்டியும்
பாலினுள் நெய்யும் பழத்துள் இரதமும்
பூவினுள் நாற்றமும் போலுளன் எம்மிறை
காவலன் எங்குங் கலந்துநின் றானே. 55

நெஞ்சு நினைந்துதம் வாயாற் பிரானென்று
துஞ்சும் பொழுதுந் துணைத்தாள் சரணென்று
மஞ்சு தவழும் வடவரை மீதுறை
அஞ்சில் இறைவன் அருள்பெற லாமே. 56

சிவசிவ என்றிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே. 57

அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன்அங்கி தன்னில் அறையிற்சங் காரம்
அரனுற் றணைப்பில் அமருந் திரோதாயி
அரனடி யென்றும் அனுக்கிரகம் என்னே. 58

Koviloor Digital Library

ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீர்உல குக்குயி ராவது
நன்றுகண் டீர்இனி நமச்சிவா யப்பழந்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே. 59

ஆதிப்பிரான்நம் பிரானவ் வகலிடச்
சோதிப் பிரான்சுடர் மூன்றொளி யாய்நிற்கும்
ஆதிப் பிரான் அண்டத் தப்புறங் கீழவன்
ஆதிப் பிரான்நடு வாகிநின் றானே. 60

முதலொன்றா மானை முதுகுடன் வாலுந்
திதமுறு கொம்பு செவிதுதிக் கைகால்
மதியுடன் அந்தகர் வகைவகை பார்த்தே
அதுகூற லொக்கும் ஆறு சமயமே. 61

வழித்துணை யாய்மருந் தாயிருந் தார்முன்
கழித்துணை யாங்கற் றிலாதவர் சிந்தை
ஒழித்துணை யாய்உம்ப ராய்உல கேழும்
வழித்துணை யாம்பெருந் தன்மைவல் லானே. 62

பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின்
முற்றது எல்லா முதல்வன் அருள்பெறில்
கிற்ற விரகிற் கிளரொளி வானவர்
கற்றவர் பேரின்பம் உற்றுநின் றாரே. 63

Koviloor Digital Library

தேவர் பிரான்தனைத் திவ்விய மூர்த்தியை
யாவர் ஒருவர் அறிவார் அறிந்தபின்
ஓதுமின் கேண்மின் உணர்மின் உணர்ந்தபின்
ஓதி உணர்ந்தவர் ஓங்கிநின் றாரே. 64

உறுதுணை யாவ துயிரும் உடம்பும்
உறுதுணை யாவ துலகுறு கேள்வி
செறிதுணை யாவது சிவனடிச் சிந்தை
பெறுதுணை கேட்கிற் பிறப்பில்லை தானே. 65

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே. 66

Koviloor Digital Library

உ

பதினோராந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

திருவாலவாயுடையார்

திருமுகப்பாசுரம்

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பானிற வரிச்சிற
கன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போ லென்பா லன்பன் தன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே.

Koviloor Digital Library

காரைக்காலம்மையார்

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்

துத்தங் கைக்கிள்ளை விளரிதார முழையிளி
யோசைபண் கெழுமப் பாடிச்
சச்சரி கொக்கரை தக்கையோடு தகுணிதந்
துந்துபி தாளம்வீணை
மத்தளங் கரடிகை வன்கைமென்றோற் றமருகங்
குடமுழா மொந்தைவாசித்
தத்தனை விரவினோ டாடுமெங்களப்ப
னிடந்திரு வாலங் காடே. 1

———

காரைக்காலம்மையார்

திருஇரட்டை மணிமாலை

கழற்கொண்ட சேவடி காணலுற்
றார்தம்மைப் பேணலுற்றார்
நிழற்கண்ட போழ்தத்து நில்லா
வினைநிக ரேதுமின்றித்
தழற்கொண்ட சோதிச்செம் மேனியெம்
மானைக்கைம் மாமலர்தூய்த்

Koviloor Digital Library

தொழக்கண்டு நிற்கிற்கு மோதுன்னி
நம்மடுந் தொல்வினையே. 1

——

காரைக்காலம்மையார்

அற்புதத் திருவந்தாதி

பிறந்து மொழிபயின்ற
பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே
சேர்ந்தேன் — நிறந்திகழு
மைஞ்ஞான்ற கண்டத்து
வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர். 1

இடர்களையா ரேனு
மெமக்கிரங்கா ரேனும்
படரு நெறிபணியா
ரேனுஞ் - சுடருருவில்
என்பறாக் கோலத்
தெரியாடு மெம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு. 2

Koviloor Digital Library

ஒன்றே நினைந்திருந்தேன்
ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றேயென் னுள்ளத்தின்
உள்ளடைத்தேன்—ஒன்றேகாண்
கங்கையான் திங்கட்
கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற் காளா மது. 3

அறிவானுந் தானே
யறிவிப்பான் தானே
அறிவா யறிகின்றான்
றானே—அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே
விரிசுடர்பார் ஆகாசம்
அப்பொருளுந் தானே யவன். 4

உரையினா லிம்மாலை
யந்தாதி வெண்பாக்
கரைவினாற் காரைக்காற்
பேய்சொற்—பரவுவார்
ஆராத அன்பினோ
டண்ணலைச்சென் றேத்துவார்
பேராத காதல் பிறந்து. 5

Koviloor Digital Library

அன்றுந் திருவுருவங்
காணாதே யாட்பட்டேன்
இன்றுந் திருவுருவங்
காண்கிலேன்—என்றுந்தான்
எவ்வுருவோன் உம்பிரா
னென்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் ஏது. 6

காலையே போன்றிலங்கு
மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும்
வெண்ணீறு—மாலையின்
தாங்குருவே போலுஞ்
சடைக்கற்றை மற்றவற்கு
வீங்கிருளே போலு மிடறு. 7

யானே தவமுடையேன்
என்னெஞ்சே நன்னெஞ்சம்
யானே பிறப்பறுப்பான்
எண்ணினேன்—யானேயக்
கைம்மாவுரி போர்த்த
கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானுக் காளாயினேன். 8

Koviloor Digital Library

எனக்கினிய எம்மானை
    ஈசனையான் என்றும்
மனக்கினிய வைப்பாக
    வைத்தேன்—எனக் கவனைக்
கொண்டேன் பிரானாகக்
    கொள்வதுமே இன்புற்றேன்
உண்டே எனக்கரிய தொன்று. 9

இனியோநாம் உய்ந்தோம்
    இறைவன் அருள்சேர்ந்தோம்
இனியோர் இடரில்லோம்
    நெஞ்சே—இனியோர்
வினைக்கடலை யாக்குவிக்கும்
    மீளாப் பிறவிக்
கனைக்கடலை நீந்தினோம் காண். 10

ஐயடிகள் காடவர்கோன் நாயனார்
சேத்திரத் திருவெண்பா

ஓடுகின்ற நீர்மை யொழிதலுமே யுற்றாருங்
கோடுகின்றார் மூப்புங் குறுகிற்று—நாடுகின்ற
நல்லச்சிற் றம்பலமே நண்ணாமுன் நன்னெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர். 1

Koviloor Digital Library

காலைக்கரையிழையார் கட்டித்தாங் கையார்த்து
மாலை தலைக்கணிந்து மையெழுதி—மேலோர்
பருக்கோடி முடிப் பலரழா முன்னந்
திருக்கோடி காவடைநீ சென்று. 2

சேரமான் பெருமாள் நாயனார்

பொன்வண்ணத்தந்தாதி

பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மேனி பொலிந்திலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
வீழ்சடை வெள்ளிக்குன்றம்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மால்விடை தன்னைக்கண்ட
எவ்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
ஆகிய ஈசனுக்கே. 1

ஈசனைக் காணப் பலிகொடு
செல்லவெற் றேயிவளோர்
பேயனைக் காமுறு பிச்சிகொ
லாமென்று பேதைமுன்
தாயெனை ஈர்ப்பத் தமியேன்
தளரவத் தாழ்சடையோன்

Koviloor Digital Library

வாவெனைப் புல்லவென் றானிமை
    விண்டன வாட்கண்களே. 2

கண்களங்கஞ்செய்யக் கைவளை
    சோரக் கலையுஞ்செல்ல
ஒண்களங் கண்ணுதல் வேர்ப்பவொண்
    கொன்றையந் தாருருவப்
பெண்களங் கம்மிவள் பேதுறும்
    என்பதோர் பேதைநெஞ்சம்
பண்களங் கம்மிசை பாடநின்
    றாடும் பரமனையே. 3

பரமனை யேபலி தேர்ந்துநஞ்
    சுண்டது பன்மலர்சேர்
பிரமனை யேசிரங் கொண்டுங்
    கொடுப்பது பேரருளாம்
சரமனை யேயுடம் பட்டும்
    உடம்பொடு மாதிடமாம்
வரமனை யேகிளை யாகும்முக்
    கண்ணுடை மாதவனே. 4

தவனே உலகுக்குத் தானே
    முதல்தான் படைத்தவெல்லாம்
சிவனே முழுதுமென் பார்சிவ
    லோகம் பெறுவர் செய்ய

Koviloor Digital Library

அவனே அடல்விடை ஊர்தி
கடலிடை நஞ்சமுண்ட
பவனே எனச்சொல்லு வாரும்
பெறுவரிப் பாரிடமே. 5

இடமால் வலந்தான் இடப்பால்
துழாய்வலப் பாலொண்கொன்றை
வடமா லிடந்துகில் தோல்வலம்
ஆழி இடம்வலம்மான்
இடமால் கரிதால் வலஞ்சே
திவனுக் கெழில் நலஞ்சேர்
குடமால் இடம்வலங் கொக்கரை
யாமெங்கள் கூத்தனுக்கே. 6

கூத்துக் கொலாமிவர் ஆடித்
திரிவது கோல்வளைகள்
பாத்துக் கொலாம்பலி தேர்வது
மேனி பவளங்கொலாம்
ஏத்துக் கொலாமிவர் ஆதரிக்
கின்ற திமையவர்தம்
ஓத்துக் கொலாமிவர் கண்டதிண்
டைச்சடை உத்தமரே. 7

உத்தம ராயடி யாருல
காளத் தமக்குரிய

Koviloor Digital Library

மத்தம் அராமதி மாடம்
பதிநலஞ் சீர்மைகுன்றா
எத்தம ராயும் பணிகொள்ள
வல்ல இறைவர்வந்தென்
சித்தம ராயக லாதுடன்
ஆடித் திரிதவரே. 8

திரிதவர் கண்ணுள்ளும் உள்ளத்தின்
உள்ளுந் திரிதரினும்
அரிதவர் தன்மை அறிவிப்ப
தாயினும் ஆழிநஞ்சேய்
கரிதவர் கண்டம் வெளிதவர்
சாந்தம்கண் மூன்றொடொன்றாம்
பரிதவர் தாமே அருள்செய்து
கொள்வர்தம் பல்பணியே. 9

பணிபதம் பாடிசை ஆடிசை
யாகப் பனிமலரால்
அணிபதங் கன்பற் கொளப்பனை
அத்தவற் கேயடிமை
துணிபதங் காமுறு தோலொடு
நீறுடல் தூர்த்துநல்ல
தணிபதங் காட்டிடுஞ் சஞ்சலம்
நீயென் தனிநெஞ்சமே. 10

Koviloor Digital Library

நெஞ்சந் தளிர்விடக் கண்ணீர்
 ததும்ப முகம்மலர
அஞ்செங் கரதலங் கூம்பவட்
 டாங்கம் அடிபணிந்து
தஞ்சொல் மலரால் அணியவல்
 லோர்கட்குத் தாழ்சடையான்
வஞ்சங் கடிந்து திருத்திவைத்
 தான்பெரு வாகனமே. 11

வானகம் ஆண்டுமந் தாகினி
 ஆடிநந் தாவனஞ்சூழ்
தேனக மாமலர் சூடிச்செல்
 வோருஞ் சிதவல்சுற்றிக்
கானகந் தேயத் திரிந்திரப்
 போருங் கனகவண்ணப்
பால்நிற நீற்றற் கடியரும்
 அல்லாப் படிறருமே. 12

படிறா யினசொல்லிப் பாழுடல்
 ஓம்பிப் பலகடைச்சென்
றிடறா தொழிதும் எழுநெஞ்ச
 மேயெரி ஆடியெம்மான்
கடல்தா யினநஞ்சும் உண்ட
 பிரான்கழல் சேர்தல்கண்டாய்

Koviloor Digital Library

உடல்தான் உளபயன் ஆவசொன்
னேனிவ் வுலகினுள்ளே. 13

உலகா ளுறுவீர் தொழுமின்விண்
ணாள்வீர் பணிமின் நித்தம்
பாலகா முறுவீர் நினைமின்
பரமனொ டொன்றலுற்றீர்
நலகா மலரால் அருச்சிமின்
நாள்நர கத்துநிற்கும்
அலகா முறுவீர் அரனடி
யாரை அலைமின்களே. 14

அலையார் புனலனல் ஞாயி
றவனி மதியம்விண்கால்
தொலையா உயிருடம் பாகிய
சோதியைத் தொக்குமினோ
தலையாற் சுமந்துந் தடித்துங்
கொடித்தேர் அரக்கனென்னே
கலையான் ஒருவிரல் தாங்ககில்
லான்விட்ட காரணமே. 15

காரணன் காமரம் பாடவோர்
காமரம் பூடுறத்தன்
தாரணங் காகத் தளர்கின்ற
தையலைத் தாங்குவர்யார்

Koviloor Digital Library

போரணி வேற்கண் புனற்படம்
போர்த்தன பூஞ்சுணங்கார்
ஏரணி கொங்கையும் பொற்படம்
மூடி இருந்தனவே. 16

இருந்தனம் எய்தியும் நின்றுந்
திரிந்துங் கிடந்தலைந்தும்
வருந்திய வாழ்க்கை தவிர்த்திடு
போகநெஞ் சேமடவாள்
பொருந்திய பாகத்துப் புண்ணியன்
புண்ணியல் சூலத்தெம்மான்
திருந்திய போதவன் றானே
களையும்நம் தீவினையே. 17

தீவினை யேனைநின் றைவர்
இராப்பகல் செத்தித்தின்ன
மேவின வாழ்க்கை வெறுத்தேன்
வெறுத்துவிட் டேன்வினையும்
ஓவின துள்ளந் தெளிந்தது
கள்ளங் கடிந்தடைந்தேன்
பாவின செஞ்சடை முக்கணன்
ஆரணன் பாதங்களே. 18

பாதம் புவனி சுடர்நய
னம்புவ னமுயிர்ப்போங்

Koviloor Digital Library

கோதம் உடுக்கை உயர்வான்
முடிவிசும் பேயுடம்பு
வேதம் முகம்திசை தோள்மிகு
பன்மொழி கீதமென்ன
போதம் இவற்கோர் மணிநிறந்
தோற்பது பூங்கொடியே. 19

கொடிமேல் இடபமுங் கோவணக்
கீளுமோர் கொக்கிறகும்
அடிமேற் கழலும் அகலத்தில்
நீறுமை வாயரவும்
முடிமேல் மதியும் முருகலர்
கொன்றையும் மூவிலைய
வடிவேல் வடிவுமென் கண்ணுளெப்
போதும் வருகின்றவே. 20

வருகின்ற மூப்பொடு தீப்பிணிக்
கூற்றம்வை கற்குவைகல்
பொருகின்ற போர்க்கொன்றும் ஆற்றகில்
லேன்பொடி பூசிவந்துன்
அருகொன்றி நிற்க அருளுகண்
டாயழல் வாயரவம்
வெருகொன்றை வெண்மதி செஞ்சடை
மேல்வைத்த வேதியனே. 21

Koviloor Digital Library

வேதியன் பாதம் பணிந்தேன்
பணிந்துமெய்ஞ் ஞானமென்னும்
சோதியென் பால்கொள்ள உற்று நின்
றேற்கின்று தொட்டிதுதான்
நீதியென் றான்செல்வம் ஆவதென்
றேன்மேல் நினைப்புவண்டேர்
ஓதிநின் போல்வகைத் தேயிரு
பாலும் ஒழித்ததுவே. 22

ஒழித்தேன் பிறவியை ஊர்ந்தேன்
உவகையை ஓங்கிற்றுள்ளம்
இழித்தேன் உடம்பினை ஏலேன்
பிறரிடை இம்மையும்
பழித்தேன் பழியே விளைக்கும்பஞ்
சேந்தியக் குஞ்சரமும்
தெழித்தேன் சிவனடி சேர்ந்தேன்
இனிமிகத் தெள்ளியனே. 23

தெள்ளிய மாந்தரைச் சேர்ந்திலன்
தீங்கவி பாடலுற்றேன்
ஒள்ளிய சொல்லும் பொருளும்
பெறேனுரைத் தாருரைத்த
கள்ளிய புக்காற் கவிகளொட்
டார்கடல் நஞ்சயின்றாய்

Koviloor Digital Library

கொள்ளிய அல்லகண் டாய்புன்சொல்
ஆயினுங் கொண்டருளே. 24

அருளால் வருநஞ்சம் உண்டுநின்
றாயை அமரர்குழாம்
பொருளார் கவிசொல்ல யானும்புன்
சொற்கள் புணர்க்கலுற்றேன்
இருளா சறவெழில் மாமதி
தோன்றவும் ஏன்றதென்ன
வெருளா தெதிர்சென்று மின்மினி
தானும் விரிகின்றதே. 25

விரிகின்ற ஞாயிறு போன்றது
மேனியஞ் ஞாயிறுசூழ்ந்
தெரிகின்ற வெங்கதிர் ஒத்தது
செஞ்சடை அச்சடைக்கீழ்ச்
சரிகின்ற காரிருள் போன்றது
கண்டமக் காரிருட்கீழ்ப்
புரிகின்ற வெண்முகில் போன்றுள
தாலெந்தை ஒண்பொடியே. 26

பொடிக்கின் றிலமுலை போந்தில
பல்சொற் பொருள்தெரியா

Koyiloor Digital Library

முடிக்கின் றிலகுழல் ஆயினும்
கேண்மின்கள் முரிவெள்ளம்
குடிக்கொண்ட செஞ்சடைக் கொண்டலங்
கண்டன்மெய்க் கொண்டணிந்த
கடிக்கொன்றை நாறுகின் றாளறி
யேன்பிறர் கட்டுரையே. 27

உரைவளர் நான்மறை ஓதி
உலகம் எல்லாந்திரியும்
விரைவளர் கொன்றை மருவிய
மார்பன் விரிசடைமேல்
திரைவளர் கங்கை நுரைவளரி
தீர்த்தஞ் செறியச்செய்த
கரைவளர் வொத்துள தாற்சிர
மாலையெம் கண்டனுக்கே. 28

கண்டங் கரியன் கரியீர்
உரியவன் விரிதருசீர்
அண்டங் கடந்த பெருமான்
சிறுமான் தரித்தபிரான்
பண்டன் பரம சிவனோரி
பிரமன் சிரமரிந்த
புண்தங் கயிலவன் பயிலாற
மார்பனெம் புண்ணியனே. 29

Koviloor Digital Library

புண்ணியன் புண்ணியல் வேலையன்
வேலைய நஞ்சனங்கக்
கண்ணியன் கண்ணியல் நெற்றியன்
காரணன் காரியங்கும்
விண்ணியன் விண்ணியல் பாணியன்
பாணி கொளவுமையாள்
பண்ணியன் பண்ணியல் பாடலன்
ஆடற் பசுபதியே. 30

பதியார் பலிக்கென்று வந்தார்
ஒருவர்க்குப் பாவைநல்லீர்
கதியார் விடைஉண்டு கண்மூன்
றுளகறைக் கண்டமுண்டு
கொதியார் மழுவுண்டு கொக்கரை
உண்டிறை கூத்துமுண்டு
மதியார் சடையுள மாலுள
தீவது மங்கையர்க்கே. 31

மங்கைகொங் கைத்தடத் திங்குமக்
குங்குமப் பங்க நுங்கி
அங்கமெங் குந்நெகச் சங்கமங்
கைத்தலத் துங்கவர்வான்
மங்கைநங் கைத்திரைப் பொங்குசெங்
கண்ணர வங்கள்பொங்கிப்

Koviloor Digital Library

பங்கிதங் கும்மலர்த் திங்கள்தங்
கும்முடிப் பண்டங்கனே. 32

பண்டங்கன் வந்து பலிதாவென்
றான்பக லோற்கிடென்றேன்
அண்டங் கடந்தவன் அன்னமென்
றான்யன் ஊர்தியென்றேன்
கொண்டிங் குன்னையம்பெய் என்றான்
கொடித்தேர் அநங்கனென்றேன்
உண்டிங் கமைந்ததென் றாற்கது
சொல்ல உணர்வுற்றதே. 33

உற்றடி யாருல காளவோர்
ஊணும் உறக்குமின்றிப்
பெற்றம தாவதென் றேறும்
பிரான்பெரு வேல்நெடுங்கண்
சிற்றடி யாய்வெண்பற் செவ்வாய்
இவள்சிர மாலைக்கென்றும்
இற்றிடை யாம்படி யாகாவென்
னுக்கு மெலிக்கின்றதே. 34

மெலிக்கின்ற வெந்தீ வெயில்வாய்
இழுதழல் வாய்மெழுகு
கலிக்கின்ற காமங் கரதலம்
எல்லி துறக்கம்வெங்கூற்

Koviloor Digital Library

றொலிக்கின்ற நீருறு தீயொளி
யார்முக்கண் அத்தர்மிக்க
பலிக்கென்று வந்தார் கடிக்கொன்றை
சூடிய பல்லுயிரே. 35

பல்லுயிர் பாகம் உடல்தலை
தோல்பக லோன்மறல்பெண்
வில்லியோர் வேதியன் வேழம்
நிரையே பறித்துதைத்துப்
புல்லியுஞ் சுட்டும் அறுத்தும்
உரித்துங்கொண் டான்புகழே
சொல்லியும் பாடியும் ஏதிதக்
கெடும்நங்கள் சூழ்துயரே. 36

துயருந் தொழுமழும் சோரும்
துகிலுங் கலையுஞ்செல்லப்
பெயரும் பிதற்றும் நகும்வெய்
துயிர்க்கும் பெரும்பணிகூர்ந்
தயரும் அமர்விக்கும் மூரி
நிமிர்க்குமந் தோவிங்ஙனே
மயரும் மறைக்காட் டிறையினுக்
காட்பட்ட வாணுதலே. 37

வாணுதற் கெண்ணம்நன் றன்று
வளர்சடை எந்தைவந்தால்

Koviloor Digital Library

நாணுதற் கெண்ணாள் பலிகொடு
சென்று நகும்நயந்து
பேணுதற் கெண்ணும் பிரமன்
திருமா லவர்க்கரிய
தாணுவுக் கென்னோ இராப்பகல்
நைந்திவள் தாழ்கின்றதே. 38

தாழுஞ் சடைசடை மேலது
கங்கையக் கங்கைநங்கை
வாழுஞ் சடைசடை மேலது
திங்களத் திங்கட்பிள்ளை
போழுஞ் சடைசடை மேலது
பொங்கர வவ்வரவம்
வாழுஞ் சடைசடை மேலது
கொன்றையெம் மாமுனிக்கே. 39

முனியே முருகலர் கொன்றையி
னாயென்னை முப்பொழித்த
கனியே கழலடி அல்லாற்
களைகண்மற் றொன்றுமிலேன்
இனியேல் இருந்தவஞ் செய்யேன்
திருந்தவஞ் சேநினைந்து
தனியேன் படுகின்ற சங்கடம்
ஆர்க்கினிச் சாற்றுவனே. 40

Koviloor Digital Library

சாற்றுவன் கோயிற் றலையும்
மனமுந் தவமிவற்றால்
ஆற்றுவன் அன்பெனும் நெய்சொரிந்
தாற்றியஞ் சொல்மலரால்
ஏற்றுவன் ஈசன்வந் தென்மனத்
தானென் றெழுந்தலரே
தூற்றுவன் தோத்திரம் ஆயின
வேயினிச் சொல்லுவனே. 41

சொல்லா தனகொழு நாவல்ல
சோதியுட் சோதிதன்பேர்
சொல்லாச் செவிமரம் தேறித்
தொழாதகை மண்திணிந்த
கல்லாம் நினையா மனம்வணங்
காத்தலை யும்பொறையாம்
அல்லா அவயவந் தானும்
மனிதர்க் கசே தனமே. 42

தனக்குன்றம் மாவையம் சங்கரன்
தன்னருள் அன்றிப்பெற்றால்
மனக்கென்றும் நஞ்சிற் கடையா
நினைவன் மதுவிரியும்
புனக்கொன்றை யானரு ளாற்புழு
வாகிப் பிறந்திடினும்

Koviloor Digital Library

எனக்கென்றும் வானவர் பொன்னுல
 கோடொக்க எண்ணுவனே. 43

எண்ணம் இறையே பிழைக்குங்
 கொலாமிமை யோரிறைஞ்சும்
தண்ணம் பிறைச்சடைச் சங்கரன்
 சங்கக் குழையன்வந்தென்
உண்ணன் குறைவ தறிந்தும்
 ஒளிமா நிறங்கவர்வான்
கண்ணும் உறங்கா திராப்பகல்
 எய்கின்ற காமனுக்கே. 44

காமனை முன்செற்ற தென்றாள்
 அவளிவள் காலனென்னும்
தாமநன் மார்பனை முன்செற்ற
 தென்றுதன் கையெறிந்தாள்
நாம்முனஞ் செற்றதன் றாரையென்
 றேற்கிரு வர்க்குமஞ்சி
ஆமெனக் கிற்றிலர் அன்றெனக்
 கிற்றிலர் அந்தணரே. 45

அந்தண ராமிவர் ஆரு
 ருறைவதென் றேனதுவே

Koviloor Digital Library

சந்தணை தோளியென் றார்தலை
யாய சலவர் என்றேன்
பந்தணை கையாய் அதுவுமுண்
டென்றார் உமையறியக்
கொந்தணை தாரீர் உரைமினென்
றேன்துடி கொட்டினரே. 46

கொட்டும் சிலபல சூழநின்
றார்க்குப்குப் புற்றெழுந்து
நட்ட மறியும் கிரீடிக்கும்
பாடும் நகும்வெருட்டும்
வட்டம் வருமருஞ் சாரணை
செல்லும் மலர்தயங்கும்
புட்டங் கிரும்பொழில் சூழ்மறைக்
காட்டரன் பூதங்களே. 47

பூதப் படையுடைப் புண்ணிய
ரேபுறஞ் சொற்கள் நும்மேல்
ஏதப் படவெழு கின்றன
வாலிளை யாளொடும்மைக்
காதற் படுப்பான் கணைதொட்ட
காமனைக் கண்மலராற்
சேதப் படுத்திட்ட காரணம்
நீரிறை செப்புமினே. 48

Koviloor Digital Library

செப்பன கொங்கைக்குத் தேமலர்க்
கொன்றை நிறம்பணித்தான்
மைப்புரை கண்ணுக்கு வார்புனற்
கங்கைவைத் தான்மனத்துக்
கொப்பன இல்லா ஒளிகிளர்
உன்மத் தமுமமைத்தான்
அப்பனை அம்மனை நீயென்
பெறாதுநின் றார்க்கின்றதே. 49

ஆர்க்கின்ற நீரும் அனலும்
மதியும்ஐ வாயரவும்
ஓர்க்கின்ற யோகும் உமையும்
உருவும் அருவும்வென்றி
பார்க்கின்ற வேங்கையும் மானும்
பகலும் இரவுமெல்லாம்
கார்க்கொன்றை மாலையி னார்க்குடன்
ஆகிக் கலந்தனவே. 50

கலந்தனக் கென்பலர் கட்டவிழ்
வார்கொன்றை கட்டரவார்
சலந்தனக் கண்ணிய கானகம்
ஆடியோர் சாணகமும்

Koviloor Digital Library

நிலந்தனக் கில்லா அகதியன்
ஆகிய நீலகண்டத்
தலந்தலைக் கென்னே அலந்தலை
யாகி அழிகின்றதே. 51

அழிகின்ற தாருயிர் ஆகின்ற
தாகுலம் ஏறிடும்மால்
இழிகின்ற சங்கம் இருந்த
முலைமேற் கிடந்தனபீர்
பொழிகின்ற கண்ணீர் புலர்ந்தது
வாய்கலை போனவந்தார்
மொழிகின்ற தென்னினி நான்மறை
முக்கண் முறைவனுக்கே. 52

முறைவனை மூப்புக்கு நான்மறைக்
கும்முதல் ஏழ்கடலந்
துறைவனைச் சூழ்கயி லாயச்
சிலம்பனைத் தொன்மைகுன்றா
இறைவனை எண்குணத் தீசனை
ஏத்தினர் சித்தந்தம்பால்
உறைவனைப் பாம்பனை யாம்பின்னை
என்சொல்லி ஓதுவதே. 53

Koviloor Digital Library

ஓதவன் நாமம் உரையவன்
பல்குணம் உன்னைவிட்டேன்
போதவன் பின்னே பொருந்தவன்
வாழ்க்கை திருந்தச்சென்று
மாதவ மாகிடு மாதவ
மாவளர் புன்சடையான்
யாதவன் சொன்னான் அதுகொண்
டொழியினி ஆரணங்கே. 54

ஆரணங் கின்முகம் ஐங்கணை
யானகம் அவ்வகத்தில்
தோரணந் தோனவன் தேரகல்
அல்குல்தொன் மைக்கண்வந்த
பூரண கும்பம் முலையிவை
காணப் புரிசடையெம்
காரணன் தாள்தொழும் அன்போ
பகையோ கருதியதே. 55

கருதிய தொன் றில்லை ஆயினுங்
கேண்மின்கள் காரிகையாள்
ஒருதின மும்முள ளாகவொட்
டாதொடுங் காரொடுங்கப்
பொருதநன் மால்விடைப் புண்ணியன்
பொங்கிளங் கொன்றையின்னே

Koviloor Digital Library

தருதிர் நன் றாயிடும் தாரா
விடிற்கொல்லுந் தாழிருளே. 56

இருளார் மிடற்றால் இராப்பகல்
தன்னால் வரைமறையால்
பொருளார் கமழ்கொன்றை யால்முல்லை
புற்றர வாடுதலால்
தெருளார் மதிவிசும் பால்வெளவந்
தெண்புனல் தாங்குதலால்
அருளாற் பலபல வண்ணமு
மாவரன் ஆயினனே. 57

ஆயின அந்தணர் வாய்மை
அரைக்கலை கைவளைகள்
போயின வாள்நிகர் கண்ணுறு
மைந்நீர் முலையிடையே
பாயின வேள்கைக் கரபத்
திரத்துக்குச் சூத்திரம்போல்
ஆயின பல்சடை யார்க்கன்பு
பட்டவெம் ஆயிழைக்கே. 58

இழையார் வனமுலை வீங்கி
இடையிறு கின்றதிற்றால்
பிழையாள் நமக்கிவை கட்டுண்க
என்பது பேச்சுக்கொலாம்

Koviloor Digital Library

கழையார் கழுக்குன்ற வாணனைக்
கண்டனைக் காதலித்தாள்
குழையார் செவியொடு கோலக்
கயற்கண்கள் கூடியவே. 59

கூடிய தன்னிடத் தானுமை
யாளிடத் தானைஐயா
நீடிய பல்சடை மேற்றெரி
வண்ணம் எனப்பணிமின்
பாடிய நான்மறை பாய்ந்தது
கூற்றைப் படர்புரஞ்சுட்
டாடிய நீறுசெஞ் சாந்திவை
யாமெம் அயனெனவே. 60

அயமே பலியிங்கு மாடுள
தாணுவோர் குக்கிக்கிடப்
பயமே மொழியும் பசுபதி
ஏறெம்மைப் பாய்ந்திடுமால்
புயமேய் குழலியர் புண்ணியர்
போமின இரத்தல்பொல்லா
நயமே மொழியினும் நக்காம
மாவும்மை நாணுதுமே. 61

நாணா நடக்க நலத்தார்க்
கிடையில்லை நாமெழுத

Koviloor Digital Library

ஏணார் இருந்தமி ழால்மற
வேனுந் நினைமினென்றும்
பூணார் முலையீர் நிருத்தன்
புரிசடை எந்தைவந்தால்
காணா விடேன்கண் டிரவா
தொழியேன் கடிமலரே. 62

கடிமலர்க் கொன்றை தரினும்புல்
லேன்கலை சாரவொட்டேன்
முடிமலர் தீண்டின் முனிவன்
முலைதொடு மேற்கெடுவன்
அடிமலர் வானவர் ஏத்தநின்
றாய்க்கழ கல்லவென்பன்
தொடிமலர்த் தோள்தொடு மேல்திரு
வாணை தொடங்குவனே. 63

தொடங்கிய வாழ்க்கையை வாளா
துறப்பர் துறந்தவரே
அடங்கிய வேட்கை அரன்பால்
இலராறு காற்பறவை
முடங்கிய செஞ்சடை முக்கண
னார்க்கன்றி இங்குமன்றிக்
கிடங்கினிற் பட்ட கராவனை
யார்பல கேவலரே. 64

Koviloor Digital Library

வலந்தான் கழலிடம் பாடகம்
பாம்பு வலமிடமே
கலந்தான் வலம்நீ றிடம்சாந்
தெரிவலம் பந்திடமென்
பலந்தார் வலமிடம் ஆடகம்
வேல்வலம் ஆழியிடம்
சலந்தாழ் சடைவலம் தண்ணங்
குழலிடம் சங்கரற்கே. 65

சங்கரன் சங்கக் குழையன்
சரணார விந்தந்தன்னை
அங்கரங் கூப்பித் தொழுதாட்
படுமின்தொண் டீர்நமனார்
கிங்கரர் தாம்செய்யும் கீழா
யினமிறை கேட்டலுமே
இங்கரம் ஆயிரம் ஈரவென்
நெஞ்சம் எரிகின்றதே. 66

எரிகின்ற தீயொத் துளசடை
ஈசற்கத் தீக்கிமையோர்
சொரிகின்ற பாற்கடல் போன்றது
சூழ்புனல் அப் புனலிற்
சரிகின்ற திங்களோர் தோணியொக்
கின்றதத் தோணியுய்ப்பான்

Koviloor Digital Library

தெரிகின்ற திண்கழை போன்றுள
தாலத் திறலரவே. 67

அரவம் உயிர்ப்ப அழலுமங்
கங்கை வளாய்க்குளிரும்
குரவங் குழலுமை ஊடற்கு
நைந்துரு கும்மடைந்தோர்
பரவும் புகழண்ணல் தீண்டலும்
பார்வா னவைவிளக்கும்
விரவும் இடரின்பம் எம்மிறை
சூடிய வெண்பிறையே. 68

பிறைத்துண் டஞ் சூடலுற் றோபிச்சை
கொண்டனல் ஆடலுற்றோ
மறைக்கண்டம் பாடலுற் றோவென்பும்
நீறும் மருவலுற்றோ
கறைக்கண்டம் புல்லலுற் றோகடு
வாயர வாடலுற்றோ
குறைக்கொண் டிவளரன் பின்செல்வ
தென்னுக்குக் கூறுமினே. 69

கூறுமின் ஈசனைச் செய்ம்மின்குற்
றேவல் குளிர்மின்கண்கள்
தேறுமின் சித்தம் தெளிமின்
சிவனைச் செறுமின்செற்றம்

Koviloor Digital Library

ஆறுமின் வேட்கை அறுமின்
அவலம் இவைநெறியா
ஏறுமின் வானத் திருமின்
விருந்தாய் இமையவர்க்கே. 70

இமையோர் கொணர்ந்திங் கிழித்திட
நீர்மைகெட் டேந்தல்பின்போய்
அமையா நெறிச்சென்றோர் ஆழ்ந்த
சலமக ளாயணைந்தே
எமையா ளுடையான் தலைமக
ளாவங் கிருப்பவென்னே
உமையா ளவள்கீழ் உறைவிடம்
பெற்றோ உறைகின்றதே. 71

உறைகின் றனரைவர் ஒன்பது
வாயிலோர் மூன்றுளதால்
மறைகின்ற என்பு நரம்போ
டிறைச்சி உதிரமச்சை
பறைகின்ற தோல்போர் குரம்பை
பயனில்லை போயடைமின்
அறைகின்ற தெண்புனல் செஞ்சடைக்
கொண்டோன் மலரடிக்கே. 72

அடிக்கண்ணி கைதொழு தார்க்ககன்
ஞாலங் கொடுத்தடிநாய்

Koviloor Digital Library

வடிக்கண்ணி நின்னைத் தொழுவளை
கொண்டனை வண்டுணகொன்றைக்
கடிக்கண்ணி யாயெமக் கோரூர்
இரண்டகங் காட்டினையால்
கொடிக்கண்ணி மேல்நல்ல கொல்லே
றுயர்த்த குணக்குன்றமே. 73

குன்றெடுத் தான்செவி கண்வாய்
சிரங்கள் நெரிந்தலற
அன்றடர்த் தற்றுகச் செற்றவன்
அற்றவர்க் கற்றசிவன்
மன்றிடைத் தோன்றிய நெல்லிக்
கனிநிற்ப மானுடர்போய்
ஒன்றெடுத் தோதிப் புகுவர்
நரகத் துறுகுழியே. 74

குழிகட் கொடுநடைக் கூன்பற்
கவட்டடி நெட்டிடை யூன்
உழுவைத் தழைசெவித் தோல்முலைச்
சூறை மயிர்ப்பகுவாய்த்
தெழிகட் டிரைகுரல் தேம்பல்
வயிற்றுத் திருக்குவிரற்

Koviloor Digital Library

கழுதுக் குறைவிடம் போல்கண்டன்
ஆடும் கடியரங்கே. 75

அரங்கா மணியன்றில் தென்றலோர்
கூற்றம் மதியமந்தீச்
சரங்காமன் எய்யஞ்சு சந்துப்
பகையால் இவள்தளர்ந்தாள்
இரங்கா மனத்தவர் இல்லை
இரங்கான் இமையவர்தம்
சிரங்கா முறுவான் எலும்புகொள்
வானென்றன் தேமொழிக்கே. 76

மொழியக்கண் டான்பழி மூளக்கண்
டான்பிணி முன்கைச்சங்கம்
அழியக்கண் டானன்றில் ஈரக்கண்
டான்தென்றல் என்னுயிர்மே
சுழியக்கண் டான்துயர் கூரக்கண்
டான்துகில் சூழ்கலையும்
கழியக்கண் டான்தில்லைக் கண்ணுத
லான்கண்ட கள்ளங்களே. 77

கள்ள வளாகங் கடிந்தடி
மைப்படக் கற்றவர்தம்
உள்ள வளாகத் துறுகின்ற
உத்தமன் நீள்முடிமேல்

Koviloor Digital Library

வெள்ள வளாகத்து வெண்ணுரை
சூடி வியன்பிறையைக்
கொள்ள அளாய்கின்ற பாம்பொன்
றுளது குறிக்கொண்மினே. 78

குறிக்கொண் டிவள்பெய்த கோல்வளை
யேவந்து கோளிழைத்தீர்
வெறிக்கொண்ட வெள்ளிலம் போதோ
எலும்போ விரிசடைமேல்
உறைக்கொன்றை யோவுடைத்தோலோ
பொடியோ உடைகலனோ
கறைக்கண்ட ரேநுமக் கென்னோ
சிறுமி கடவியதே. 79

கடவிய தொன்றில்லை ஆயினும்
கேண்மின்கள் காரிகையாள்
மடவிய வாறுகண் டாம்பிறை
வார்சடை எந்தைவந்தாற்
கிடவிய நெஞ்சம் இடங்கொடுத்
தாட்கவ லங்கொடுத்தான்
தடவிய கொம்பதன் தாள்மேல்
இருந்து தறிக்குறுமே. 80

தறித்தாய் அயன்தலை சாய்த்தாய்
சலந்தர னைத்தழலாய்

Koviloor Digital Library

பொறித்தாய் அனங்கனைச் சுட்டாய்
புரம்புன லுஞ்சடைமேற்
செறித்தாய்க் கிவைபுகழ் ஆகின்ற
கண்டிவள் சில்வளையும்
பறித்தாய்க் கிதுபழி ஆகுங்கொ
லாமென்று பாவிப்பனே. 81

பாவிக்கும் பண்டையள் அல்லள்
பரிசறி யாள்சிறுமி
ஆவிக்குங் குற்குலு நாறும்
அகம்நெக அங்கமெங்கும்
காவிக்கண் சோரும்பொச் சாப்புங்
கறைமிடற் றானைக்கண்ணில்
தாவிக்கும் வெண்ணகை யாளம்மெல்
லோதிக்குச் சந்தித்தவே. 82

சந்தித்த கூற்றுக்குக் கூற்றாம்
பிணிக்குத் தனிமருந்தாம்
சிந்திக்கிற் சிந்தா மணியாகித்
தித்தித் தமுதமுமாம்
வந்திக்கில் வந்தென்னை மால்செய்யும்
வானோர் வணங்கநின்ற
அந்திக்கண் ஆடியி னானடி
யார்களுக் காவனவே. 83

Koviloor Digital Library

ஆவன யாரே அழிக்கவல்
லாரமை யாவுலகில்
போவன யாரே பொதியகிற்
பார்புரம் மூன்றெரித்த
தேவனைத் தில்லைச் சிவனைத்
திருந்தடி கைதொழுது
தீவினை யேனிழந் தேன்கலை
யோடு செறிவளையே. 84

செறிவளை யாய்நீ விரையல்
குலநலம் கல்விமெய்யாம்
இறையவன் தாமரைச் சேவடிப்
போதென்றெல் லோருமேத்தும்
நிறையுடை நெஞ்சிது வேண்டிற்று
வேண்டிய நீசர் தம்பால்
காறைவளர் கண்டனைக் காணப்
பெரிதுங் கலங்கியதே. 85

கலங்கின மால்கடல் வீழ்ந்தன
கார்வரை ஆழ்ந்ததுமண்
மலங்கின நாகம் மருண்டன
பல்கணம் வானங்கை போய்
இலங்கின மின்னொடு நீண்ட
சடையிமை யோர்வியந்தார்

Koviloor Digital Library

அலங்கல்நன் மாநடம் ஆர்க்கினி
ஆடுவ தெம்மிறையே. 86

எம்மிறை வன்னிமை யோர்தலை
வன்உமை யாள்கணவன்
மும்முறை யாலும் வணங்கப்
படுகின்ற முக்கணநக்கற்
கெம்முறை யாளிவள் என்பிழைத்
தாட்கிறை என்பிழைத்தாள்
இம்முறை யாலே கவரக்
கருதிற் றெழிற்கலையே. 87

கலைதலை சூலம் மழுக்கனல்
கண்டைகட் டங்கம்கொடி
சிலையிவை ஏந்திய எண்டோட்
சிவற்கு மனஞ்சொற் செய்கை
நிலைபிழை யாதுகுற் றேவல்செய்
தார்நின்ற மேருவென்னும்
மலைபிழை யாரென்ப ராலறிந்
தோர்களிம் மாநிலத்தே. 88

மாநிலத் தோர்கட்குத் தேவர்
அனையவத் தேவரெல்லாம்
ஆனலத் தாற்றொழும் அஞ்சடை
ஈசன் அவன்பெருமை

Koviloor Digital Library

தேனலர்த் தாமரை யோன்திரு
மாலவர் தேர்ந்துணரார்
பாநலத் தாற்கவி யாமெங்ங
னேயினிப் பாடுவதே. 89

பாடிய வண்டுறை கொன்றையி
னான்படப் பாம்புயிர்ப்ப
ஓடிய தீயால் உருகிய
திங்களின் ஊறலொத்த
தாடிய நீறது கங்கையுந்
தெண்ணீர் யமுனையுமே
கூடிய கோப்பொத்த தாலுமை
பாகமெம் கொற்றவற்கே. 90

கொற்றவ னேயென்றுங் கோவணத்
தாயென்றும் ஆவணத்தால்
நற்றவ னேயென்றும் நஞ்சுண்டி
யேயென்றும் அஞ்சமைக்கப்
பெற்றவ னேயென்றும் பிஞ்ஞக
னேயென்றும் மன்மதனைச்
செற்றவ னேயென்றும் நாளும்
பரவுமென் சிந்தனையே. 91

சிந்தனை செய்ய மனமமைத்
தேன்செப்ப நாவமைத்தேன்

Koviloor Digital Library

வந்தனை செய்யத் தலையமைத்
தேன்கை தொழவமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத்
தேன்மெய் அரும்பவைத்தேன்
வெந்தவெண் ணீறணி ஈசற்
கிவையான் விதித்தனவே. 92

விதித்தன வாழ்நாள் பெரும்பிணி
விச்சைகள் கொண்டுபண்டே
கொதிப்பினில் ஒன்றும் குறைவில்லை
குங்குமக் குன்றனைய
பதித்தனங் கண்டனம் குன்றம்வெண்
சந்தனம் பட்டனைய
மதித்தனங் கண்டனம் நெஞ்சினி
என்செய்யும் வஞ்சனையே. 93

வஞ்சனை யாலே வரிவளை
கொண்டுள்ள மால்பனிப்பத்
துஞ்சும் பொழுதும் உறத்தொழு
தேன்சொரி மாலருவி
அஞ்சன மால்வரை வெண்பிறை
கவ்வியண் ணாந்தனைய
வெஞ்சின ஆனையின் ஈருரி
மூடிய வீரனையே. 94

Koviloor Digital Library

வீரன் அயனரி வெற்பலரி
நீரெரி பொன்னெழிலார்
காரோண் கடுக்கை கமலம்
துழாய்விடை தொல்பறவை
பேரொண் பதிநிறம் தாரிவர்
ஊர்திவெவ் வேறென்பரால்
யாரும் அறியா வகையெங்கள்
ஈசர் பரிசுகளே. 95

பரியா தனவந்த பாவமும்
பற்றும்மற் றும்பணிந்தார்க்
குரியான் எனச்சொல்லி உன்னுட
னாவன் எவனடியார்க்
கரியான் இவனென்று காட்டுவன்
என்றென் றிவையிவையே
பிரியா துறையுஞ் சடையான்
அடிக்கென்றும் பேசுதுமே. 96

பேசுவ தெல்லாம் அரன்திரு
நாமமப் பேதைநல்லாள்
காய்சின வேட்கை அரன்பா
லதுவறு காற்பறவை

Koviloor Digital Library

மூசின கொன்றை முடிமே
லதுமுலை மேல்முயங்கப்
பூசின சாந்தம் தொழுமால்
இவையொன்றும் பொய்யலவே. 97

பொய்யா நரகம் புகினுந்
துறக்கம் புகினுமபுக்கிங்
குய்யா உடம்பினோடுர்வ
நடப்ப பறப்பவென்று
நையா விளியினும் நானிலம்
ஆளினும் நான்மறை சேர்
மையார் மிடற்றான் அடிமற
வாவரம் வேண்டுவனே. 98

வேண்டிய நாள்களிற் பாதியும்
கங்குல் மிகவவற்றுள்
ஈண்டிய வெந்நோய் முதலது
பிள்ளைமை மேலதுமுப்
பாண்டின அச்சம் வெகுளி
அவாவழுக் காறிங்ஙனே
மாண்டன சேர்தும் வளர்புன்
சடைமுக்கண் மாயனையே. 99

Koviloor Digital Library

மாயன்நன் மாமணி கண்டன்
வளர்சடை யாற்கடிமை
ஆயின தொண்டர் துறக்கம்
பெறுவது சொல்லுடைத்தே
காய்சின ஆனை வளரும்
கனக மலையருகே
போயின் காக்கையும் அன்றே
படைத்தது பொன்வண்ணமே. 100

சேரமான் பெருமாள் நாயனார்

திருவாரூர் மும்மணிக் கோவை

பொய்யாற் றொழினு மருளு
மிறைகண்டம் போலிருண்ட
மையார் தடங்கண் மடந்தையர்
கேட்கிற்பொல் லாதுவந்துன்
கையா லடிதொடல் செல்லனில்
புல்லல் கலைவளையல்
ஐயா விவைநன்கு கற்றாய்
பெரிது மழகியவே. 1

Koviloor Digital Library

சேரமான் பெருமாள் நாயனார்

திருக்கைலாய ஞான வுலா

பெண்ணீர்மை காமின் பெருந்தோளிணைகாமின்
உண்ணீர்மை மேகலையு முள்படுமின்—
தெண்ணீரக்
காரேறு கொன்றையந்தார்க் காவாலி
கட்டங்கன்
ஊரேறு போந்த துலா. 1

நக்கீர தேவ நாயனார்

கைலைபாதி காளத்திபாதி யந்தாதி

சொல்லும் பொருளுமே தூத்திரியு நெய்யுமா
நல்லிடிஞ்சி லென்னுடைய நாவாகச்—சொல்லரிய
வெண்பா விளக்கா வியன்கயிலை மேலிருந்த
பெண்பாகர்க் கேற்றினேன் பெற்று. 1

பாசத்தை விட்டுநின் பாதத்தின் கீழேயென்
நேசத்தை வைக்க நினைகண்டாய் பாசத்தை

Koviloor Digital Library

நீக்குமா வல்ல கயிலாயா நீயென்னைக்
காக்குமா றித்தனையே காண். 2

அஞ்செழுத்துங் கண்டீர் அருமறைகளாவனவும்
அஞ்செழுத்துங் கற்க அணித்தாகு—நஞ்சவித்த
காளத்தி யார்யார்க்குங் காண்டற்
கரிதாய்ப்போய்
நீளத்தே நின்ற நெறி. 3

மற்றும் பலபிதற்ற வேண்டா மடநெஞ்சே
கற்றைச் சடையண்ணல் காளத்தி—நெற்றிக்கண்
ஆரா அமுதின் திருநாமம் அஞ்செழுத்துஞ்
சோராம லெப்பொழுதுஞ் சொல். 4

நக்கீர தேவ நாயனார்

திருவலஞ்சுழி மும்மணிக்கோவை

கொம்பார் குளிர்மறைக் காடனை
வானவர் கூடிநின்று
நம்பா வெனவணங் கப்பெறு
வானை நகரெரிய
அம்பாய்ந் தவனை வலஞ்சுழி
யானையண் ணாமலைமேல்

Koviloor Digital Library

வம்பார் நறுங்கொன்றைத் தாருடை
யானை வணங்குதுமே. 1

நக்கீர தேவ நாயனார்

திருமுருகாற் றுப்படை

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
முருகனே ஈசன் மகனே—யொருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கா
லெப்பொழுது
நம்பியே கைதொழுவேன் நான். 1

நக்கீர தேவ நாயனார்

திருக்கண்ணப்ப தேவர் திருமறம்

தத்தையாந் தாய்தந்தை நாகனாந் தன்பிறப்புப்
பொத்தப்பி நாட்டுடுப்பூர் வேடுவனாம்—
தித்திக்குந்
திண்ணப்ப னாஞ்சிறுபேர் செய்தவத்தாற்
காளத்திக்
கண்ணப்ப னாய்நின்றான் காண். 1

Koviloor Digital Library

கல்லாடதேவ நாயனார்

திருக்கண்ணப்ப தேவர் திருமறம்

... ...

அற்றதென்று மற்றக் கண்ணையும்
பகழித் தலையா லகழ வாண்டகை
யொருகை யாலு மிருகை பிடித்து
வொல்லை நம்புண் ணொழிந்தது பாராய்
நல்லை நல்லை யெனப் பெறுந்
திருவேட் டுவர்தந் திருவடி கைதொழக்
கருவேட் டுழல்வினைக் காரியங் கெடுமே. 1

கபிலதேவ நாயனார்

மூத்தநாயனார் திருஇரட்டை மணிமாலை*

திருவாக்கும் செய்கருமம்
கைக்கூட்டும் செஞ்சொல்

---

* இரட்டைமணிமாலை — வெண்பாவும் கட்டளைக் கலித்துறையும் அடுத்தடுத்து அந்தாதித் தொடையில் 20 செய்யுட்களில் அமையும்.

Koviloor Digital Library

பெருவாக்கும் பீடும்
பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும்
ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை. 1

கைக்கும் பிணியொடு காலன்
தலைப்படும் ஏல்வையினில்
எய்க்கும் கவலைக் கிடைந்தடைந்
தேன்வெம்மை நாவளைக்கும்
பைக்கும் அரவரை யான் தந்த
பாய்மத யானைபத்துத்
திக்கும் பணி நுதற் கண் திரு
வாளன் திருவடியே. 2

அடியமர்ந்து கொள்வாயே
நெஞ்சமே அப்பம்
இடியவலோ டெள்ளுண்டை
கன்னல்—வடிசுவையில்
தாழ்வானை ஆழ்வானைத்
தன்னடியார் உள்ளத்தே
வாழ்வானை வாழ்த்தியே வாழ். 3

Koviloor Digital Library

வாழைக் கனிபல வின்கனி
மாங்கனி தாஞ்சிறந்த
கூழைச் சுருள்குழை அப்பம்மெள்
ளுண்டையெல் லாந்துறுத்தும்
பேழைப் பெருவயிற் றோடும்
புகுந்தென் உளம்பிரியான்
வேழத் திருமுகத் துச்செக்கர்
மேனி விநாயகனே. 4

விநாயகனே வெவ்வினையை
வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி
விப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும்
நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து. 5

கனிய நினைவொடு நாடொறும்
காதற் படுமடியார்க்
கினியன் இனியொரு ரின்னாங்
கிலமேவ ரும்வணங்கும்
பனிவெண் பிறைநறுங் கொன்றைச்
சடைப்பலி தேரியற்கை

Koviloor Digital Library

முனிவன் சிறுவன் பெருவெங்கொல்
யானை முகத்தவனே. 6

யானை முகத்தான்
பொருவிடையான் சேய்அழகார்
மான மணிவண்ணன்
மாமருகன்—மேல்நிகழும்
வெள்ளக் குமிழி
மதத்து விநாயகனென்
உள்ளக் கருத்தின் உளன். 7

உளதள வில்லதோர் காதலென்
நெஞ்சில்வன் நஞ்சமுண்ட
வளரிள மாமணி கண்டன்வண்
டாடுவண் கோதைபங்கத்
திளவளர் மாமதிக் கண்ணியெம்
மான்மகன் கைம்முகத்துக்
களகள மாமதஞ் சேர்களி
யானைக் கணபதியே. 8

கணங்கொண்ட வல்வினைகள்
கண்கொண்ட நெற்றிப்
பணங்கொண்ட பாந்தட்
சடைமேல்—மணங்கொண்ட

Koviloor Digital Library

தாதகத்த தேன்முரலுங்
 கொன்றையான் தந்தளித்த
போதகத்தின் தாள் பணியப்போம். 9

போகபந் தத்தந்தம் இன்றிநிற்
 பீர்புனை தார்முடிமேல்
நாகபந் தத்தந்த நாளம்
 பிறையிறை யான்பயந்த
மாகபந் தந்தந்த மாமழை
 போல்மதத் துக்கதப்போர்
ஏகதந் தத்தெந்தை செந்தாள்
 இணைபணிந் தேத்துமினே. 10

ஏத்தியே என்னுள்ளம்
 நிற்குமால் எப்பொழுதும்
மாத்தனிவெண் கோட்டு
 மதமுகத்து—தூத் தழல்போல்
செக்கர்த் திருமேனிச்
 செம்பொற் கழலங்கை
முக்கட் கடாயானை முன். 11

முன்னிளங் காலத்தி லேபற்றி
 னேன்வெற்றி மீனுயர்த்த

Koviloor Digital Library

மன்னிளங் காமன் தன் மைத்துன
னேமணி நீலகண்டத்
தென்னிளங் காய்களி றேயிமை
யோர்சிங்க மேயுமையாள்
தன்னிளங் காதல னேசர
ணாவுன் சரணங்களே. 12

சரணுடை யேனென்று
தலைதொட் டிருக்க
முரணுடையேன் அல்லேன்
நான்முன்னம்—திரள்நெடுங்கோட்
டண்டத்தான் அப்புறத்தான்
ஆனைமுகத் தானமரர்
பண்டத்தான் தாள்பணியாப் பண்டு. 13

பண்டந்த மாதரத் தாலென்
றினியன வேபலவும்
கொண்டந்த நாள்குறு காமைக்
குறுகுவர் கூருணர்வில்
கண்டந்த நீண்முடிக் கார்மத
வார்சடைக் கற்றையொற்றை
வெண்தந்த வேழ முகத்தெம்
பிரானடி வேட்கையரே. 14

Koviloor Digital Library

வேட்கை வினைமுடித்து
மெய்யடியார்க் கின்பஞ்செய்
தாட்கொண் டருளும்
அரன்சேயை—வாட்கதிர்கொள்
காந்தார மார்பிற்
கமழ்தார்க் கணபதியை
வேந்தா உடைத்தமரர் விண். 15

விண்ணுதல் நுங்கிய விண்ணுமண்
ணுஞ்செய் வினைப்பயனும்
பண்ணுதல் நுங்கடன் என்பர்மெய்
அன்பர்கள் பாய்மதமா
கண்ணுதல் நுங்கிய நஞ்சமுண்
டார்கரு மாமிடற்றுப்
பெண்ணுதல் நும்பிரி யாவொரு
பாகன் பெருமகனே. 16

பெருங்காதல் என்னோடு
பொன்னோடை நெற்றி
மருங்கார வார்செவிகள்
வீசி—ஒருங்கே

Koviloor Digital Library

திருவார்ந்த செம்முகத்துக்
கார்மதங்கள் சோர
வருவான்தன் நாமம்வரும். 17

வருகோட் டருபெருந் தீமையும்
காலன் தமரவர்கள்
அருகோட் டருமவ ராண்மையும்
காய்பவன் கூர்ந்தன்பு
தருகோட் டருமர பிற்பத்தர்
சித்தத் தறியணையும்
ஒருகோட் டிருசெவி முக்கட்செம்
மேனிய வெண்களிறே. 18

களியானைக் கன்றைக்
கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க்
குதவும்—அளியானைக்
கண்ணுவதும் கைத்தலங்கள்
கூப்புவதும் மற்றவன்தாள்
நண்ணுவதும் நல்லார் கடன். 19

நல்லார் பழிப்பில் எழிற்செம்
பவளத்தை நாணநின்ற
பொல்லா முகத்தெங்கள் போதக
மேபுரம் மூன்றெரித்த

Koviloor Digital Library

வில்லான் அளித்த விநாயக
னேயென்று மெய்ம்மகிழ
வல்லார் மனத்தன்றி மாட்டாள்
இருக்க மலர்த்திருவே. 20

கபிலதேவ நாயனார்

சிவபெருமான் திருவந்தாதி

ஒன்று முதலாக நூறளவும் ஆண்டுகள்வாழ்ந்
தொன்றும் மனிதர் உயிரையுண்—டொன்றும்
மதியாத கூற்றுதைத்த சேவடியான் வாய்ந்த
மதியான் இடப்பக்கம் மால். 1

மாலை ஒருபால் மகிழ்ந்தானை வண்கொன்றை
மாலை ஒருபால் முடியானை—மாலை
ஒளியானை உத்தமனை உண்ணாநஞ் சுண்டற்
கொளியானை ஏத்தி உளம். 2

உளமால்கொண் டோடி ஒழியாது யாமும்
உளமாகில் ஏத்தாவா றுண்டே உளம்மாசற்
றங்கமலம் இல்லா அடல்வெள்ளே றூர்ந்துழலும்
அங்கமல வண்ணன் அடி. 3

Koviloor Digital Library

அடியார்தம் ஆருயிரை அட்டழிக்குங் கூற்றை
அடியால் அருவாகச் செற்றான்—அடியார்தம்
அந்தரத்தால் ஏத்தி அகங்குழைந்து மெய்யரும் பி
அந்தரத்தார் சூடும் அலர். 4

அலராளுங் கொன்றை அணியலா ரூரற்
கலராகி யானும் அணிவன்—அலராகி
ஓதத்தான் ஒட்டினேன் ஓதுவன்யான்
ஓங்கொலிநீர்
ஓதத்தான் நஞ்சுண்டான் ஊர். 5

ஊருமதொற்றியூர் உண்கலனும் வெண்தலையே
ஊரும் விடையொன் றுடைதோலே—ஊரும்
படநாகம் மட்டார் பணமாலை ஈதோ
படநாகம் அட்டார் பரிசு. 6

பரியானை ஊராது பைங்கணே றூரும்
பரியானைப் பாவிக்க லாகா—பரியானைக்
கட்டங்கம் ஏந்தியாக் கண்டுவாழ் நன்னெஞ்சே
கட்டங்கம் ஏந்தியாக் கண்டு. 7

கண்டங் கரியன் உமைபாலுந் தன்பாலும்
கண்டங் கரியன் கரிகாடன்—கண்டங்கள்
பாடியாட் டாடும் பரஞ்சோதிக் கென்னுள்ளம்
பாடியாக் கொண்ட பதி. 8

Koviloor Digital Library

பதியார் பழிதீராப் பைங்கொன்றை தாவென்
பதியான் பலநாள் இரக்கப்—பதியாய
அம்மானார் கையார் வளைகவர்ந்தார்
அஃதேகொல்
அம்மானார் கையார் அறம். 9

அறமானம் நோக்கா தநங்கனையும் செற்றங்
கறமாநஞ் சுண்ட அமுதன் அறமான
ஓதியாள் பாகம் அமர்ந்தான் உயர்புகழே
ஓதியான் தோற்றேன் ஒளி. 10

ஒளியார் சுடர் மூன்றும் கண்மூன்றாக் கோடற்
கொளியான் உலகெல்லாம் ஏத்தற்—
கொளியாய
கள்ளேற்றான் கொன்றையான் காப்பிகந்தான்
நன்னெஞ்சே
கள்ளேற்றான் கொன்றை கடிது. 11

கடியரவர் அக்கர் கரிதாடு கோயில்
கடியரவர் கையதுமோர் சூலம்—கடியரவர்
ஆனேற்றார்க் காட்பட்ட நெஞ்சமே அஞ்சல்நீ
ஆனேற்றார்க் காட்பட்டேம் யாம். 21

Koviloor Digital Library

யாமான நோக்கா தலர்கொன்றைத்
தார்வேண்ட
யாமானங் கொண்டங் கலர்தந்தார்—யாமாவா
ஆலூரா ஊரும் அழகா அனலாடி
ஆலூரார்க் கென்னுரைக்கோம் யாம். 13

யானென்றங் கண்ணா மலையான் அகம்புகுந்து
யானென்றங் கையறிவும் குன்றுவித்து—
யானென்றங்
காரித்தானே யாயிடினும் அம்பரன்மேல்
அங்கொன்றை
ஆர்த்தானேல் உய்வ தரிது. 14

அரியாரும் பூம்பொழில்சூழ் ஆமாத்தூர் அம்மான்
அரியாரும் பாகத் தமுதன்—அரியாரும்
வேங்கடத்து மேயானை மேவா உயிரெல்லாம்
வேங்கடத்து நோயால் வியந்து. 15

வியந்தாழி நன்னெஞ்சே மெல்லியலார்க் காளாய்
வியந்தாசை யுள்மெலிய வேண்டா—வியந்தாய
கண்ணுதலான் எந்தைகா பாலி கழலடிப்பூக்
கண்ணுதலாம் நம்பாற் கடன். 16

கடனாகம் ஊராத காரணமும் கங்கை
கடனாக நீகவர்ந்த வாறும்—கடனாகப்

Koviloor Digital Library

பாரிடந்தான் மேவிப் பயிலும் பரஞ்சோதி
பாரிடந்தான் மேயாய் பணி. 17

பணியாய் மடநெஞ்சே பல்சடையான் பாதம்
பணியாத பத்தர்க்குஞ் சேயன்—பணியாய்
ஆகத்தான் செய்துமேல் நம்மை அமரர்கோ
ளுகத்தான் செய்யும் அரன். 18

அரன்காய னநவேற் கநங்கவேள் அம்பும்
அரன்காயும் அந்தியுமற் றந்தோ—அரங்காய
வெள்ளில்சேர் காட்டாடி வேண்டான்
களிறுண்ட
வெள்ளில்போன் றுள்ளம் வெறிது. 19

வெறியானை ஊர்வேந்தர் பின்செல்லும்
வேட்கை
வெறியார்பூந் தாரான் விமலன்—வெறியார்தம்
அல்லல்நோய் தீர்க்கும் அருமருந்தாம்
ஆரூர்க்கோன்
அல்லனோ நெஞ்சே அயன். 20

அயமால்ஊண் ஆடரவம் நாணதள தாடை
அயமாவ தானேறூர் ஆரூர்—அயமாய
என்னக்கன் தாழ்சடையன் நீற்றன் எரியாடி
என்னக்கன் றாழும் இவள். 21

Koviloor Digital Library

ஆழும் இவளையுங் கையகல ஆற்றேனென்
றாழும் இவளை அயராதே—ஆழும்
சலமுடியாய் சங்கரனே சங்கக் குழையாய்
சலமுடியா தின்றருளுன் தார். 22

தாராய தண்கொன்றை யானிரப்பத்
தானிதனைத்
தாராதே சங்கு சரிவித்தான்—தாராவல்
ஆனைமேல் வைகும் அணிவயலா ரூர்க்கோனல்
லானையும் வானோர்க் கரசு. 23

அரசுமாய் ஆள்விக்கும் ஆட்பட்டார்க் கம்மான்
அரசுமா மங்கொன்று மாலுக்—கரசுமான்
ஊர்தி எரித்தான் உணருஞ் செவிக்கின்பன்
ஊர்தி எரித்தான் உறா. 24

உறாவேயென் சொற்கள் ஒளிவளைநின் உள்ளத்
துறாவேதீ உற்றனகள் எல்லாம்—
உறாவேபோய்க்
காவாலி தார்நினைந்து கைசோர்ந்து
மெய்மறந்தாள்
காவாலி தானின் கலை. 25

Koviloor Digital Library

கலைகாமின் ஏர்காமின் கைவளைகள் காமின்
கலைசேர் நுதலீர் நாண் காமின்—கலையாய
பான்மதியன் பன்னடாங்கள் பாரோம்பு
நான்மறையன்
பான்மதியன் போந்தான் பலிக்கு. 26

பலிக்குத் தலையேந்திப் பாரிடங்கள் சூழப்
பலிக்கு மனைப்புகுந்து பாவாய்—பலிக்குநீ
ஐயம்பெய் என்றானுக் கையம்பெய்
கின்றேன்மேல்
ஐயம்பெய் தான்அநங்கன் ஆய்ந்து. 27

ஆயம் அழிய அலர்கொன்றைத் தார்வேண்டி
ஆயம் அழிய அயர்வேல்மேல்—ஆயன்வாய்த்
தீங்குழலும் தென்றலும் தேய்கோட்
டிளம்பிறையும்
தீங்குழலும் என்னையே தேர்ந்து. 28

தேரோன் கதிரென்னுஞ் செந்தழலால்
வெந்தெழுபேய்த்
தேரோன் கதிரென்னுஞ் செய்பொருள்நீ
—தேராதே
கூடற்கா வாலி குரைகழற்கா நன்னெஞ்சே
கூடற்கா வாலிதரக் கூர். 29

Koviloor Digital Library

கூரால மேயாக் குருகோடு நைவேற்குக்
கூரார்வேற் கையார்க்காய்க் கொல்லாமே
—கூராரி
பனிச்சங்காட் டார்சடைமேற் பால்மதியைப்
பாம்பே
பனிச்சங்காட் டாய்கடிக்கப் பாய்ந்து. 30

பாயும் விடையூர்தி பாசுபதன் வந்தெனது
பாயிற் புகுதப் பணைமுலைமேல் —பாயிலனற்
கொன்றாய் குளிர்சடையாற் கென்நிலைமை
கூறாதே
கொன்றாய் இதுவோ குணம். 31

குணக்கோடி கோடாக் குளிர்சடையான் வில்லின்
குணக்கோடிக் குன்றஞ்சூழ் போகிக்
—குணக்கோடித்
தேரிரவில் வாரான் சிவற்காளாஞ் சிந்தனையே
தேரிரவில் வாழும் திறம். 32

திறங்காட்டுஞ் சேயாள் சிறுகிளியைத் தான்தன்
திறங்காட்டுந் தீவண்ணன் என்னும்
—திறங்காட்டின்
ஊரரவம் ஆர்த்தானோ டென்னை
யுடன்கூட்டின்
ஊரரவஞ் சால உடைத்து. 33

Koviloor Digital Library

உடையோடு காடாடி ஊர்ஐயம் உண்ணி
உடைஆடை தோல்பொடிசந் தென்னை
—உடையானை
உன்மத் தகமுடிமேல் உய்த்தானை நன்னெஞ்சே
உன்மத் தகமுடிமேல் உய். 34

உய்யாதென் ஆவி ஒளிவளையும் மேகலையும்
உய்யா துடம்பழிக்கும் ஒண்திதலை—உய்யாம்
இறையானே ஈசனே எம்மானே நின்னை
இறையானும் காண்கிடாய் இன்று. 35

இன்றியாம் உற்ற இடரும் இருந்துயரும்
இன்றியாம் தீர்தும் எழில்நெஞ்சே—இன்றியாம்
காட்டாநஞ் சேற்றாஅன் காமரு
வெண்காட்டான்
காட்டான்அஞ் சேற்றான் கலந்து. 36

கலம்பெரியார்க் காஞ்சிரங்காய் வின்மேரு
என்னும்
கலம்பெரிய ஆற்கீழ் இருக்கை—கலம்பிரியா
மாக்கடல்நஞ் சுண்டார் கழல்தொழார்க்
குண்டாமோ
மாக்கடனஞ் சேரும் வகை. 37

Koviloor Digital Library

கையா றவாவெகுளி அச்சங் கழிகாமம்
கையாறு செஞ்சடையான் காப்பென்னும்
கையாறு
மற்றிரண்ட தோளானைச் சேர்நெஞ்சே
சேரப்போய்
மற்றிரண்ட தோளான் மனை. 38

மனையாய் பலிக்கென்று வந்தான்வண் காமன்
மனையா சறச்செற்ற வானோன்—மனையாய
என்பாவாய் என்றேனுக் கியானல்லேன்
நீதிருவே
என்பாவாய் என்றான் இறை. 39

இறையாய வெண்சங் கிவைதருவேன் என்னும்
இறையாகம் இன்றருளாய் என்னும்-இறையாய்
மறைக்காட்டாய் மாதவனே நின்னுருவம்
இங்கே
மறைகாட்டாய் என்னுமிம் மாது. 40

மாதரங்கத் தன் னரங்கஞ் சேர்த்தி
வளர்சடைமேல்
மாதரங்கக் கங்கைநீர் மன்னுவித்து—மாதரங்கத்
தேரானை யூரான் சிவற்காளாஞ் சிந்தனையே
தேரானை யூரானைத் தேர். 41

Koviloor Digital Library

தெருளிலார் என்னாவார் காவிரிவந் தேறும்
அருகில் சிராமலையெங் கோமான்—விரியுலகில்
செல்லுமதில் மூன்றெரித்தான் சேவடியே
யாம்பரவிச்
செல்லுமெழில் நெஞ்சே தெளி. 42

தெளியாய் மடநெஞ்சே செஞ்சடையான் பாதம்
தெளியாதார் தீநெறிக்கட் செல்வர்—தெளியாய
பூவார் சடைமுடியான் பொன்னடிக்கே
ஏத்துவன்நற்
பூவாய வாசம் புனைந்து. 43

புனைகடற்குப் பொன்கொடுக்கும் பூம்புகார்
மேயான்
புனைகடுக்கை மாலைப் புராணன்—புனை
கடத்து
நட்டங்கம் ஆட்டயரும் நம்பன் திருநாமம்
நட்டங்க மாட்டினேன் நக்கு. 44

நக்கரை சாளும் நடுநாளை நாரையூர்
நக்கரை வக்கரையோம் நாமென்ன
—நக்குரையாம்
வண்டாழங் கொன்றையான் மால்பணித்தான்
மற்றவர்க்காய்
வண்டாழங் கொண்டான் மதி. 45

Koviloor Digital Library

மதியால் அடுகின்ற தென்னும்மால் கூரும்
மதியாதே வைதுரப்பர் என்னும் —மதியாதே
மாதெய்வம் ஏத்தும் மறைக்காடா ஈதேகொல்
மாதெய்வங் கொண்ட வனப்பு. 46

வனப்பார் நிறமும் வரிவளையும் நாணும்
வனப்பார் வளர்சடையால் கொள்ள
—வனப்பாற்
கடற்றிரையு மீருமிக் கங்குல்வா யான்கட்
கடற்றிரையு மீருங் கனன்று. 47

கனன்றாழி நன்னெஞ்சே கண்ணுதலார்க்
காளாய்க்
கனன்றார் களிற்றுரிமால் காட்டக்—
கனன்றோரி
உடம்பட்ட நாட்டத்தர் என்னையுந்தன் ஆளா
உடம்பட்ட நாட்டன் உரு. 48

உருவியலுஞ் செம்பவளம் ஒன்னார் உடம்பில்
உருவியலுஞ் சூலம் உடையன் உருவியலும்
மாலேற்றான் நான்முகனும் மண்ணோடு
விண்ணும்போய்
மாலேற்றாற் கீதோ வடிவு. 49

வடிவார் அறப்பொங்கி வண்ணக்கச் சுந்தி
வடிவார் வடம்புனைந்தும் பொல்லா—
வடிவார்வேல்

Koviloor Digital Library

முக்கூடல் அம்மா முருகமருங் கொன்றையந்தார்
முக்கூட மாட்டா முலை. 50

முலைநலஞ்சேர் கானப்பேர் முக்கணான் என்னும்
முலைநலஞ்சேர் மொய்சடையான் என்னும் —முலைநலஞ்சேர்
மாதேவா என்று வளர்கொன்றை வாய்சோர
மாதேவா சோரல் வளை. 51

வளையாழி யோடகல மால்தந்தான் என்னும்
வளையாழி நன்னெஞ்சே காணில்—வளையாழி
வன்னஞ்சைக் கண்டமரர் வாய்சோர வந்தெதிர்ந்த
வன்னஞ்சக் கண்டன் வரில். 52

வரிநீல வண்டலம்பு மாமறைக்காட் டங்கேழ்
வரிநீர் வலம்புரிகள் உந்தி—வரிநீர்
இடுமணல்மேல் அந்நலங்கொண் டின்னாநோய் செய்தான்
இடுமணல்மேல் ஈசன் எமக்கு. 53

அக்காரம் ஆடரவம் நாண்அறுவை தோல் பொடிசாந்
தக்காரந் தீர்ந்தேன் அடியேற்கு—வக்காரம்

Koviloor Digital Library

பண்டரங்கன் எந்தை படுபிணஞ்சேர்
வெங்காட்டுப்
பண்டரங்கன் எங்கள் பவன். 54

பவனடிபார் விண்நீர் பகலோன் மதிதீப்
பவனஞ்சேர் ஆரமுதம் பெண்ணாண்
—பவனஞ்சேர்
காலங்கள் ஊழி அவனே கரிகாட்டிற்
காலங்கை ஏந்தினான் காண். 55

காணங்கை இன்மை கருதிக் கவலாதே
காணங்கை யாற்றொழுது நன்னெஞ்சே—
காணங்கை
பாவனையாய் நின்றான் பயிலும் பரஞ்சோதி
பாவனையாய் நின்ற பதம். 56

பதங்க வரையுயர்ந்தான் பான்மகிழ்ந்தான்
பண்டு
பதங்கன் எயிறு பறித்தான் பதங்கையால்
அஞ்சலிகள் அன்பாலும் ஆக்குதிகாண்
நெஞ்சேகூர்ந்
தஞ்சலிகள் அன்பாலும் ஆக்கு. 57

ஆக்கூர் பனிவாடா ஆவிசோர்ந் தாழ்கின்றேன்
ஆக்கூர் அலர்தான் அழகிதா—ஆக்கூர்

Koviloor Digital Library

மறையோம்பு மாடத்து மாமறையோ நான்கு
மறையோம்பு மாதவர்க்காய் வந்து. 58

வந்தியான் சிறினும் ஆழி மடநெஞ்சே
வந்தியா உள்ளத்து வைத்திராய்—வந்தியாய்
நம்பரனை யாடும் நளிர்புன் சடையானை
நம்பரனை நாள்தோறும் நட்டு. 59

நட்டமா கின்றன வொண்சங்கம் நானவன்பால்
நட்டமா நன்னீர்மை வாடினேன்—நட்டமா
டீயான் எரியாடி எம்மான் இருங்கொன்றை
ஈயானேல் உய்வ திலம். 60

இலமலரஞ் சேவடியார் ஏகப் பெறாரே
இலமலரே ஆயினும் ஆக—இலமலரும்
ஆம்பல்சேர் செவ்வாயார்க் காடாதே ஆடினேன்
ஆம்பல்சேர் வெண்தலையர்க் காள். 61

ஆளானம் சேர்களிறும் தேரும் அடல்மாவும்
ஆளானார் ஊரத்தான் ஏறாரும்-
தாளான்பொய்
நாடகங்க ளாட்டயரும் நம்பன் திருநாமம்
நாடகங்கள் ஆடி நயந்து. 62

Koviloor Digital Library

நயந்தநாள் யானிரப்ப நற்சடையான்
கொன்றை
நயந்தநாள் நன்னீர்மை வாட—நயந்தநாள்
அம்பகலஞ் செற்றான் அருளான் அநங்கவேள்
அம்பகலம் பாயும் அலர்ந்து. 63

அலங்காரம் ஆடரவம் என்புதோல் ஆடை
அலங்கார வண்ணற் கழகார்—அலங்காரம்
மெய்காட்டு வார்குழலார் என்னாவார்
வெள்ளேற்றான்
மெய்காட்டும் வீடாம் விரைந்து. 64

விரையார் புனற்கங்கை சேர்சடையான்
பொன்னார்
விரையார் பொழிலுறந்தை மேயான்—
விரையாநீ
றென்பணிந்தான் ஈசன் இறையான் எரியாடி
என்பணிந்தான் ஈசன் எனக்கு. 65

எனக்குவளை நில்லா எழிலிழந்தேன் என்னும்
எனக்குவளை நில்லாநோய் செய்தான்
இனக்குவளைக்
கண்டத்தான் நால்வேதன் காரோணத்
தெம்மானைக்
கண்டத்தான் நெஞ்சேகாக் கை. 66

Koviloor Digital Library

காக்கைவளை என்பார்ப்பார்க் கன்பாப்பா
னையாதே
காக்கைவளை யென்பார்ப்பான் ஊர்குரக்குக்
—காக்கைவளை
ஆடானை ஈருரியன் ஆண்பெண் அவிர்சடையன்
ஆடானை யான தமைவு. 67

அமையாமென் தோள்மெலிவித் தம்மாமை
கொண்டிங்
கமையாநோய் செய்தான் அணங்கே
—எமையாளும்
சாமத்த கண்டன் சடைசேர் இளம்பிறையன்
சாமத்தன் இந்நோய்செய் தான். 68

தாவக்கன் நக்க பிறையன் பிறைக்கோட்டுத்
தாவக் களிற்றுரியன் தண்பழனன்—தானத்
தரையன அரவரையன் ஆயிழைக்கும் மாற்கும்
அரையன் உடையான் அருள். 69

அருள்நம்பாற் செஞ்சடையன் ஆமாத்தூர்
அம்மான்
அருள்நம்பால் நல்கும் அமுதன்—அருள்நம்பால்
ஓராழித் தேரான் எயிறட்ட உத்தமனை
ஓராழி நெஞ்சே உவ. 70

Koviloor Digital Library

உவவா நறுமலர்கொண் டுத்தமனை உள்கி
உவவா மனமகிழும் வேட்கை—உவவா
றெழுமதிபோல் வாள்முகத் தீசனார்க் கென்னே
எழுமதிபோல் ஈசன் இடம். 71

இடமால் வலமாலை வண்ணமே தம்பம்
இடமால் வலமானஞ் சேர்த்தி—இடமாய
மூளா மதிபுரையும் முன்னிலங்கு
மொய்சடையான்
மூவா மதியான் முனி. 72

முனிவன்மால் செஞ்சடையான் முக்கணான்
என்னும்
முனிவன்மால் செய்துமுன் நிற்கும்—
முனிவன்மால்
போற்றார் புரமெரித்த புண்ணியன்தன்
பொன்னடிகள்
போற்றாநாள் இன்று புலர்ந்து. 73

புலர்ந்தால்யான் ஆற்றேன் புறனுரையும்
அஃதே
புலர்ந்தானூர் புன்கூரான்என்னும்—புலர்ந்தாய
மண்டளியன் அம்மான் அவர்தம் அடியார்தம்
மண்டளியன் பின்போம் மனம். 74

Koviloor Digital Library

மனமாய நோய்செய்தான் வண்கொன்றை தாரான்
மனமாய உள்ளார வாரான்—மனமாயப்
பொன்மாலை சேரப் புனைந்தான் புனைதருப்பைப்
பொன்மாலை சேர்சடையான் போந்து. 75

போந்தார் புகவணைந்தார் பொன்னேர்ந்தார் பொன்னாமை
போந்தார் ஒழியார் புரமெரித்தார்—போந்தார்
இலங்கோல வாள்முகத் தீசனாற் கெல்லே
இலங்கோலந் தோற்ப தினி. 76

இனியாரும் ஆளாக எண்ணுவர்கொல் எண்ணார்
இனியானஞ் சூணிருக்கைக் குள்ளான்—இனியானைத்
தாளங்கை யாற்பாடித் தாழ்சடையான் தானுடைய
தாளங்கை யால்தொழுவார் தாம். 77

தாமரைசேர் நான்முகற்கும் மாற்கும் அறிவரியார்
தாமரைசேர் பாம்பர் சடாமகுடர்—தாமரைசேர்

Koviloor Digital Library

பாணியார் தீர்ந்தளிப்பர் பாரோம்பு
நான்மறையார்
பாணியார் தீர்ந்தளிப்பர் பார். 78

பார்கால்வான் நீர்தீப் பகலோன் பனிமதியன்
பார்கோல மேனிப் பரனடிக்கே—பார்கோலக்
கோகரணத் தானறியக் கூறுதியே நன்னெஞ்சே
கோகரணத் தானாய கோ. 79

கோப்பாடி ஓடாதே நெஞ்சம் மொழிகூத்தன்
கோப்பாடிக் கோகரணங் குற்றாலம்—
கோப்பாடிப்
பின்னைக்காய் நின்றார்க்கிடம்கொடுக்கும்
பேரருளான்
பின்னைக்காம் எம்பெருமான் பேர். 80

பேரானை ஈருரிவை போர்த்தானை
ஆயிரத்தெண்
பேரானை ஈருருவம் பெற்றானைப்—பேராநஞ்
சுண்டானை உத்தமனை உள்காதார்க்
கென்றும்
உண்டாம்நா ளல்ல உயிர். 81

உயிராய மூன்றொடுக்கி ஐந்தடக்கி உள்ளத்
துயிராய ஒண்மலர்த்தாள் ஊடே—உயிரான்

Koviloor Digital Library

பரர்மனத்திதான் பாசுபதன் பாதம் பணியப்
பரர்மனமே ஆசைக்கட் பட்டு. 82

பட்டாரன் பட்டரங்கன் அம்மான் பரஞ்சோதி
பட்டார் எலும்பணியும் பாசுபதன்—பட்டார்ந்த
கோவணத்தான் கொல்லேற்றன் என்றென்று
நெஞ்சமே
கோவணத்து நம்பனையே கூறு. 83

கூற்றும் பொருளும்போற் காட்டியென்
கோல்வளையைக்
கூற்றின் பொருள்முயன்ற குற்றாலன்—கூற்றின்
செருக்கழியச் செற்ற சிவற்கடிமை நெஞ்சே
செருக்கழியா முன்னமே செய். 84

செய்யான் கருமிடற்றான் செஞ்சடையான்தேன்
பொழில்சூழ்
செய்யான் பழனத்தான்மூவுலகும்—செய்யாமுன்
நாட்டுணாய் நின்றானை நாடுதுப்போய்
நன்னெஞ்சே
நாட்டுணாய் நின்றானை நாம். 85

நாவாய் அகத்துளதே நாமுளமே நம்மீசன்
நாவாய்போல் நன்னெறிக்கண் உய்க்குமே—
நாவாயால்

Koviloor Digital Library

துய்க்கப் படும்பொருளைக் கூட்டுதும்
மற்றவர்க்காள்
துய்க்கப் படுவதாஞ் சூது. 86

சூதொன் றுனக்கறியச் சொல்லினேன்
நன்னெஞ்சே
சூதன் சொலற்கரிய சோதியான்—சூதின்
கொழுந்தேன் கமழ்சோலைக் குற்றாலம் பாடிக்
கொழுந்தே இழந்தேன் குருகு 87

குருகிளவேய்த் தோள்மெலியக் கொங்கைமார்
புல்கிக்
குருகிளையார் கோடு கொடாமே—குருகிளரும்
போதார் கழனிப் புகலூர் அமர்ந்துறையும்
போதாநின் பொன்முடிக்கட் போது. 88

போதரங்க வார்குழலார் என்னாவார்
நன்னெஞ்சே
போதரங்க நீர்கரந்த புண்ணியனைப்—
போதரங்கக்
கானகஞ்சேர் சோதியே கைவிளக்கா நின்றாடும்
கானகஞ்சேர் வாற்கடிமை கல். 89

கற்றானஞ் சாடுகா வாலி களந்தைக்கோன்
கற்றானைக் கல்லாத நாளெல்லாம்—கற்றான்

Koviloor Digital Library

அமரர்க் கமரர் அரர்க்கடிமை பூண்டார்
அமரர்க் கமரரா வார். 90

ஆவாமனிதர் அறிவிலரே யாதொன்றும்
ஆவார்போற் காட்டி அழிகின்றார்—ஆஆ
பகல்நாடிப் பாடிப் படர்சடைக்குப் பல்பூப்
பகல்நாடி ஏத்தார் பகர்ந்து. 91

பகனாட்டம் பாட்டயரும் பாட்டோடாட்
டெல்லி
பகனாட்டம் பாழ்படுக்கும் உச்சி—பகனாட்டம்
தாங்கால் தொழுதெழுவார் தாழ்சடையார்
தம்முடைய
தாங்கால் தொழுதல் தலை. 92

தலையாலங் காட்டிற் பலிதிரிவர் என்னும்
தலையாலங் காடர்தாம் என்னும்—தலையாய
பாகீ ரதிவளரும் பல்சடையீர் வல்விடையீர்
பாகீ ரதிவளரும் பண்பு. 93

பண்பாய நான்மறையான் சென்னிப்
பலிதேர்ந்தான்
பண்பாய பைங்கொன்றைத் தாரருளான்—
பண்பால்

Koviloor Digital Library

திருமாலு மங்கைச் சிவற்கடிமை செய்வான்
திருமாலு மங்கைச் சிவன். 94

சிவன்மாட் டுகவெழுதும் நாணும் நகுமென்னும்
சிவன்மேய செங்குன்றூர் என்னும்—
சிவன்மாட்டங்
காலிங் கனம்நினையும் ஆயிழையீர்
அங்கொன்றை
யாலிங் கனம்நினையு மாறு. 95

ஆறாவெங் கூற்றுதைத்தானைத்தோல்
போர்த்துகந்தங்
காறார் சடையீர்க் கமையாதே—ஆறாத
ஆனினத்தார் தாந்தம் அணியிழையி
னார்க்கடிமை
ஆனினத்தார் தாந்தவிர்ந்த தாட்டு. 96

ஆட்டும் அரவர் அழிந்தார் எலும்பணிவார்
ஆட்டும் இடுபலிகொண் டாரமரர்—ஆட்டுமோர்
போரேற்றான் கொன்றையான் போந்தான்
பலிக்கென்று
போரேற்றான் போந்தான் புறம். 97

புறந்தாழ் குழலார் புறனுரையஞ் சாதே
புறந்தாழ் புலிப்பொதுவுள் ஆடி—
புறந்தாழ்பொன்

Koviloor Digital Library

மேற்றளிக்கோன் வெண்பிறையான் வெண்சுடர்
போல்மேனியான்
மேற்றளிக்கோன் என்றுரையான் மெய். 98

மெய்யன் பகலாத வேதியன் வெண்புரிநூல்
மெய்யன் விரும்புவார்க் கென்ஞான்றும்—வெய்ய
துணையகலா நோக்ககலா போற்றகலா நெஞ்சே
துணையிகலா கூறுவா னூறு 99

நூறான் பயன் ஆட்டி நூறு மலர்சொரிந்து
நூறு நொடிவதனின் மிக்கதே—நூறா
உடையான் பரித்தவெரி உத்தமனை வெள்ளே
றுடையானைப் பாடலால் ஒன்று. 100

பரணதேவ நாயனார்

சிவபெருமான் திருவந்தாதி

பேச்சுப் பெருகுவதென் பெண்ணா ணலியென்று
பேச்சுக் கடந்த பெருவெளியைப்—பேச்சுக்
குரையானை யூனுக் குயிரானை யொன்றற்
குரியானை நன்னெஞ்சே யுற்று.

Koviloor Digital Library

இளம்பெருமானடிகள்

சிவபெருமான் திருமும்மணிக்கோவை

இவளப் பனிமா லிமையத்
தணங்குகற் றைச்சடைமே
லவளப்புத் தேளி ருலகிற்
கரசி யதுகொண்டென்னை
யெவளுக்கு நீநல்ல தியாரைமுன்
னெய்திற்றெற் றேயிதுகா
தவளப் பொடிச்செக்கர் மேனிமுக்
கண்ணுடைச் சங்கரனே. 1

அதிராவடிகள்

மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை

இக்கயங்கொண் மூவலயஞ் சூழேழ் தடவரைகள்
திக்கயங்கள் பேர்ந்தாடச் செங்கீரை—புக்கியங்கு
தேனாட வண்டாடச் செங்கீரை யாடின்றே
வானாடன் பெற்ற வரை. 1

Koviloor Digital Library

பட்டினத்துப் பிள்ளையார்

கோயினான்மணிமாலை

வாழ்வா கவுந்தங்கள் வைப்பா
கவுமறை யோர்வணங்க
ஆள்வாய் திருத்தில்லை யம்பலத்
தாயுன்னை யன்றியொன்றைத்
தாழ்வா ரறியாச் சடுலநஞ்
சுண்டிலை யாகிலன்றே
மாள்வார் சிலரையன் றோதெய்வ
மாக வணங்குவதே. 1

பட்டினத்துப் பிள்ளையார்

திருக்கழுமல மும்மணிக்கோவை

போதும் பெறாவிடிற் பச்சிலை
யுண்டு புனலுண்டெங்கும்
ஏதும் பெறாவிடில் நெஞ்சுண்டன்
றேயிணை யாகச்செப்புஞ்
சூதும் பெறாமுலை பங்கர்தென்
தோணிபு ரேசர்வண்டின்
தாதும் பெறாத வடித்தா
மரைசென்று சார்வதற்கே. 1

Koviloor Digital Library

பட்டினத்துப் பிள்ளையார்

திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

ஓராதே யஞ்செழுத்து முன்னாதே பச்சிலையு
நேராதே நீரு நிரப்பாதே— யாராயோ்
வெண்ணுவா ருள்ளத் திடைமருதர் பொற்பாத
நண்ணுவா மென்னுமது நாம். 1

வளையார் பசியின் வருந்தார்
பிணியின் மதனனம்புக்
கிளையார் தனங்கண் டிரங்கிநில்
லாரிப் பிறப்பினில்வந்
தளையார் நரகினுக் கென்கட
வார்பொன் னலர்ந்தகொன்றைத்
தளையா ரிடைமரு தன்னடி
யாரடி சார்ந்தவரே. 2

பட்டினத்துப் பிள்ளையார்

திருவேகம்பமுடையார் திருவந்தாதி

மெய்த்தொண்டர் செல்லு நெறியறி
யேன்மிக நற்பணிசெய்
கைத்தொண்டர் தம்மிலு நற்றொண்
டுவந்தில னுண்பதற்கே

Koviloor Digital Library

பொய்த்தொண்டு பேசிப் புறம்புற
மேயுன்னைப் போற்றுகின்ற
இத்தொண்ட னேன்பணி கொள்ளுதி
யோகச்சி யேகம்பனே. 1

உயிரா யினவன்பர் தேர்வரக்
கேட்டுமுன் வாட்டமுற்ற
பயிரார் புயல்பெற்ற தென்னநம்
பல்வளை பான்மைகளாந்
தயிரார்பால் நெய்யொடு மாடிய
வேகம்பர் தம்மருள்போற்
கையிரா வளையழுந் தக்கச்
சிறுத்தனா கார்மயிலே. 2

நம்பியாண்டார் நம்பி

விநாயகர் திருவிரட்டைமணிமாலை

என்னை நினைந்தடிமை
கொண்டென் னிடர்கெடுத்துத்
தன்னை நினையத்
தருகின்றான்—புன்னை

Koviloor Digital Library

விரசுமகிழ் சோலைவிய
　　னாரையூர் முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான். 1

நம்பியாண்டார் நம்பி

கோயிற் றிருப்பண்ணியர் விருத்தம்

பூந்தண் பொழில்சூழ் புலியூர்ப்
　　பொலிசெம்பொ னம்பலத்து
வேந்தன் தனக்கன்றி யாட்செய்வ
　　தென்னே விரிதுணிமேல்
ஆந்தண் பழைய அவிழையன்
　　பாகிய பண்டைப்பறைச்
சேந்தன் கொடுக்க வதுவுந்
　　திருவமிர் தாகியதே. 1

நல்வழி நின்றார் பகைநன்று
　　நொய்ய குறவிலென்னுஞ்
சொல்வழி கண்டனம் யாந்தொகு
　　சீர்த்தில்லை யம்பலத்து
வில்வழி தானவ ருரெரித்
　　தோன்வியன் சாக்கியனார்
கல்வழி நேர்நின் றளித்தனன்
　　காண்க சிவகதியே. 2

Koviloor Digital Library

பொன்னம் பலத்துறை புண்ணிய
　　னென்பர் புயன்மறந்த
கன்னன்மை தீரப் புனிற்றுக்
　　கலிகக்காமற் கன்றுபுல்கூர்
மன்னு மழைபொழிந் தீரறு
　　வேலிகொண் டாங்கவற்கே
பின்னு மழைதவிர்ந் தீரறு
　　வேலிகொள் பிஞ்ஞகனே. 3

வருவா சகத்தினின் முற்றுணர்ந்
　　தோனைவண் டில்லைமன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன்
　　செய்திருச்சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண்
　　டேயுமற் றப்பொருளைத்
தெருளாத வுள்ளத் தவர்கவி
　　பாடிச் சிரிப்பிப்பரே. 4

நம்பியாண்டார் நம்பி

திருத்தொண்டர் திருவந்தாதி

ஞானவா ரூரரைச் சேரரை
　　யல்லது நாமறியோ

Koviloor Digital Library

மானவ வாக்கை யொடுப்புக்
    கவரை வளரொளிப்பூண்
வானவ ராலு மருவற்
    கரிய வடகயிலைக்
கோனவன் கோயிற் பெருந்தவத்
    தோர்தங்கள் கூட்டத்திலே. 1

நம்பியாண்டார் நம்பி

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி

நகரங் கெடப்பண்டு திண்தேர்
    மிசைநின்று நான்மறைகள்
பகரங் கழலவ னைப்பதி
    னாறா யிரம்பதிகம்
மகரங் கிளர்கடல் வையந்
    துயர்கெட வாய்மொழிந்த
நிகரங் கிலிகலிக் காழிப்
    பிரானென்பர் நீணிலத்தே. 1

கடலன்ன பொய்ம்மைகள் செய்யினும்
    வெய்ய கடுநரகத்

Koviloor Digital Library

நிடநம னேவுதற் கெவ்விடத்
தானிருஞ் செந்தமிழாற்
றிடமன்னு மாமதிற் சண்பைத்
தலைவன்செந் தாமரையின்
வடமன்னு நீண்முடி யானடிப்
போதவை வாழ்த்தினமே. 2

மேனாட் டமரர் தொழவிருப்
பாரும் வினைப்பயன்கள்
தாநாட் டருநர கிற்றளர்
வாருந் தமிழர்தங்கள்
கோனாட் டருகர் குழாம்வென்ற
கொச்சையர் கோன்கமலப்
பூநாட் டடிபணிந் தாருமல்
லாத புலையருமே. 3

பாடிய செந்தமி ழாற்பழங்
காசு பரிசில்பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம்
பந்த னிறைபுகழா
னேடிய பூந்திரு நாவுக்
கரசோ டெழின்மிழலைக்
கூடிய கூட்டத்தி னாலுள
தாய்த்திக் குவலயமே. 4

Koviloor Digital Library

நம்பியாண்டார் நம்பி

திருச்சண்பை விருத்தம்

ஆறதே றுஞ்சடை யானருண்
மேவ அவனியர்க்கு
வீறதே றுந்தமி ழால்வழி
கண்டவன் மென்கிளிமாந்
தேறல்கோ தித்தூறு சண்பகந்
தாவிச் செழுங்கமுகின்
தாறதே றும்பொழிற் சண்பையர்
காவலன் சம்பந்தனே.

நம்பியாண்டார் நம்பி

ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக் கோவை

பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனுந் தோற்றோணி கண்டீர்
—நிறையுலகிற்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ். 1

Koviloor Digital Library

நம்பியாண்டார் நம்பி

ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம்

நீதியி னிறைபுகழ்
மேதகு புகலிமன்
மாதமிழ் விரகனை
யோதுவ துறுதியே

நம்பியாண்டார் நம்பி

திருநாவுக்கரசர் திருவேகாதசமாலை

பதிகமே ழெழுநூறு பகருமா கவியோகி
பரசுநா வரசான பரமகா ரணவீசன்
அதிகைமா நகர்மேவி யருளினா லமண்மூடர்
அவர்செய்வா தைகடரு மனகன்வார் கழல்சூடின்
நிதியரா குவர்சீர்மை யுடையரா குவர்வாய்மை
நெறியரா குவர்பாவம் வெறியரா குவர்சால
மதியரா குவரீசன் அடியரா குவர்வான
முடையரா குவர்பாரின் மனிதரானவர் தாமே.

நன்றுமாதர நவினுக் கரைசடி
நளினம்வைத் துயின் அல்லால்

Koviloor Digital Library

ஒன்று மாவது கண்டிலம் உபாயமற்
றுள்ளன வேண்டோமால்
என்றும் ஆதியும் அந்தமும் இல்லதோர்
இகபரத் திடைப்பட்டுப்
பொன்று வார்புகுஞ் சூழலிற் புகேம்புகிற்
பொறியிலைம் புலனோடே.

Koviloor Digital Library

சேக்கிழார்

அருளிச் செய்த

பெரியபுராணத் திரட்டு

(12 ஆந் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பாயிரம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 1

எடுக்கு மாக்கதை யின்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை யைந்துடைத் தாழ்செவி நீண்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்து ளிருத்துவாம். 2

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயு நாயன்மார் தூய சொன்மலர்ப்
பொதிநல னுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை யுலகினில் விளங்கி வெல்கவே. 3

Koviloor Digital Library

திருக்கூட்டச் சிறப்பு

கேடு மாக்கமுங் கெட்ட திருவினார்
ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்
கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.

தடுத்தாட்கொண்ட புராணம்

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
வளப்பருங் கரணங்க ணான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையா னாடுமா னந்த
வெல்லையி றனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

தெண்ணிலா மலர்ந்த வேணியா யுன்றன்
றிருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமா மென்று
கண்ணிலா னந்த வருவிநீர் சொரியக்
கைம்மல ருச்சிமேற் குவித்துப்
பண்ணினா னீடி யறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

Koviloor Digital Library

தில்லை வாழந்தணர்

ஆதியாய் நடுவு மாகி
யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித்
தோன்றிய பொருளு மாகிப்
பேதியா வேக மாகிப்
பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப்
பொதுநடம் போற்றி போற்றி. 7

கற்பனை கடந்த சோதி
கருணையே யுருவ மாகி
அற்புதக் கோல நீடி
யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந்
திருச்சிற்றம் பலத்து ணின்று
பொற்புட னடஞ்செய் கின்ற
பூங்கழல் போற்றி போற்றி. 8

இயற்பகையார்

சொல்லுவ தறியேன் வாழி
தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந் தருளி யென்னை
வழித்தொண்டு கொண்டாய் போற்றி

Koviloor Digital Library

எல்லையிலின்ப வெள்ள
மெனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடுஞ்
சேவடி போற்றி யென்ன. 9

விறன்மிண்டர்

ஞால முய்ய நாமுய்ய
நம்பி சைவ நன்னெறியின்
சீல முய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பாடச் செழுமறைக
ளோல மிடவு முணர்வரியா
ரடியா ருடனா முளதென்றால்
ஆல மமுது செய்தபிரா
னடியார் பெருமை அறிந்தாரார். 10

திருநாவுக்கரசர்

திருநாவுக் கரசுவளர்
திருத்தொண்டி னெறிவாழ
வருஞானத் தவமுனிவர்
வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ
லுறுகின்றேன் பேருலகி
லொருநாவுக் குரைசெய்ய
வொண்ணாமை யுணராதேன். 11

Koviloor Digital Library

நஞ்சமமு தாமெங்க
ணாதனடி யார்க்கென்று
வஞ்சமிகு நெஞ்சுடையார்
வஞ்சனையாம் படியறிந்தே
செஞ்சடையார் சீர்விளக்குந்
திறலுடையார் தீவிடத்தால்
வெஞ்சமண ரிடுவித்த
பாலடிசின் மிசைந்திருந்தார். 12

தண்டமிழ் மாலைகள் பாடித்
தம்பெரு மான்சர ணாகக்
கொண்ட கருத்தி லிருந்து
குலாவிய அன்புறு கொள்கைத்
தொண்டரை முன்வல மாகச்
சூழ்ந்தெதிர் தாழ்ந்து நிலத்தில்
எண்டிசை யோர்களுங் காண
இறைஞ்சி எழுந்தது வேழம். 13

இருவினைப் பாசமு
மலக்க லார்த்தலின்
வருபவக் கடலில்வீழ்
மாக்க ளேறிட
அருளுமெய் யஞ்செழுத்
தரசைக் கடயி

Koviloor Digital Library

லொருகன்மே லேற்றிட
ஒருரைக்க வேண்டுமோ. 14

தூயவெண் ணீறு துதைந்தபொன்
மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ்
சிந்தையு நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி
கண்ணும் பதிகச்செஞ்சொன்
மேயசெவ் வாயு முடையார்
புகுந்தனர் வீதியுள்ளே. 15

அருட்பெருகு தனிக்கடலு முலகுக் கெல்லா
மன்புசெறி கடலுமா மெனவு மோங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் ணிரண்டெனவும் புவன
முய்ய
இருட்கடுவுண் டவரருளு முலக மெல்லாம்
ஈன்றாடன் றிருவருளு மெனவுங் கூடித்
தெருட்கலைஞா னக்கன்றும் அரசுஞ் சென்று
செஞ்சடைவா னவர்கோயில் சேர்ந்தா
ரன்றே. 16

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந்
திருவடியு மதுர வாக்கிற்
சேர்வாகுந் திருவாயிற் றீந்தமிழின்
மாலைகளுஞ் செம்பொற் றாளே

Koviloor Digital Library

சார்வான திருமனமு முழவாரத்
தனிப்படையுந் தாமு மாகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து
பணிந்தேத்திப் பரவிச் செல்வார். 17

அல்லார் கண்டத் தண்டர்பிரான்
அருளால் பெற்ற படிக்காசு
பல்லா றியன்ற வளம்பெருகப்
பரம னடியா ரானார்கள்
எல்லாம் எய்தி யுண்கவென
இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லாற் சாற்றி சோறிட்டார்
துயர்கூர் வறுமை தொலைத்திட்டார். 18

காரைக்காலம்மையார்

இறவாத வின்ப வன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டு மீண்டும்
பிறப்புண்டே லுன்னை யென்று
மறவாமை வேண்டு மின்னும்
வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ யாடும் போதுன்
னடியின்கீ ழிருக்கவென்றார். 19

Koviloor Digital Library

திருஞான சம்பந்தர்

வேதநெறி தழைத்தோங்க
மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப்
புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித்
திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
திருத்தொண்டு பரவுவாம். 20

சிவனடியே சிந்திக்குந்
திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும்
பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞான
முணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர்
தாமுணர்ந்தா ரந்நிலையில். 21

அண்ண லார்தமக் களித்தமெய்ஞ் ஞானமே
யானவம் பலமுந்தம்
உண்ணி றைந்தஞா னத்தெழு மானந்த
வொருபெருந் தனிக்கூத்துங்
கண்ணின் முன்புறக் கண்டுகும் பிட்டெழுங்
களிப்பொடுங் கடற்காழிப்

Koviloor Digital Library

புண்ணி யர்கொழுந் தனையவர் போற்றுவார்
புனிதரா டியபொற்பு. 22

உணர்வி னேர்பெற வருஞ்சிவ போகத்தை
யொழிவின்றி யுருவின்கண்
அணையு மைம்பொறி யளவினு மெளிவர
வருளினை யெனப்போற்றி
இணையில் வண்பெருங் கருணையே யேத்திமுன்
னெடுத்தசொற் பதிகத்திற்
புணரு மின்னிசை பாடின ராடினர்
பொழிந்தனர் விழிமாரி. 23

சிந்தையிடை யறாவன்புந்
திருமேனி தனிலசைவும்
கந்தைமிகை யாங்கருத்துங்
கையுழவா ரப்படையும்
வந்திழிகண் ணீர்மழையும்
வடிவிற்பொலி திருநீறும்
அந்தமிலாத் திருவேடத்
தரசுமெதிர் வந்தணைய. 2

கண்டகவு ணியக்கன்றுங்
கருத்திற்பரவு மெய்க்காதல்
தொண்டர்திரு வேடநேரே
தோன்றியதென் றுதொழுதே

Koviloor Digital Library

அண்டரும்போற் றவணைந்தங்
கரசுமெதிர் வந்திறைஞ்ச
மண்டியவார் வம்பெருக
மதுரமொழி யருள்செய்தார். 25

ஞானத்தின் திருவுருவை
நான்மறையின் றனித்துணையை
வானத்தின் மிசையன்றி
மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச்
செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தினெழுபிறப்பைக்
கண்களிப்பக் கண்டார்கள். 26

சாற்று மெய்ப்பொருள் தருந்திரு
முறையினைத் தாமே
நீற்று வண்கையால் மறித்தலும்
வந்துநேர்ந் துளதால்
நாற்ற டம்புயத் தண்ணலார்
மருவுநள் ளாறு
போற்று மப்பதி கம்போக
மார்த்தபூண் முலையாள். 27

இட்ட ஏட்டினில் எழுதிய
செந்தமிழ்ப் பதிகம்

Koviloor Digital Library

மட்டு லாங்குழல் வனமுலை
மலைமகள் பாகத்
தட்ட மூர்த்தியைப் பொருளென
உடைமையா லமர்ந்து
பட்ட தீயிடைப் பச்சையாய்
விளங்கிய தன்றே. 28

திருவுடைப் பிள்ளை யார்தம்
திருக்கையா லிட்ட ஏடு
மருவிய பிறவி யாற்றில்
மா தவர் மனஞ்சென் றாற்போல்
பொருபுனல் வைகை யாற்றில்
எதிர்த்துநீர் கிழித்துப் போகும்
இருநிலத் தோர்கட் கெல்லாம்
இதுபொரு ளென்று காட்டி. 29

தம்மை யுள்ளவா றறிந்தபின்
சங்கரற் கடிமை
மெய்ம்மை யேசெயும் விருப்பினின்
மிக்கதோ ரன்பாற்
பொய்ம்மை நீக்கிமெய்ப் பொருளிது
வெனக்கொள்ளு முள்ளச்
செம்மை யேபுரி மனத்தினார்
சிவநேச ரென்பார். 30

Kbviloor Digital Library

மண்ணி னிற்பிறந் தார்பெறும்
　　பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை
　　அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப்
　　பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனின் உலகர்முன்
　　வருகென உரைப்பார். 31

சாக்கியர்

செய்வினையுஞ் செய்வானு
　　மதன்பயனுஞ் சேர்ப்பானு
மெய்வகையா னான்காகும்
　　விதித்தபொரு ளெனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி
　　யல்லவற்றுக் கில்லையென
உய்வகையாற் பொருள்சிவனென்
　　றருளாலே யுணர்ந்தறிந்தார். 32

காணாத அருவினுக்கும்
　　உருவினுக்குங் காரணமாய்

Koviloor Digital Library

நீணாகம் அணிந்தார்க்கு
நிகழ்குறியாஞ் சிவலிங்கம்
நாணாது நேடியமால்
நான்முகனுங் காணநடுச்
சேணாருந் தழற்பிழம்பாய்த்
தோன்றியது தெளிந்தாராய். 33

பத்தராய்ப்பணிவார்

நின்றாலு மிருந்தாலுங்
கிடந்தாலு நடந்தாலும்
மென்றாலுந் துயின்றாலும்
விழித்தாலு மிமைத்தாலும்
மன்றாடு மலர்ப்பாத
மொருகாலு மறவாமை
குன்றாத வுணர்வுடையார்
தொண்டராங் குணமிக்கார். 34

மங்கையர்க்கரசியார்

மங்கையர்க்குத் தனியரசி யெங்க டெய்வம்
வளவர் திருக் குலக்கொழுந்து
வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை

Koviloor Digital Library

எங்கள்பிரான் சண்பையர்கோ னருளி னாலே
யிருந்தமிழ்நா டுற்றவிடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் டிரு நீறு பரப்பினாரைப்
போற்றுவார் கழலெம்மாற் போற்ற லாமே

வெள்ளானைச் சருக்கம்

உரைப்பா ருரையென் றெடுத்ததிருப்
பாட்டு முடியா முன்னுயர்ந்த
வரைப்பான் மையில்நீள் தடம்புயத்து
மறலி மைந்தன் உயிர்கொணர்ந்து
திரைப்பாய் புனலின் முதலைவயிற்
றுடலிற் சென்ற ஆண்டுகளும்
தரைப்பால் வளர்ந்த தெனநிரம்ப
முதலை வாயில் தருவித்தான். 33

என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம். 37

திருச்சிற்றம்பலம்

A. No. 12522